


அவுஸ்திரேலியாவில் இலங்கை கிரிக்கெட் அணி விளையாடும் மைதானத்திற்கு முன்பாக தமிழர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.


# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 455 பிலவ வருடம், மாசி மாதம் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (15.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 13, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## மயிலிட்டி துறைமுக 2ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்



02 பக்கம்

# வரிச்சலுகை அல்லது விலையேற்றம் அவசியம்; எரிபொருள் குறித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

02 பக்கம்

## நீதிமன்ற உத்தரவையும் மீறி

# சுகாதாரத்துறை போராட்டம்!

### சட்டத்தை மதிக்காதோரை கைதுசெய்ய கோருகிறார் அமைச்சர் சந்திரசேன

•யோ.தர்மராஜ்

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துவரும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் நீதிமன்ற கட்டளையையும் மீறி நேற்று எட்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

இதனால், நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன், நீதிமன்ற தடை உத்தரவை மதிக்காத தொழிற்சங்க உறுப்பினர்களை கைதுசெய்ய வேண்டும் என அமைச்சர்... 02 பக்கம்

## பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு வழக்கு

### வைத்தியருக்கு விளக்கமறியல்

பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப் பட்டமை தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வைத்தியர் ஷர்லி ஹேரத் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஷர்லி ஹேரத் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச நீதிமன்றுக்கு செல்வோம்

### அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம்

தமது பணிப்புறக்கணிப்பு உரிமையை இலங்கை அரசாங்கம் நசுக்குவதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றுக்கு செல்லப்போவதாக அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்வதற்கான முன்னெடுப்பு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். 02 பக்கம்

## ஊடகர் சமுதித்தவின் வீட்டின் மீது தாக்குதல்



02 பக்கம்


## சிவில் செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக்க கைது

சிவில் செயற்பாட்டாளரான ஷெஹான் மாலக்க கமகே, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்தார் என்று கூறி சி.ஐ.டியினர் விசாரணைகளை நடத்திவந்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேர்த்திருவிழாவிற்கு உச்சக்கட்ட பொலிஸ் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு

### இனந்தெரியாத இருவர் கோவிலை நோட்டமிட்டு சென்றதால் அதிகபட்ச பந்தோபஸ்து



மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், தேர் வீதியுலாவை 7 முதல் 8 மணிநேரத்திற்குள் வரையறுக்க பொலிஸ் தரப்பிலிருந்து கோவில் நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆலய மகோற்சவம் தற்போது நடைபெற்றுவரும் நிலையில்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



இனி தமிழ்ச் சாப்பாட்டை நல்லா சாப்பிட்டுப் போட்டு அந்தாளுக்கு கிரிக்கெட் விளையாட முடியாம போகப்போகுது....

## பயங்கரவாதத் தடுப்பு திருத்தச் சட்டமூலம் சபை ஒழுங்குப் புத்தகத்தில் சேர்ப்பு

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த 11ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்பு திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 02 பக்கம்

## இறுதிக்கட்ட போரின்போது பிரித்தானியா சேகரித்த தகவல்கள் பொய்யானவையா?

### வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கேள்வி



இலங்கையின் அரசியல் தலைவர்கள் மற்றும் படையினர் மீது போர்க்குற்றங்களை சுமத்துவதற்கு பிரித்தானியா அதீத முயற்சிகளை மேற்கொண்டதாக வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் இடம்பெற்ற, தெரிவு செய்யப்பட்ட படை அதிகாரிகளின் நிகழ்வு ஒன்றில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். 02 பக்கம்

## கோப் குழு முன்னிலையில் மேலும் சில நிறுவனங்களுக்கு அழைப்பு

02 பக்கம்

## பயங்கரவாத தடைச்சட்ட திருத்தச் சரத்துகள், அரசியலமைப்பிற்கு முரணென தீர்ப்பளிக்குக!

### மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தினால் விசேட மனுத் தாக்கல்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலத்தின் சில சரத்துகள், அரசியலமைப்பிற்கு முரணானதென தீர்ப்பளிக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் விசேட மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்தச் சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்படவேண்டுமாயின், நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் அல்லது... 02 பக்கம்

### உஷ்



இந்திய பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கையில் இடம்பெறும் 'பிம்ஸ்ரெக்' உச்சி மாநாட்டில் பங்கேற்க கொழும்பு வரவுள்ளார்.

புதுடில்லியிலிருந்து அவர் நேரடியாகவே விமானம் மூலம் பலாலிக்கு வந்து அங்கிருந்து கொழும்பு வர திட்டமிடுவதாக தகவல்.

ஆனால் இலங்கை பாதுகாப்பு தரப்பில் அதற்கு இன்னும் பச்சைக்கொடி காட்டப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட தமிழ் கலாசார நிலையத்தை திறந்து வைத்த பின்னர் அங்கிருந்து கொழும்புக்கு வர திட்டமிடுகிறார் மோடி..ஆனால் இலங்கை அரசு அதை விரும்பவில்லையாம் .

## அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரரின் 'தமிழ்' திருமண அழைப்பு



அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் கிளன் மெக்ஸ்வெல் தமிழகத்தைப் பூர்வீகமாகக்கொண்ட பெண் ஒருவரை திருமணம் செய்துகொள்ளவிருக்கிறார்.

இவர்களின் திருமணத்துக்கான திருமண அழைப்பிதழ் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டுள்ளது. 02 பக்கம்

## தீவுப் பகுதி பொதுப் போக்குவரத்து பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை

### கை விரித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர்



தீவுப் பகுதிக்கான பொதுப் போக்குவரத்தில் ஏற்படும் தடைகள் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் பலதரப்பட்ட கூட்டங்களை நடத்தியும் அதற்கு தீர்வு கிடைக்கவில்லை - என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவக பொதுப் போக்குவரத்தில் அடிக்கடி படகுகள் பழுதடைவதன் காரணத்தினால் தடைப்படுகின்றது. அதேநேரம் பொது மக்கள் மிகவும் ஆபத்தான கடல் பயணங்களை... 02 பக்கம்






# இறக்குமதியான ரயில் பெட்டிகளின் தொழில்நுட்பக் கோளாறுகளை உடன் நிவர்த்தி செய்து போக்குவரத்துக்குப் பயன்படுத்த நடவடிக்கை

- ★ போக்குவரத்துத் துறையின் புதிய வருவாய் முறைமைகள் குறித்து கவனம்
- ★ முந்தைய அரசாங்கத்தால் முறைசாரா முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்குப் பயிற்சி
- ★ மின்சார பஸ்களை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வு
- ★ பொதுமக்களுக்குத் தரமான போக்குவரத்துச் சேவையை வழங்க ஜனாதிபதி கோட்டா பணிப்பு

முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின் போது கொள்வனவுக்கான கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இறக்குமதி செய்யப் பட்ட ரயில் பெட்டிகளின் தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்து, அவற்றை உடனடியாகப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்து, போக்குவரத்து ஒழுங்குபடுத்தல், பஸ் சேவைகள், ரயில் மற்றும் மோட்டார் தொழிற்றுறை அமைச்சுகளின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (14) மாலை இடம்பெற்ற போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தின்போது, 160 ரயில் பெட்டிகளுக்கான கொள்வனவுக் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 120 ரயில் பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளபோதிலும், அவற்றில் 40 பெட்டிகள் மாத்திரமே போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்படாத ஏனைய பெட்டிகளை உடனடியாகச் சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு, இக்கூட்டத்தின் போது ஜனாதிபதி , உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்துச் சேவையில் இணைக்கக்கூடிய வகையில் இருப்பினும் சேவைக்குப் பயன்படுத்தப்படாதுள்ள பஸ்களைப் பழுதுபார்த்து, குறுந்தூரச் சேவைகளுக்குப் பயன்படுத்துமாறும் அதன் மூலம், கிராமிய மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு கிட்டுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அனைத்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களுடன் நட்புணர்வுடன் பணியாற்றுவதன் மூலம், போக்குவரத்துக் கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, மக்களை ஒடுக்கும் தொழிற்சங்கப் போராட்டங்களை நிறுத்துவதற்கு, அனைத்துத் தரப்பினரும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

போக்குவரத்துச் சேவையை முறையாகக் கொண்டுசெல்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். தொழில்நுட்பம் மற்றும் விதிமுறைகளை நெறிப்படுத்துவதன் மூலம் பல சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள முடியும். அதேபோன்று, உல்லாசப் பயணிகளை இலக்குவைத்து, சுற்றுலாப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் பயணிகள் சேவையை முன்னெடுக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தற்போது சேவையில் அதிகப்படியான ஊழியர்கள் காணப்படுவது பாரிய பிரச்சினையாக உள்ளதென்று அதிகாரிகள் எடுத்துரைத்தபோது, எந்தவொரு ஊழியரையும் பணிநீக்கம் செய்யாது, உரிய பயிற்சிகளை வழங்கி, அவர்களிடமிருந்து அதிகபட்ச சேவையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான முறைமையொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் பிரச்சினை மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி, எதிர்வரும் காலத்தில் பொதுப் போக்குவரத்துக்காக 100 மின்சார பஸ்களை இறக்குமதி செய்வதற்குள்ள இயலுமை தொடர்பிலும், இதன்போது நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

போக்குவரத்துச் சேவை தொடர்பில் பொதுமக்களின் குற்றச்சாட்டுகள் குறித்து அவதானம் செலுத்தி, தரமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு அனைவரும் உழைக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பஸ் கட்டணத்தை அதிகரித்து, பயணிகளை சிரமத்துக்கு உள்ளாக்க அரசாங்கம் தயாராக இல்லை என்றும் போக்குவரத்துத் துறையில் காணப்படும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுத்து நிறுத்துவதன் மூலம், போக்குவரத்துச் சேவையில் தற்போது காணப்படும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றும், நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர்களான பெசில் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், அமைச்சின் செயலாளர் மொன்டி ரணதுங்க, இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.டீ.எல்.கே.டீ. அல்விஸ், இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, ரயில் பொது முகாமையாளர் ஜே.ஐ.டீ.ஜயசுந்தர ஆகியோர் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# ஐயாயிரம் ரூபா இலஞ்சம்பெற்ற சுகாதார பரிசோதகர் கைது

பேராதெனிய சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளரிடமிருந்து 05ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த பொதுச் சுகாதார பரிசோதகர் தொடர்ச்சியாக இலஞ்சம் பெற்றுக்கொள்வதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளரால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே அதிகாரிகளால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நீதிமன்ற உத்தரவையும்...

எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட 07 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 07 ஆம் திகதி தொடக்கம் சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. அதன்படி, இலங்கை தாதியர் சங்கம், சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கம், நிறைவுகாண் வைத்திய சேவை சங்கம் மற்றும் இடைநிலை வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட 18 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன. இந் நிலையில், இந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று (14) எட்டாவது நாளாகவும் தொடர்ந்தது. இதனால், நாளுக்கு நாள் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுப்பதுடன், மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாது தடுமாறி வருகின்றனர்.

இந்த நிலையில், அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்துக்கு எதிரான தடை உத்தரவை பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்தபோது, அவர் கலந்துரையாடல்களைத் தவிர்த்து, தொழிற்சங்க நடவடிக்கைக்கு தொழிற்சங்கங்களை தள்ளி, அடக்குமுறைக்கு தள்ளப்படுவதாக தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

பெப்ரவரி 07ஆம் திகதி காலவரையற்ற வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பத்தை சுகாதார அமைச்சு வழங்கத் தவறியுள்ளதுடன், எனினும் 08ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்த அவகாசம் வழங்கியது. எனினும், கடந்த 10ஆம் திகதி நீதிமன்ற உத்தரவை கொண்டுவந்து 12ஆம் திகதி அத்தியாவசிய சேவைகள் தொடர்பான வர்த்தமானியை வெளியிட்டுள்ளது.

எனினும், இந்த தடைகளையும் மீறி நேற்று (14) எட்டாவது நாளாக சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டம் தொடர்ந்தது.

எனினும், தொழிற்சங்கப் போராட்டத்தால் பொது மக்கள் பாதிப்புக்குள்ளாகுவதால் நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்ததாகவும் அதனை மதிக்காது, தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை கைது செய்ய வேண்டும் என அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். எது எவ்வாறாயினும், இந்தப் போராட்டம் குறித்து முக்கிய தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் தயாராகுவதாகவும் அறிய முடிந்தது.

இதேவேளை, நேற்று சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் உரிய இணக்கப்பாடு எட்டப்படாமையினால் போராட்டத்தை தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் யோசனை ஒன்றை முன்வைப்பதாக அமைச்சர் கெஹேலிய உறுதியளித்துள்ளார்.

## பயங்கரவாத தடைச்சட்ட...

வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனால் சட்டமூலத்தின் 02, 03, 04, 06, 10, 11 மற்றும் 12 ஆகிய உறுப்புரைகள் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

## அவுஸ்திரேலிய கிரிக்கெட்...

சென்னை மேற்கு மாம்பலத்தை பூர்வீகமாகக் கொண்டவரும் அவுஸ்திரேலியாவில் வளர்ந்தவருமான வினி ராமனுக்கும், கிளன் மெக்ஸ்வெல்லுக்கும் 2020ஆம் ஆண்டு இந்திய முறைப்படி நிச்சயதார்த்தம் நடந்தது.

அதன்பின்னர், கொரோனா காரணமாக பிற்போடப்பட்ட இவர்களது திருமணம் அடுத்த மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், வினிராமனின் திருமணத்தையொட்டி அவரது பெற்றோரால் அச்சடிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த தமிழ் அழைப்பிதழ் சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களில் அதிகமாக பகிரப்பட்டு வருகின்றன.

## மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்...

இனந்தெரியாத இருவர், சில தினங்களுக்கு முன்னர் கோவிலுக்குச் சென்று நோட்டமிட்டதாகவும் அங்கு பாதுகாப்பில் இருந்த பொலிஸார் இது குறித்து ஆராய முற்பட்டபோது அந்த நபர்கள் சென்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இதனையடுத்து, 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் தேர் வீதியுலாவை 8 மணி நேரத்துக்குள் வரையறுக்க பொலிஸ் தரப்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய 17 ஆம் திகதி மாலை வீதியுலா புறப்படும் தேர் மறுநாள் காலை கோயிலை வந்தடையவேண்டும். அதேபோல் வீதிகளில் மக்கள் அர்ச்சனை வழங்குவது இம்முறை தவிர்க்கப்படவுள்ளது. வெளியில் உள்ள இரண்டு கோயில்களில் மட்டும் பூஜைகளை நடத்தி தேர் கோயிலுக்கு திரும்பவுள்ளதாக தெரிகிறது.

கொரோனா பரவல் சூழ்நிலை காரணமாக சுகாதாரக் கட்டுப்பாடுகளை மதித்து தேர் வீதியுலாவை கோவில் நிர்வாகம் முறையாக ஏற்பாடு செய்திருந்தது.

ஆனால், புதிதாக பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனையையும் கேட்டு நடக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இனந்தெரியாத நபர்களின் வருகையினையடுத்து, கோவிலின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைகளை ஏற்று அதற்கு ஒத்துழைத்து கொரோனா சுகாதாரக் கட்டுப்பாடுகளையும் பின்பற்றி தேர்த்திருவிழாவை நடத்த உத்தேசித்துள்ளதாக கோவில் நிர்வாகத் தரப்பில் சொல்லப்பட்டது.

## மயிலிட்டி துறைமுக...

யாழ்ப்பாணம் – மயிலிட்டி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

துறைமுகத்தின் பகுதிகளை ஆழ, அகலமாக்குதல், படகுகளை கட்டிவைக்க ஏற்றவாறு ஆழமாக்கி குறித்த பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டமிடல் மற்றும் தொழில் செய்யும் மீனவர்கள் தங்குவதற்கான வசதி, சிற்றுண்டிச்சாலை, படகுகள் கட்டுவதற்கும் திரும்பிச் செல்வதற்கான பாதைகளை அமைத்தல், துறைமுகத்தை அழகுபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வருட இறுதிக்குள் இரண்டாம் கட்ட பணிகள் முடிவடைந்து மூன்றாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கும் என டக்ளஸ் தேவானந்தா இதன்போது குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பான மாதிரிப் படம் காட்டப்பட்டு திட்ட முகாமையாளரால் அது தொடர்பிலேயே அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, அமைச்சின் செயலாளர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தீவுப் பகுதி பொதுப்...

மேற்கொள்ளும்போது பயண நிலையானது மிகவும் அபாயமாக காணப்படுகிறது.

தீவகத்துக்கான பொதுப் போக்குவரத்து தொடர்பில் பல தடவைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம். இந்த தீவக போக்குவரத்துக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பாக இருந்து அவர்கள் படகுகள், பாதை மற்றும் குமுதினி படகு போன்றவற்றை இயக்கி வருகிறார்கள். குமுதினி படகு பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதேபோல நெடுந்தாரகை, வடதாரகை சமுத்திரா போன்ற படகுகள் பிரதேச சபையினர் மற்றும் கூட்டுறவு அமைப்பினரால் இயக்கப்படுகிறது.

அதேவேளை, வடதாரகை இலங்கை கடற்படையினரால் இயக்கப்படுகின்றது. இந்த படகுகள் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக நெடுந்தீவுக்கான போக்குவரத்து அடிக்கடி தடைப்படுகிறது.

ஏனைய தீவுகளில் படகு பாதை தற்பொழுது சீரமைக்கப்பட்டு பயணம் தொடர்ந்தாலும் இயந்திரம் பழுதடைந்த நிலைமையில் பாதை இயக்க முடியாது இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. இன்றும் கூட பொது மக்கள் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர். அதாவது இந்தப் படகு பாதையை சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

அண்மைக்காலங்களில் ஊடகங்களின் மூலமும் இந்தப் பிரச்சினைகள் வலுப்பெற்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் ஏனைய திணைக்களங்களுடனும் வடமாகாண ஆளுநருடன் இணைந்து சகல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தி இது பற்றி ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இருந்தபோதிலும், சில நடைமுறை சிக்கல்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் காரணமாக அவற்றை முழுமையாக அமுல்படுத்துவதில் சற்று சிரமம் காணப்படுகின்றது. இருந்தபோதிலும், வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்தப் படகு போக்குவரத்து சேவை முழுவதையும் பொறுப்பெடுத்து அங்கு தீவகம் உள்ளடங்கலாக ஒரு மத்திய நிலையத்தினை அமைத்து தகுதிவாய்ந்த பொறியியலாளரின் கீழே அந்தப் படகு பாதை சேவைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கு உரிய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்குரிய முன்மொழிவுகள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரிடம் விடுத்துள்ளோம். அது தொடர்பில் உரிய அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம்.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை அமைச்சே இதற்கு முடிவெடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் சில நடைமுறை சிக்கல்கள், சட்ட ஏற்பாடுகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் முடிவெடுத்து ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய கடப்பாடு நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் போக்குவரத்து அமைச்சுக்கு காணப்படுகின்றது.

இதனை துரிதப்படுத்தி பொதுமக்களுக்குரிய சேவையினை சீராக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இருந்தபோதிலும், தாமதமடைவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பொதுமக்கள் இதனால் மிகவும் அவதியுறும் நிலையில் காணப்படுகின்றனர்.

இதனை செயற்படுத்த ஒரு விசேட கலந்துரையாடல் மூலம் இதனை மேல்மட்டத்துடன் கலந்துரையாடி ஒரு தீர்மானம் எடுப்பதற்குரிய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எனினும், மாவட்ட மட்டத்தில் பல தடவைகள் கூட்டங்களை நடத்தியும் அதற்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை. படகுகள் திருத்தப்படாமைக்கு படகின் தன்மையே காரணம். அதாவது திருத்தக்கூடிய இடம் வடக்கில் இல்லை. அதனை பிறிதொரு இடத்துக்கு கொண்டு சென்றே திருத்தியமைக்க வேண்டும்.

இந்த இரண்டும் பிரதானமான பிரச்சினையாக காணப்படுகின்றது. அதற்கு நாங்கள் மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

எனவே, மாற்றீடாக பயன்படுத்த நமக்கு போதியளவு படகு இல்லை என்பதும் ஒரு காரணமாக காணப்படுகின்றது.

மாற்றீடான படகுகள் வழங்கும் பட்சத்தில் அதற்குரிய எரிபொருள் வழங்குவதிலும் ஒரு இடர்பாடு காணப்படுகின்றது என்றார்.

## இறுதிக்கட்ட போரின்போது...

இந்த சந்தர்ப்பத்தில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் மற்றும் பேரவையில் இலங்கை தொடர்பான முக்கிய குழுவின் தலைமை நாடாக செயற்படும் பிரித்தானியாவின் இந்த முயற்சி குறித்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், ஜெனீவாவில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பமாகவுள்ள 49ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கையின் விடயம் முக்கியமானதாக இருக்கும்.

வன்னியில் 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கைப் படையினர் சுற்றிவளைத்தபோது பல தகவல்களை, அப்போது இலங்கையில் பிரித்தானிய உயர்ஸ்தானிகரத்தில் கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் என்டனி காஸ் சேகரித்தார்.

எனினும், போர்க்குற்றச்சாட்டுகளின்போது பிரித்தானியா தமது சொந்தப் பணியாளரின் தகவல்களையே கேள்விக்குட்படுத்தியுள்ளதா?

இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயங்களில் அதிக அக்கறை கொண்டுள்ள பிரித்தானியர்களுக்கு அவர்களின் சொந்த பணியாளர்கள் அனுப்பிய தகவல்கள் உதவியிருக்கும். சர்வதேச சட்டங்களின்படி இலங்கையின் படையினரை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியாது என்றும் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பயங்கரவாதத் தடுப்பு...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், இந்த புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் ஒருவரைத் தடுத்து வைக்கும் காலம் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக குறைக்கப்படும்.

இதற்கிடையில், புதிய திருத்தங்கள் சட்டத்தின் கீழ் கைதிகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக தடுப்புக்காவல் நிலையங்களுக்குச் செல்ல நீதவானை அனுமதிக்கும். புதிய திருத்தச் சட்டம் ஒரு சட்டத்தரணி தடுப்பு மையத்துக்குச் செல்வதற்கும், கைதிகள் தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் வாய்ப்பளிக்கிறது.

சந்தேகநபர்கள் சித்திரவதைக்கு உள்ளாகவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்கு சாசனத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்துவதற்கான வாய்ப்பையும் புதிய திருத்தம் வழங்குகிறது.

இதேவேளை, தொழிலாளர் இழப்பீட்டுத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தின் சமீபத்திய ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் அது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## இலங்கை அரசாங்கத்துக்கு...

இலங்கையில் தொழிற்சங்க கட்டளைச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டங்களான ஒழுங்கமைக்கும் உரிமை உள்ளது.

எனினும், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தியதன் மூலம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தமது உரிமையை அரசாங்கம் நசுக்கியுள்ளது என்றுஅவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நான்கு மாதங்களுக்கும் மேலாக பலமுறை கோரிக்கை விடுத்தும் தாதியர்களின் குறைகளை நிவர்த்திக்க சுகாதார செயலாளர் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள் முயற்சிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைக்கு நீதிமன்ற உத்தரவை மதித்து அரச தாதியர் சங்கம் தமது பணிப்புறக்கணிப்பை விலக்கிக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 65ஆயிரம் சுகாதாரத்துறை பணியாளர்களால் கடந்த 08 நாட்களாக பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதனால் மருத்துவமனைகளின் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

## வரிச்சலுகை அல்லது...

எரிபொருளுக்கான வரிச்சலுகை அல்லது எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருட்களின் தற்போதைய விலையினை தொடர்ந்தும் பேணுவதால், ஏற்படும் பாரிய நட்டத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே சுமப்பதாக எரிசக்தி அமைச்சு தெரிவித் துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் நிதியின்மையினால் எதிர்வரும் காலங்களில் டொலரை பெற்றுக்கொள்வதும் சவாலானதாக மாறியுள்ளதாக எரிசக்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. டொலர் இன்மையினால் எதிர்காலத்தில் நாட்டுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்படுமென அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந் நிலைமையை கருத்திற்கொண்டு உடனடியாக எரிபொருளுக்காக வரிச்சலுகையை வழங்க வேண்டும் அல்லது எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே, லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தினால் கடந்த 06 ஆம் திகதி நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டது.

அதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 07 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதுடன் அதன் புதிய விலை 184 ரூபா என அறிவிக்கப்பட்டது.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தினால் ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 03 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 213 ரூபா என தெரிவிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தினால் ஒரு லீற்றர் டீசலின் விலையும் 03 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

அதற்கமைய, லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தில் ஒரு லீற்றர் டீசலின் புதிய விலை 124 ரூபா என அறிவிக்கப்பட்டது.

## கோப் குழு முன்னிலையில்...

எதிர்வரும் நாட்களில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) முன்னிலையில் மேலும் சில அரசாங்க நிறுவனங்கள் அழைக்கப்பட்டுள்ளன. கடந்த கூட்டத்தொடரில் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இதற்கமைய எதிர்வரும் 23ஆம் திகதி புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகமும், 24ஆம் திகதி இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனமும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அபிவிருத்தி லொத்தர் சபை மார்ச் 10ஆம் திகதியும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மார்ச் 11ஆம் திகதியும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன.

மார்ச் 23ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியும், 24ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்தி சபையும், 25ஆம் திகதி மக்கள் வங்கியும் அழைக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான கோப் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றதுடன், இதில் கோப் குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

## ஊடகர் சமுதித்தவின்...

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது அடையாளம் தெரியாதவர்களினால் நேற்று (14) அதிகாலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிலியந்தலை – கேம்பிரிட்ஜ் கோர்ட் அடுக்குமாடியில் வசிக்கும் சமுதித்தவின் வீட்டின் மீது வெள்ளை வேனில் வந்த நால்வர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

குடியிருப்பின் பிரதான நுழைவாயிலை வலுக்கட்டாயமாக திறந்து அங்கிருந்த பாதுகாப்பு கடமையிலிருந்த ஊழியரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியதன் பின்னரே ஊடகவியலாளரின் வீட்டுக்குள் நுழைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இவ்வாறு தொடர்மாடி தொகுதிக்குள் நுழைந்த அடையாளம் தெரியாத நபர்கள், சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது கற்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே, ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரம மீதான தாக்குதல் சம்பவத்துக்கு இலங்கை ஊடகவியலாளர் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

தாக்குதல்களை நடத்தி ஊடகவியலாளர்களை மௌனமாக்குவதற்கு எந்தவொரு குழுவும் முற்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன் ஊடகங்கள் மீதான இத்தகைய முறையற்ற அடக்குமுறைகளைத் தடுக்க வேண்டும் என சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

# டெமேரியா தோட்டத்தில் வெளியார் ஆக்கிரமிப்பு; தொழிலாளர்கள் எதிர்ப்பினால் பதற்ற நிலை

(நடராஜா மலர்வேந்தன்)

பசறை டெமேரியா பி தோட்ட கமேவெல பிரிவின் பிரதான வீதிக்கு அருகில் தோட்டத்துக்கு சொந்தமான காணியை வெளியாட்கள் ஆக்கிரமித்தமை தொடர்பாகவும் தற்காலிக குடிசை அமைத்துள்ளமை தொடர்பாகவும் டெமேரியா தோட்டத் தொழிலாளர்கள் சம்பவ இடத்துக்கு சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதன்போது காணி ஆக்கிரமிப்பாளர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டது. பதற்ற நிலையறிந்து, இ.தொ.காவின் பசறை பிரதேச சபை உறுப்பினர் வேலு ரவி, அமைப்பாளர் எஸ். கோவிந்தராஜ் ஆகியோர் சம்பவ இடத்துக்கு சென்றதோடு இச்சம்பவம் தொடர்பாக இ.தொ.காவின் உபத் தலைவரும் பெருந்தோட்டத்துறை அபிவிருத்திக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானின் கவனத்துக்குகொண்டு சென்றனர்.

இவ்விடயம் தொடர்பாக உடனடியாக பதுளை பிரதி பொலிஸ்மா அதிபருக்கு தொலைபேசியூடாக உரையாடியதோடு காணி ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். குறித்த சம்பவம் தொடர்பில் டெமேரியா தோட்ட முகாமையாளரால் ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு தோட்டக் காணியை ஆக்கிரமித்த நபர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# லிந்துலை உணவகத்தில் தீ; சமையல்காரர் உடல் கருகி பலி

(க.கிஷாந்தன்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துலை நகரத்தில் உள்ள உணவகம் ஒன்றில் சமையலறையில் சமைத்துக் கொண்டிருந்த 72 வயதுடைய முதியவர் ஒருவர் திடீரென ஏற்பட்ட தீப் பரவல் காரணமாக ஸ்தலத்திலேயே உடல் கருகி பலியானதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் லிந்துலை லெமினியர் தோட்டத்தைச் சேர்ந்த 74 வயதான மருதைவீரன் பெருமாள் எனவும் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

லிந்துலையில் உள்ள உணவகம் ஒன்றில் சமையல்காரராகப் பணிபுரிந்து வந்த இவர், வழமை போன்று சமைத்துக்கொண்டிருந்தபோது உடலில் தீப்பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்தின்போது உணவகத்தில் எவரும் இருக்கவில்லை எனவும், உணவகத்தின் உரிமையாளர் உணவகத்துக்கு வந்த போது, சமையல்காரர் உயிரிழந்துள்ளதைகண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வரும் நிலையில், பிரேத பரிசோதனைகளுக்காக சடலமானது நுவரெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய இரதோற்சவத்தை நடத்த தீர்மானம்

## கொரோனா கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டுமென நேற்றைய கூட்டத்தில் முடிவு

(மாத்தளை செய்தியாளர்)

மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக தேர்த் திருவிழா சுகாதார கட்டுப்பாடுகளுக்கமைய நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்ட அரச அதிபர் தேஜானி திலகரத்ன தலைமையில் நேற்று (14) பிற்பகல் 2.30 மணியளவில் மாத்தளை அரச அதிபரின் காரியாலயத்தில் நடைபெற்ற நீண்ட நேர கலந்துரையாடலுக்கு பின்னர் இவ்வாறு முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி தேர்த்திருவிழாவுக்கு மாத்தளை நகருக்கு எவ்வித காரணங்கொண்டும் வெளி மாவட்டத்தினர் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தேர்த்திருவிழா சம்பந்தமான சகல பூஜைகளும் 17ஆம் திகதி காலை தொடக்கம் மாலை வரை ஆலய வளாகத்துக்குள் மாத்திரம் இடம்பெறும் எனவும் ஆலயத்துக்கு வெளியே தேர் செல்லும் மாத்தளை பிரதான வீதி, இராஜ வீதிகளில் எந்தவித பூஜைகளும் இடம்பெறமாட்டாது எனவும் மேற்படி தேர்த் திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருக்கும் 05 தேர்களும் 17ஆம் திகதி இரவு 9.00மணிக்கு ஆலயத்தை விட்டு வெளியேறி, மாத்தளை பிரதான வழியாக வலம் வந்து இராஜ வீதி வழியாக 18ஆம் திகதி காலை 05 மணிக்கு மீண்டும் ஆலயத்தை சென்றடைய வேண்டுமென இறுக்கமான முடிவு எடுக்கப்பட்டது.

அம்மன் ஆலயத்திலிருந்து வீதி உலா வரும் முதல் 03 தேர் ஊர்திகளுக்கும் தேரை இழுத்துச் செல்ல தலா 100 பக்தர்கள் வீதம் 300 பேரும் அதைத் தொடர்ந்துவரும் 02 தேர்களுக்கு தலா 200 பக்தர்கள் வீதம் 400 பேர்களாக மொத்தமாக 700 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்ட 700 பேரும் கொவிட் -19 மூன்று தடுப்பூசிகளை பெற்றிருக்க வேண்டுமென்பதும் அதற்கான சான்றிதழ்கள் தன்னகத்தே வைத்துக்கொள்ள வேண்டுமென்பதுவும் மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய விடயமாகும்.

05 தேர்களும் வீதி உலா வரும் போது மேற்படி வீதியோரங்களில் இருந்து பூஜை தட்டு வழங்குவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் பாதை இருமருங்குகளிலும் கூட்டம் கூட்டமாக நின்று சுகாதார வழிமுறைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் தேர்களை தரிசிப்பதும் பார்வையிடுவதும் முற்றாக தடை செய்யப்பட வேண்டுமெனவும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இன்னொரு முடிவாகும்.

தேர்த்திருவிழா இடம்பெறும் 17ஆம் திகதி மாலை தொடக்கம் 18ஆம் திகதி காலை 05 மணிவரை தேர்த்திருவிழா சம்பந்தமான ஒலிவாங்கிகள் மூலமாக எந்தவிதமான பிரசார விடயங்களும் இடம்பெறக் கூடாது எனவும் கடந்த வருடங்களை போன்று இம்முறை தேர்த்திருவிழாவை முன்னிட்டு விசேட வீதியோர வர்த்தகங்கள் இடம்பெறக் கூடாது எனவும் நேற்றைய கூட்டத்தில் முக்கியமாக முடிவெடுக்கப்பட்டது. மேற்படி முடிவுகள் அனைத்தும் அரச அதிபர் தேஜானி திலகரத்ன தலைமையில் இடம்பெற்றபோது, மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் சேதுராமன் சர்வானந்தா உட்பட ஆலய உறுப்பினர்களும் மாத்தளை நாடாளுமன்ற உறுப்பினர்களான நாலக்க கோட்டேகொட, ரோஹண குமார திசாநாயக்க மாத்தளை மாவட்ட கொவிட் தடுப்பு சுகாதார விசேட வைத்திய நிபுணர் டாக்டர் வசந்த, மாத்தளை மாநகர முதல்வர் சந்தன பிரகாஸ், மாத்தளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அனுருத்த பண்டாரநாயக்க, மாத்தளை பொலிஸ் அதிகாரி அஜித் வன்சனாத்த, மாத்தளை தலைமையக பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் உபுல்குணவர்தன, மின்சார சபை நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, வீதி அபிவிருத்தி சபைகள் உட்பட அரச அதிகாரிகள் பலரும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# மூன்று கோடி ரூபா ஊழல்: ஆசிரியர் ஒருவர் கைது

முதலீடு செய்யும் தோரணையில் அதிக வட்டியுடன் பணத்தை திரும்பத்தருவதாக தெரிவித்து, பல்வேறு நபர்களிடம் சுமார் மூன்று கோடி ரூபா பணம் பெற்றுக்கொண்ட ஆசிரியர் ஒருவரை ஹொரணை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹொரணை குற்றத்தடுப்புப் பிரிவினரால் இந்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் ஹொரணை நகரை அண்மித்த அரசாங்க பாடசாலையொன்றில் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியராக பணியாற்றுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆசிரியர் பணமோசடி செய்துள்ளதாகக் குறிப்பிட்டு சுமார் 35 பேர் ஹொரணை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர். இவர்களில் அதிகமானோர் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, பெப்ரவரி 15ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மைத்ரியின் முதலைக்கண்ணீர்!

''இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களாகின்றபோதிலும் எதிர்பார்க்கப்படுகின்ற சர்வதேச தராதரத்திலான முழுமையான நல்லிணக்கம் ஏற்படவில்லை; உறுதியான அதிகாரப் பொறிமுறை ஏற்படுத்தப்படவில்லை'' - என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொரிய தலைநகரில் இடம்பெற்ற உச்சிமாநாட்டில் உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் அழைப்பின்பேரில் மைத்ரிபால சிறிசேன இந்த உச்சிமாநாட்டில் கலந்துகொண்டிருந்தார்.

*''இலங்கையில் 2009இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பான் கீ-மூன் தன்னாலான அனைத்தையும் செய்தார்'' - என மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.*

*''நான் சமாதானத்திலும் யுத்தத்தை தவிர்ப்பதிலும் நம்பிக்கை கொண்டவன், எந்த பிறழ்வுகளுக்கும் மோதல் பதிலாக அமையக்கூடாது. சம்பந்தப்பட்ட தரப்புகள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதும் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதுமே அவ்வாறான தருணங்களில் அவசியமான நடவடிக்கை.*

*இதன் காரணமாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நல்லிணக்கத்தின் நான்கு தூண்களை அடிப்படையாகவைத்து இலங்கை நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபட்டது.*

*சர்வதேச சமூகம் மிகவும் தீவிரமான உடனடி தீர்வாக அமையக்கூடிய நடவடிக்கைகளை எதிர்பார்த்தது – வேண்டுகோள் விடுத்தது.*

*அவை உயர்ந்த எதிர்பார்ப்புகள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எதிர்பார்க்கப்பட்ட வேகம் நல்லிணக்கப் பொறிமுறைகளை நடைமுறைப் படுத்துவதில் பிரதிபலிக்கவில்லை .*

*மோதலில் ஈடுபட்ட தரப்பினரின் நலன்கள் குறித்தும் கடந்த காலங்கள் குறித்தும் சமரசம் செய்வது விரைவாக முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கையல்ல. காயங்கள் ஆழமானவையாக காணப்படுவதே இதற்குக் காரணம். எங்கள் மோதல் 2009இல் முடிவிற்கு வந்தது, 12 வருடங்களின் பின்னர் நாங்கள் இன்னமும் உறுதியான அதிகாரப் பொறிமுறையை உருவாக்கவில்லை – எதிர்பார்க்கப்படுகின்ற சர்வதேச தராதரத்திலான நல்லிணக்கம் நிறைவேறவில்லை''* எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக இருந்தவர் இந்த சிறிசேன. ஆனால், அவ்வளவு அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு அவர் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு என்ன செய்தார்?

தமிழர்களின் அடிப்படை கோரிக்கைகளையாவது நிறைவேற்றக்கூடிய வகையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் இலங்கையில் வந்தால்தான் தமிழினம் உரிமைபெற்ற பிரஜையாகத் திகழ முடியும். ஆனால், இன்றைக்கும் நிச்சயமாக அரசு, தமிழர்களை முற்றாக ஓரங்கட்டுகிறதே என்ற அச்சம்தான் தமிழ்ச் சமூகத்திடம் இருக்கிறது.


இந்த அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் அரசியல் தீர்வுக்கு சர்வதேச கண்காணிப்போடு பொது வாக்கெடுப்பும், போர்க் குற்றங்களை விசாரிக்க சர்வதேச சுதந்திரமான, நம்பகமான விசாரணையும் வேண்டுமென்று தமிழர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இது சிறிசேனவுக்குத் தெரியாதா ?

தமிழர்களின் கோரிக்கைகள் ஈடேறி, புதிதாக ஏற்றுக்கொள்ளப்படும் அரசியலமைப்புச் சட்டத்திலும் தமிழர்களும் சம உரிமையோடும் சுயமரியாதையோடும் வாழ வகைசெய்தால்தான் புதிதாக வரும் அரசியல் சட்டத்தை தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

நசுக்கப்பட்ட இனத்திற்குப் புதிய அரசியலமைப்புச் சட்டம் வெறும் களிம்பு போடாமல் தீவிர சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் இருந்தால்தான் பிரச்சினைகளில் தீர்வு காண முடியும். ஆனால், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, ''புதிதாக இயற்றப்படும் அரசியலமைப்புச் சட்டத்தில் சமஷ்டி அமைப்புக்கு இடம் இல்லை'' என்று தனது ஆட்சியின்போது திட்டவட்டமாக தெரிவித்திருந்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தனது ஆட்சியின்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மைத்ரிபால சிறிசேன இவ்வாறு கூறியதை அறிந்து தமிழர்கள் அன்று வேதனைப்பட்டனர். சமஷ்டி, மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் பரவலாக்கப்படவில்லையென்றால் எப்படி தமிழர்கள் நிம்மதியாக, சம உரிமையோடு வாழ முடியும்? இப்போது அதற்கு பதில் சொல்வாரா சிறிசேன?

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் மிகப்பெரும் வாய்ப்பைக் கொண்டிருந்த சிறிசேன, இன்று தன்னை ஒரு ஜனநாயகவாதியாக காட்டிக்கொள்ள முற்படுகிறார். படுகொலை செய்து மரணதண்டனை அனுபவித்த கைதிக்கு பொதுமன்னிப்பளித்த சிறிசேன, காலாகாலம் சிறையில் வாடிய அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளை கண்டுகொள்ளவே இல்லை. அப்படித்தான் அவரது ஆட்சியின் இலட்சணம் இருந்தது. இப்போது காலம் கடந்த ஞானத்தைப் பெற்று முதலைக்கண்ணீர் வடிக்கிறார் மைத்ரி.



# செல்பியால் உடல்நலத்தை அளக்கும் செயலி!

வெறும் 30 விநாடிகளுக்கு வீடியோ செல்பி எடுத்துக்கொடுத்தால் போதும். ஒரு செயலி, அதை அலசி, பொதுவான உடல்நலன் குறித்த 30 விதமான காரணிகளை அளந்து சொல்லிவிடும்.

ஆச்சரியமாக இருக்கிறதா? ஆனால், கனடாவின் டொரோன்டோவிலுள்ள நியூரலொஜிக்ஸ், அனுரா என்ற செயலி மூலம் இதை சாதித்துள்ளது. இந்த செயலி மொபைல் மற்றும் கணினி ஆகிய இரண்டிலும் செயல்படும். இதை பயன்படுத்தி ஒருவர் அரை நிமிடம் செல்பி எடுத்தால், அதை மருத்துவ ரீதியில் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் ஒன்று அலசி ஆராயும்.

செல்பியில் தெரியும் நபரின் இரத்த அழுத்தம், மூச்சு விடும் வேகம், மனச்சுமை, செரிமானத் திறன் என்று உடல்நலத்துக்கு அடிப்படையான பல காரணிகளை இந்த செயலி அலசி, முடிவை அரை நிமிடத்தில் சொல்லிவிடுகிறது. மனித தோலில் பிரதிபலிக்கும் ஒளி, அவரது இரத்தோட்டத்தையும் தெளிவாகக் காட்டும்.

இதுதான் செல்பி வீடியோவில் செயற்கை நுண்ணறிவுக்கு கிடைக்கிறது. இந்தத் தகவல்களை வைத்தே, அது ஒரு மருத்துவருக்கு இணையாக நோயறிதல் பணியை நொடிகளில் முடித்து தருகிறது. அனுரா செயலியை ஒரு தேர்ந்த மருத்துவரின் ஆலோசனைக்கு மாற்றாக பயன்படுத்தக்கூடாது என இதன் தயாரிப்பாளர்கள் எச்சரிக்கின்றனர்.

தினமும் தன் உடல்நலனை கண்காணிக்க வேண்டும் என்று நினைப்போருக்கு அனுரா செயலி ஓர் உதவியாளர். அவ்வளவுதான் என இதன் வடிவமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# நுளம்புகளுக்கு நிறம் பிரிக்கத் தெரியுமா?



மனித வாடையை முகர்ந்துவிட்டால், நுளம்புகள் அருகே வந்து கடிக்கத் தோதான இடம் பார்க்கும். இது அறிவியல்பூர்வமான உண்மை. மனித மூச்சிலுள்ள கார்பன்-டை-ஒக்சைட் வாடைதான் நுளம்புகளுக்கு அழைப்பிதழ். ஆனால், தற்போது வொஷிங்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூடுதல் தகவலையும் கண்டறிந்துள்ளனர்.

அதாவது, மனித மூச்சிலுள்ள கார்பன்-டை-ஒக்சைடின் வாடையை கண்டுகொண்ட பிறகு, அவை சுற்றிலும் நோட்டம் பார்க்கின்றன. அப்போது சிவப்பு அல்லது ஆரஞ்சு நிறத்தில் ஏதாவது தட்டுப்படுகிறதா என்பதை தேடுகின்றன. அப்படி தட்டுப்பட்டதும், அதை நெருங்கி தங்கள் இரத்தப் பசியை தீர்க்க முயல்கின்றன.ஆய்வகங்களில் பல நிறங்களில் பொருட்களை வைத்தபோதும், நுளம்புகள் இந்த இரு நிறமுள்ள பொருட்களையே நாடுவதை ஆய்வாளர்கள் கவனித்தனர்.

இது ஏன் என்று ஆராய்ந்தபோது, மனிதர்கள் எந்த நிறத் தோலை உடையவர்களாக இருந்தாலும், அவர்களது தோலிலிருந்து சிவப்பு அல்லது ஆரஞ்சு நிற ஒளி அலைகள் பிரதிபலிக்கின்றன. முதலில் கார்பன்-டை-ஒக்சைட் வாடை அந்த இடத்திலிருந்து வரவேண்டும். அடுத்து அந்த இடம் சிவப்பு அல்லது ஓரஞ் வண்ணத்தில் இருக்கவேண்டும். அப்படி இருந்தால், நுளம்புகளுக்கு சாப்பாட்டு மணி அடிக்கப்படுவதாகவே பொருள்.

மற்ற பூச்சிகளுக்கு இதேபோல் நிறப் பாகுபாடு பற்றிய அறிவு உண்டா என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

# மாசு விரட்டும் ஒலி பீரங்கி



போலந்து முழுதும் பனிப்பொழியும் மாதங்கள் அதிகம். அதிலும் ஆண்டுக்கு சில மாதங்களாவது புகை மாசு மற்றும் பனி ஆகியவை ஏற்படுத்தும் மூட்டம், நகர்ப்புற போக்குவரத்தையே நிறுத்தும் அளவுக்கு இடர் தரக்கூடியது.

இந்த சவாலுக்கு தீர்வாக ஒலி பீரங்கிகளை பயன்படுத்தலாம் என்கின்றனர் போலந்து விஞ்ஞானிகள். முதற்கட்ட சோதனையாக கல்வாரியா ஜெப்ரிடோவ்ஸ்கா என்ற நகரில் விஞ்ஞானிகள் ஒலி பீரங்கி சோதனையை நடத்தி வெற்றிகண்டுள்ளனர்.

தலைகீழாக கவிழ்த்தப்பட்ட கூம்பு வடிவிலான ஒரு கருவிக்குள் காற்று மற்றும் அசிட்டலின் ஆகியவை கலந்த கலவை எரியூட்டப்படும். இதனால், வெடிச்சத்தத்துடன் கூம்புக்குழாய் வழியே அதிர்வலை வான் நோக்கி வெளியேறும். இந்த அதிர்வலையின் தாக்கத்தில் காற்றில் உள்ள கனமான மாசுத் திவலைகளும் சேர்ந்து சில மீட்டர் உயரத்திற்கு தள்ளப்படும்.

ஒலி பீரங்கியை ஒரு மணிநேரம் பயன்படுத்தினால், 3 கி.மீ. சுற்றளவுக்கு மூட்டம் விலகி காட்சிகள் தெளிவாகத் தெரியும். இதனால், தரைமட்டத்தில் 30 சதவீதம் வரை காற்றில் மாசுத் திவலைகள் குறையும்.

ஒலி பீரங்கி ஏற்படுத்தும் காட்சித்தெளிவு அதிகபட்சம் 3 மணிநேரம்வரை நீடிக்கும்.

ஒலி பீரங்கியின் சில விநாடி நேர வெடிச் சத்தம் மட்டும்தான் இதில் உறுத்தலான அம்சம். ஆனாலும் அது மாசை விரட்டுவதால் அதை பொறுத்துக்கொள்ளலாம் என போலந்து மக்கள் கருதுகின்றனர். ஒலி அலையால் மாசை விரட்டலாம் என்பது விந்தைதான்.

# விண்வெளி நிலையம்: கடலில் வீழ்த்தி அழிக்க நாசா திட்டம்

பூமியிலிருந்து 400 கி.மீ. உயரத்தில் வலம் வருகிறது ஐ.எஸ்.எஸ். எனப்படும் சர்வதேச விண்வெளி நிலையம். சர்வதேச கூட்டுறவால் கட்டுவிக்கப்பட்ட இந்த மிதக்கும் ஆய்வுகூடம், மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய விண்வெளி கலன். பல அறிவியல் மைல்கல்களை எட்ட உதவிய இந்த ஆய்வகத்தின் ஆயுட்காலம் 2030இல் முடிவடைகிறது.

அப்படி முடியும்போது, இனி எந்த நாட்டு விண்வெளி வீரர்களும் பூமியிலிருந்து கிளம்பி அங்கு போகமாட்டார்கள். மாறாக, அமெரிக்க விண்வெளி அமைப்பான நாசா அதை புவியீர்ப்பு வளையத்திற்குள் கொண்டுவந்து, தெற்கு பசிபிக் கடல் பகுதியில் வீழ்த்தப்போகிறது.

எதிர்வரும் 2030 வரையுள்ள எட்டு ஆண்டுகளில் பல நாட்டு தனியார் விண்வெளி நிறுவனங்களுக்கு ஆய்வுசெய்ய, ஐ.எஸ்.எஸ்ஸை வாடகைக்கு விடவும் நாசா திட்டமிட்டுள்ளது. ஸ்பேஸ் எக்ஸ் போன்றவை தங்கள் விண்வெளி ஓடத்தை இந்த நிலையத்துடன் இணைத்து, தங்கள் சொந்த ஆய்வகத்தை துவக்கலாம். ஆனால், 2030 வாக்கில் தனியே பிரிந்து, விண்வெளி ஆய்வகத்தை விரிவாக்கம் செய்துகொள்ளலாம்.

அதன் பின் ஐ.எஸ்.எஸ்ஸை ஆளில்லாத புராக்ரஸ் சரக்கு விண்வெளி ஓடங்களை வைத்து, அதன் செலுத்தும் வேகத்தை குறைத்து, பூமிக்கு 280 கி.மீ. உயரத்திற்கு வந்ததும், அந்த நிலையம் அப்படியே பூமியை நோக்கி வேகமாகப் பாயும். காற்று மண்டலத்தில் ஏற்படும் உராய்வால் தீப்பிடித்து சிதறி, மீதமுள்ள உலோகத் துண்டுகள் தெற்கு பசிபிக் கடலில் விழும். ஆனால், அதற்குள் குறைந்தது நான்கு தனியார் விண்வெளி நிலையங்கள் செயல்பட துவங்கியிருக்கும் என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



# இன்றைய நாளில்...

- 1796 – டச்சுக்களின் வசம் இருந்த கொழும்பு நகரை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1920 – யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது
- 1923 – கிரேக்கம் கிரெகொரியின் நாட்காட்டியை ஏற்றுக்கொண்ட கடைசி ஐரோப்பிய நாடானது.
- 2001 – முழுமையான மனித மரபணுத்தொகை நேச்சர் இதழில் வெளியானது.
- 2003 – ஈராக்கியப் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உலகெங்கும் 600 நகரங்களில் முன்னெடுக்கப்பட்டன. 8 முதல் 30 மில்லியன் மக்கள் வரை இதில் பங்குபற்றினர்.

# நக்கல் நமசிவாயம்

செய்திகளை பார்த்தா எல்லாம் அரசாங்கத்துக்கு எதிராகத்தான் இருக்குது... மக்களும் அரசாங்கத்த ஏசுறாங்கள் ...ஆனா ஆளுங்கட்சி கூட்டத்துக்கு சனம் அள்ளுது... எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்ல...



# இன்றைய ராசி பலன்

**15.02.2022 செவ்வாய்க்கிழமை மாசி 3**

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: பூசம்** பிற்பகல் 1.49 வரை **ஆயிலியம்** பி.ப 1.49 - 16.02.2022 மாலை 3.14 வரை **யோகம்: ஸௌபாக்யம்** இரவு 9.18 வரை **சோபனம்** இரவு 9.18 - 16.02.2022 இரவு 8.44 வரை **திதி: பூர்வ பட்ச சதுர்த்தசி** இரவு 9.42 வரை **பௌர்ணமி** இரவு 9.42 - 16.02.2022 இரவு 10.25 வரை **முற்கரணம்: கரஜம்** காலை 9.09 வரை **பிற்கரணம்: வணிஜம்** காலை 9.09 - இரவு 9.42

**சுப நேரங்கள்** காலை 10.56 - பி.ப. 12.24

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்** மாலை 3.23 - 4.53

**குளிகை காலம்** பிற்பகல் 12.25 - 1.54

**எமகண்ட காலம்** காலை 9.26 - 10.55

**துர் முகூர்த்தம்** காலை 8.50 - 9.38 இரவு 11.12 - 12.00

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** பரம்பரை வணிகத்தில் விற்பனை குறையலாம். சிலரின் மீது கண்மூடித்தனமான நம்பிக்கையை தவிர்ப்பது நல்லது. கூட்டுத் தொழிலில் வெளிப்படைத்தன்மையை பேணுவது நன்மையாக அமையலாம்.

**ரிஷபம்:** பத்திரிகைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு சிறப்பு உண்டாகலாம். சிறிய முதலீட்டு வியாபாரிகளுக்கு சாதகமான நாளாக அமையலாம். காதலர்களுக்குள் அன்பு அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் மேன்மை உண்டாகலாம்.

**மிதுனம்:** உங்கள் சுய பிம்பத்தை பற்றிய கவலை ஏற்படலாம். பயனற்ற சிந்தனைகளை நீக்குவது நல்லது. இன்று தேவையற்ற வேலைகளில் காலம் செல்லலாம். எதிர்மறை விடயங்களையும் தவிர்ப்பது நல்லது. இறைதியானம் நன்மை.

**கடகம்:** வணிக ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறலாம். பெண்களுக்கு இன்று முன்னேற்றமான நாளாக அமையலாம். தூரப் பயணங்களில் நன்மை கிடைக்கலாம். பணிகளில் மேலதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் அனைத்தும் சிறப்பாக நிறைவேறலாம்.

**சிம்மம்:** வருவாய்க்குள் செலவுகளை செய்வதில் கவனம் தேவைப்படலாம். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் இழப்புகள் ஏற்படலாம். வாயு சம்பந்தப்பட்ட உடல்நல பிரச்சினைகள் சிறியளவில் ஏற்படலாம். மனதில் இனம்புரியாத பயம் மேலோங்கலாம். இறைவணக்கம் நன்மை.

**கன்னி:** உங்கள் பணியாற்றலில் திருப்தி கிடைக்கலாம். காதல் திருமண சுப விடயங்களின் செயல்கள் உண்டாகலாம். இன்றைய சூழ்நிலையால் மன உறுதி அதிகரிக்கலாம். பணப் பிரச்சினையால் தடைப்பட்ட வேலைகள் மீண்டும் துவங்கும் நிலை உருவாகலாம்.

**துலாம்:** அன்றாட வழக்கங்கள் ஒழுங்கு பெறும். பணிகளில் பதவி உயர்வு கிடைக்கலாம். உடல்நலம் சீராக துவங்கும். வாழ்க்கைத்துணையுடன் எண்ணங்களை பகிர்வதில் மன அமைதி உண்டாகும். வீட்டின் வளங்களுக்கான செலவு ஏற்படலாம்.

**விருச்சிகம்:** உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு கல்வியில் சிறந்த நன்மை கிடைக்கலாம். சமூக மதிப்பு மேம்படும். குடும்பத்தில் மூத்தவர்களின் ஆசி மேன்மை தரும். சில நலம் தரும் செயல்கள் நிறைவேறலாம்.

**தனுசு:** அலுவலக பிரச்சினைகளை மனதில் நீக்கி குடும்பத்தை மகிழ்விப்பது நல்லது. இருமல் பிரச்சினை சிறியளவில் உண்டாகலாம். பணிகளில் சக ஊழியர்களின் செயல்கள் இடையூறை தரலாம். தம்பதியரிடையே சகிப்புத்தன்மை தேவைப்படலாம்.

சந்திராஷ்டமம்: பூராடம் நட்சத்திரத்திற்கு காலை 7.23 - 16.02.2022 காலை 8.55 வரை

**மகரம்:** குடும்ப சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சுப செய்திகள் கிடைக்கப் பெறலாம். உங்கள் நட்பான நடவடிக்கைகள் பாராட்டப்படும். சந்தைப்படுத்தும் வணிகம் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கலாம். வெளிநாட்டு வணிகம் மேம்படும்.

**கும்பம்:** ஆபரண வியாபார லாபங்கள் அதிகரிக்கலாம். குடும்ப விடயங்களை அனைவரிடமும் பகிராமல் இருப்பது நன்மை. வேலைத்தளங்களில் மேலதிக நேரம் பணியாற்றும் நிலை உருவாகலாம். அதிக நேர பணிகளில் உடல்நலத்திலும் கவனம் தேவைப்படலாம்.

**மீனம்:** திருமணத்திற்கு காத்திருக்கும் தங்கள் பிள்ளைகளின் திருமண விடயங்களில் முயற்சி உண்டாகலாம். புதிய பணிக்கு மாறிச் செல்லும் விடயத்தில், ஒப்பந்த ஆவணங்களில் கவனம் தேவைப்படலாம். புதிய முதலீடுகளில் கவனம் தேவைப்படலாம். பணிகளில் விவேகம் மற்றும் பொறுமையால் நன்மை கிடைக்கலாம். இறைதியானம் நன்மை.

# அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மன்னாரில் கனிய மணல் அகழ்வு

## உடனடியாக நிறுத்துமாறு 'சுற்றாடலை பாதுகாப்போம்' அமைப்பு கோரிக்கை

*(மன்னார் நகர் செய்தியாளர்)*

உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்குள்ளவர்களை கருவிகளாக பாவித்து உரிமங்களை பெற்று கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பெனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம். இந்த மணல் அகழ்வினால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்தவொரு நன்மைகளும் இல்லை - என மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பினர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

மன்னாரில் நேற்று (14) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் ஆய்வுகள் மிகவும் இரகசியமான முறையில் அவுஸ்திரேலிய நிறுவனத்தினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மன்னாரிலுள்ள சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பினர் பெற்றுக்கொண்ட தகவல்கள் அடிப்படையில் மதத் தலைவர்கள், பிரஜைகள் குழு, பொதுமக்கள் இணைந்து எமது எதிர்ப்பை வெளியிட்டு ஜனாதிபதி வரை தெரிவித்திருக்கிறோம்.

அண்மையில் எங்களோடு கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் எங்களுடைய ஆதங்கங்களை கேட்டு இந்த மாதத்தின் இறுதியில் அவுஸ்திரேலிய தூதருடன் மன்னாரிலுள்ள எமது குழுக்களையும் இணைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் மன்னார் தீவுக்குள் வசிக்கிறார்கள்.

இரண்டு கிலோமீற்றர் அகலமும் 30 கிலோ மீற்றர் நீளமும் கொண்ட ஒரு குறுகிய தீவுப் பகுதி முற்றுமுழுதாக குறுகிய காலத்தில் கடலில் மூழ்கும் நிலை ஏற்படும்.

1980ஆம் ஆண்டுகளில் மன்னார் நகர செயற்பாடுகளை உயிலங்குளத்தில் அமைப்பது தொடர்பாக ஒரு திட்டம் அரசிடம் இருந்தது. ஒருசில அரசியல் காரணங்களால் அவை தடுத்துநிறுத்தப்பட்டிருக்கின்றன.



இந்த மன்னார் தீவுக்குள் மாவட்ட செயலகம், பொது வைத்தியசாலை, வங்கிகள், நான்கு தேசிய பாடசாலைகள் என முக்கியமான அனைத்து செயற்பாடுகளும் இந்தத் தீவுக்குள்தான் இருக்கின்றன.

இந்த மணல் அகழ்வுகள் தொடருமாக இருந்தால் கடலுக்குள் மூழ்கி மன்னார் மாவட்டம் செயலிழந்து சூனியப் பிரதேசமாக மாறிவிடும்.

ஆகவே, எங்களால் முடிந்தளவு மக்களை திரட்டி அரச அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி வரைக்கும் சென்று எங்களுடைய ஆதங்கத்தை தெரியப்படுத்துகிறோம். தொடர்ந்து தெரியப்படுத்துவோம்.

ஆனால், நாங்கள் எந்தளவுக்கு எதிர்ப்புகளை தெரிவிக்கின்றோமோ அந்த அளவிற்கு அவுஸ்திரேலிய நிறுவனம் இதை ஆய்வுசெய்வதில் முனைப்புக் காட்டி வருகிறது. எமது எதிர்ப்புகளால் புவிச்சரிதவியல் திணைக்களம் இதற்கான உரிமத்தை நிறுத்தியிருந்தது ஆனால், தற்போது ஆராய்ச்சி செய்வதற்கு புவிச்சரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அது எவ்வாறு நடைபெற்றது என்பதை எங்களால் அறிய முடியாமல் இருக்கிறது எனத் தெரிவித்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**14.02.2022 நாணய மாற்று வீதம்**

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 028 77 5 | 034 7004 |
| கனேடியன் டொலர் | 043 5302 | 05 3806 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 82 1 | 21 0802 |
| யூரோ | 113 8760 | 122 4358 |
| ஜப்பான் யென் | 0 6 86 | 0 6625 |
| சிங்கப்பூர் டொலர் | 035 8 60 | 040 5383 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 45 8 | 165 080 |
| சுவிஸ் பிராங் | 102 1034 | 11 67 5 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 422 0336 |
| குவைட் | குவைட் தினார் | 554 483 |
| ஓமான் | ஓமான் றியால் | 411 0 7 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 507 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 4684 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 6157 |

# நாடாளுமன்ற ஊழியர்கள் 28 பேருக்கு கொரோனா

நாடாளுமன்றத்தில் சில பிரிவுகளின் தலைவர்கள் உள்ளிட்ட 28 பேருக்கு கொரோனா தொற்று நேற்று (14) உறுதிசெய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பணியாற்றும் 112 பேர் நேற்றுக் காலை பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதனடிப்படையில் அவர்களில் 28 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோரை உடனடியாக தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த எண்ணிக்கையுடன் நாடாளுமன்றத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 98 ஆக அதிகரித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் விசேட சுகாதார வழிகாட்டல்கள் அமுல் படுத்தப்பட்டுள்ளன. வெளி நபர்கள் வருகை தருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய தொழில் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா 2022க்கு Dialog Enterprise அனுசரணை வழங்கியது

இலங்கையின் கைத்தொழில்கள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், புதிய இயல்புநிலையில் புத்துயிர் பெறுவதற்காக அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, டயலொக் எண்டர்பிரைஸ் ஆனது 2022 தேசிய கைத்தொழில் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழாவுக்கு அனுசரணை வழங்கியது. இந்நிகழ்வானது, பெப்ரவரி 03ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவங்ச மற்றும் பிரம்பு, பித்தளை, மட்பாண்டம் மற்றும் கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணவீர, டயலொக் எண்டர்பிரைஸ் குழும பிரதான அதிகாரி நவீன் பீரிஸ்,





டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் வளர்ந்து வரும் வர்த்தகப் பிரிவின் தலைவர் சன்ன அமரசேகர, இலங்கை பிரதமர் கௌரவ திரு. மஹிந்த ராஜபக்ஷ, கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவன்ச மற்றும் பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணவீர, டயலொக் எண்டர்பிரைஸ் குழும பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் ஆகியோருக்கு டயலொக் எண்டர்பிரைஸ் வழங்கும் தீர்வுகள் குறித்து தெளிவுப்படுத்துவதை படத்தில் காணலாம்

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் வளர்ந்துவரும் வர்த்தகத்தின் தலைவர் சன்ன அமரசேகர, டயலொக் ஃபினான்ஸ் பி.எல்.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி நசீம் மொஹமட் மற்றும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஏனைய முக்கியஸ்தர்கள் முன்னிலையில் 2022 தேசிய தொழில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. உபசேன திசாநாயக்க, "நாட்டில் பாரிய தொழில்துறை மறுமலர்ச்சிக்கான அடித்தளத்தை அமைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட தேசிய வேலைத்திட்டத்தின்



டயலொக் எண்டர்பிரைஸ் வழங்கும் ICT தீர்வுகள் குறித்து டயலொக் எண்டர்பிரைஸ் குழுமத்தின் பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் அவர்கள் கம்பனி தோட்ட மறுசீரமைப்பு, தேயிலைத் தோட்டங்கள் தொடர்பான பயிர்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்கள் சாகுபடி மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ கனக ஹேரத் அவர்களுக்கு தெளிவுபடுத்துகின்றார். மேலும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. உபசேன திசாநாயக்க அவர்களையும் படத்தில் காணலாம்.

மற்றுமொரு வெற்றிகரமான படியாக இந்த நான்கு நாள் தேசிய கைத்தொழில் கண்காட்சியை நடத்தியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த தொழில்துறை மறுமலர்ச்சி முயற்சிகளை மேலும் மேம்படுத்துவதற்கான எங்கள் பகிரப்பட்ட பார்வையில், எங்களுடன் இணைந்ததற்காக எங்களின் அனுசரணையாளர் டயலொக் எண்டர்பிரைஸ் மற்றும் உத்தியோகபூர்வ ஃபின்டெக் பங்காளர் டயலொக் ஃபைனான்ஸ் மற்றும் கொடுப்பனவு பங்காளர் டயலொக் genie ஆகியோருக்கு நாங்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்" என மேலும் தெரிவித்தார்.

நாட்டின் 20 தொழில்துறைகளை பிரதிநிதித்துவப்படுத்து வதற்கு 300க்கும் மேற்பட்ட கண்காட்சி கூடங்களை கொண்ட இந்த கண்காட்சி, தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கும் தொற்றுநோயின் பாதகமான விளைவுகளிலிருந்து மீள்வதற்கும் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கு உதவுவதற்காகவும் நடத்தப்பட்டதுடன் இந்த கண்காட்சியில் 20, 000 க்கும் அதிகளவான பார்வையாளர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. டயலொக் எண்டர்பிரைஸ் உடன் டயலொக் ஃபைனான்ஸ் பி.எல்.சி. மற்றும் டயலொக் genie உத்தியோகபூர்வ பங்காளராகவும் FinTech கொடுப்பனவு பங்குதாரராகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது இலங்கை நிறுவனங்களை புதிய இயல்புநிலையில் சிறந்த டிஜிட்டல் தீர்வுகள் மூலம் டிஜிட்டல் முறையில் மாற்றியமைக்க உதவும்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு வவுனியாவில்







*(வவுனியா செய்தியாளர்)*

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின்கீழ் சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கமைவாக குறித்த கொடுப்பனவு வழங்கும் செயற்றிட்டம் நேற்று (14) நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்திலும் சமுர்த்தி பயனாளிகளுக்கான அதிகரித்த கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளுக்கான அதிகரித்த கொடுப்பனவு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழங்கப்பட்டது.

இதில் கிராம அலுவலர் எஸ்.ராகுல், சமுர்த்தி உத்தியோகத்தர் ம.விக்கினேஸ்வரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.சங்கீதன், சமுர்த்திக் குழுக்களின் தலைவர்கள், சமுர்த்திப் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஓல்டன் தோட்டக் குடியிருப்பு மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து விபத்து

**இரண்டு வயது குழந்தை உட்பட மூவர் காயம்**




செ.தி.பெருமாள், எம்.கிருஷ்ணா

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓல்டன் தோட்ட கிங்கோரா பிரிவு குடியிருப்பொன்றின் பாதுகாப்பு மதில் நேற்றுமுன்தினம் (13) சரிந்து வீழ்ந்ததில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

அன்றைய தினம் கடும் மழை பெய்துவந்த நிலையில் திடீரென மாலை 04.30 மணியளவில் குடியிருப்பின் பின்னால் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புச் சுவர் சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் குடியிருப்பு முற்றாக சேதமடைந்துள்ளதுடன், அங்கிருந்த 60 வயது நபர், அவருடைய மகள் மற்றும் இரண்டு வயது பேரப்பிள்ளை என மூவர் காயமுற்ற நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காயமுற்ற மூவரில் முதியவர் தொடர்ந்து மஸ்கெலியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதுடன், தாயும் இரண்டு வயது மகனும் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர். மேலும் பாதுகாப்பு மதில் சரிந்து வீழ்ந்துள்ளதையடுத்து அதற்கு மேல் அமைந்துள்ள குடியிருப்பும் பாதிப்புக்குள்ளாகும் நிலை உள்ளதாக குடியிருப்பாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

# சுகாதாரத்துறையினரின் தொடர் போராட்டம்; நாவலப்பிட்டிய வைத்தியசாலை முடக்கம்

**நோயாளர்கள் அவதி**




(இரா.யோகேசன்)

சுகாதாரத்துறையினரின் வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக நாவலப்பிட்டி வைத்தியசாலையின் மருந்து வழங்கும் பகுதி, இரத்தப் பரிசோதனை நிலையம் என்பன மூடப்பட்டதால் நோயாளர்கள் சிரமத்திற்குள்ளாகினர்.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட ஏழு அம்சக் கோரிக்கையை முன்வைத்து, சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

நோயாளர்கள் சிரமத்தை எதிர்நோக்குவதை கருத்திற்கொண்டு கொழும்பு நீதிமன்றம் போராட்டத்திற்கு தடை உத்தரவை பிறப்பித்திருந்தது. அதேபோல் ஜனாதிபதி சுகாதாரத்துறையின் சிலவற்றை அத்தியாவசிய துறையாக பிரகடனப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதும் அனைத்து தடை உத்தரவையும் மீறி சுகாதாரத்துறையினர் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

மேலும் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் வாராந்த கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவு தற்போது வழமையாக இடம்பெற்றாலும் தனியார் மருந்தகங்களிலே மருந்துகளை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதனால் இன்றைய நிலையில் பொருளாதார ரீதியாக சவால்களை எதிர்கொள்ளும் சாதாரண மக்கள் தனியார் மருந்தகங்களில் மருந்துகளை பெற்றுக்கொள்ள சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

# பதுளையில் கஞ்சா சேனை சுற்றிவளைப்பில் கட்டுத்துப்பாக்கி வெடித்து கான்ஸ்டபிள் காயம்

(பதுளை நிருபர்)

கஞ்சா சேனையொன்றை சுற்றிவளைக்கச் சென்றபோது, கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்து பதுளை தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பதுளை, ஹெட்டியாகொல்லை என்ற இடத்தில் நேற்று (14) இடம்பெற்றுள்ளது.

பதுளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் டி.எம்.கயான்குமார என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே கட்டுத்துப்பாக்கி வெடித்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரது வலது கால் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றின் அடிப்படையிலேயே மேற்படி சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது. குறித்த கஞ்சா சேனையை சுற்றி கட்டுத்துப்பாக்கி கட்டப்பட்டிருந்த நிலையில், துப்பாக்கி பொருத்தப்பட்ட கம்பியில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளின் கால் சிக்கியதையடுத்தே, கட்டுத் துப்பாக்கி வெடித்தமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தையடுத்து, கஞ்சா சேனை சுற்றிவளைப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி பதுளை அரசினர் மருத்துவமனையில் வைத்திய நிபுணர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால், குறிப்பிட்ட கான்ஸ்டபிளுக்கு சிகிச்சையளிப்பதற்கு பதுளை தனியார் வைத்தியசாலையையும் நாட வேண்டியிருந்ததாகவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# கூட்டு ஒப்பந்தத்தைக்கோரி கண்டியில் ஆர்ப்பாட்டம்; பிரதி தொழில் ஆணையாளரிடம் மகஜர் கையளிப்பு





(அ.இராமன் - கண்டி நிருபர்)

கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டுமென வலியுறுத்தி இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் என்பன இணைந்து கண்டியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இந்த ஆர்ப்பாட்டம் நேற்று (14) இடம்பெற்றது.

ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்ற கோரிக்கையின் விளைவாக கூட்டு ஒப்பந்தத்திலிருந்து தோட்ட முதலாளிமார்கள் வெளியேறியதால் இன்று தொழிலாளர்கள் தமது தொழில் உரிமைகளை இழந்துள்ளனர். எனவே, மீண்டும் தொழில் பாதுகாப்புடன் கூடிய கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தி கண்டி பிரதி தொழில் ஆணையாளர் காரியாலயத்தின் முன் மேற்படி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

பிரதி தொழில் ஆணையாளரிடம் இது தொடர்பான மகஜர் ஒன்றும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும்

**பேராசிரியர் விஜயசந்திரன் வலியுறுத்து**



(க.கிஷாந்தன்)

"மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பிலும் இந்தியா கவனம் செலுத்தவேண்டும். இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறிமுறையின்போது மேற்படி மக்களின் அபிலாஷைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை இந்தியா பிரயோகிக்க வேண்டும் - என மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (14) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியா சென்று, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கருடன் பேச்சு நடத்தினார். இதன்போது அதிகாரப்பகிர்வின் அவசியம் பற்றி இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசுக்கும், வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் கட்சிகளின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை என்பது 30 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச்செல்கின்றது. இப்பிரச்சினைக்கான தீர்வாக இந்தியாவின் தலையீட்டுடன் 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. எனவே, 30 வருடங்கள் கடந்தும் அதிகாரப்பகிர்வு நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக இருக்கின்றது என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும், சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அன்று வடக்கு, கிழக்கு பிரச்சினை பற்றியே கூடுதல் கரிசனை எடுத்துக்கொள்ளப்பட்டது. எனவே, 87 காலப்பகுதியில் மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் அதிகாரப்பகிர்வு பொறிமுறைக்குள் உள்வாங்கப்படவில்லை.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களுள் மூன்று இனங்கள் உள்ளன. மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் ஈழத் தமிழர்கள். எனவே, அதிகாரப்பகிர்வு பொறிமுறையின்போது இம்மூன்று இன மக்களின் அபிலாஷைகளும் உள்ளடக்கப்பட வேண்டும். அதற்கான அழுத்தம் இந்திய தரப்பிலிருந்து விடுக்கப்பட வேண்டும்" - என்றார்.

# பண்டாரவளை – எல்ல பகுதியில் உல்லாசப்பயணியை வல்லுறவிற்குட்படுத்த முயன்ற ஆட்டோ சாரதி கைது

(பதுளை நிருபர்)

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணியான 40 வயது பெண்ணை பாலியல் வல்லுறவிற்குட்படுத்த முயன்ற ஆட்டோ சாரதி ஒருவர் எல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எல்ல நகரிலிருந்து கரந்தகொல்லை உல்லாச விடுதிக்கு செல்வதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் ஆட்டோவொன்றில் சென்றபோது, குறித்த சாரதி, மனித நடமாட்டமில்லாத இடத்தில் ஆட்டோவை நிறுத்திவிட்டு, இப் பெண்ணை பாலியல் வல்லுறவிற்குட்படுத்த முயன்றுள்ளார்.

ஆட்டோ சாரதியின் பிடியிலிருந்து தப்பி ஓடிய அமெரிக்கா பெண், எல்ல பொலிஸ் நிலையத்திற்குச் சென்று, தனக்கேற்பட்ட நிலை குறித்து புகார் செய்துள்ளார். இப்புகாரையடுத்து, எல்ல பொலிஸார் விரைந்து குறிப்பிட்ட ஆட்டோ சாரதியைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஆட்டோ சாரதியை விசாரணையின் பின்னர் பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

# சட்டவிரோதமாக குடிநீரை பெற்றுக்கொண்ட 19 இடங்கள் மாத்தளையில் கண்டுபிடிப்பு

**வடிகாலமைப்புச் சபைக்கு ரூ. 15 இலட்சம் நட்டம்**

(மாத்தளை நிருபர்)

மாத்தளை நகர எல்லைக்குள் சட்டவிரோத குடிநீரை பெற்றுகொண்டு நீர் வடிகாலமைப்புச் சபைக்கு சுமார் 15 இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்திய 19 இடங்களை அடையாளம் கண்டுள்ளதாக நீர்வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

சிறு கைத்தொழில் மற்றும் வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பவற்றில் மேற்படி திருட்டுத்தனமாக குடிநீரைப் பெற்றுகொண்டுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதென மேற்படி சபை தெரிவிக்கின்றது.

மாதாந்தம் நீர் விநியோக கட்டணத்தை முறையாக செலுத்தாமல் இருந்தமையால், மேற்படி இடங்களுக்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டதாகவும் இந்த சமயத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக நீர் விநியோகம் பெற்றுக்கொண்டுள்ளதாக தேடுதலின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தங்களின் குற்றத்தை ஒப்புகொண்டுள்ளதால் மேற்படி நட்டதொகையில் ஒரு பகுதியை செலுத்தி மிகுதி நட்டஈட்டுத் தொகையை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செலுத்தி முடிப்பதாக எழுத்துமூலம் மேற்படி நபர்கள் வேண்டிக்கொண்டதற்கினங்க இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் சுமுகமாக தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணம், கொழும்பு-10, மருதானை, விபுலசேன மாவத்தையில் அமைந்துள்ள நீர் வடிகாலமைப்புப் பிரிவின் திடீர் சோதனைக்குழுவும் இரத்மலானை நீர்வழங்கல் வடிகாலமைப்பு தலைமையக காரியாலய பிரதான பொறியியலாளர் கே. பிரமகுமார் உட்பட சுமார் 20 அதிகாரிகள் மாத்தளை பொலிஸாரோடு இணைந்து இந்தத் தீடீர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் மாதங்களில் இத்திடீர் சோதனை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுமென நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவிக்கின்றது.

# கோட்டாபயவின் ஆட்சி நீடிக்கும்வரை நாட்டில் பிரச்சினைகளும் தொடரும்

**இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு**

(க.கிஷாந்தன்)



"இந்த ஆட்சி தொடரும்வரை நாட்டில் பிரச்சினைகளும் தொடரும். எனவே, ஆட்சி மாற்றத்துக்கு மக்கள் தயாராக வேண்டும்" - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (14) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நாட்டுமக்கள் தற்போது சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவருகின்றனர். இதற்கு கொரோனா காரணம் அல்ல. ஏனெனில், எமது நாட்டில் மட்டும் கொரோனா பரவவில்லை. கொரோனாவால் பெரிதும் பாதிக்கப்பட்ட அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பொருளாதாரம் மேம்பட்டுள்ளது. ஊழல் ஆட்சி மற்றும் முறையற்ற முகாமைத்துவம் காரணமாகவே எமது நாடு முன்னேறாமல் உள்ளது.

குறிப்பாக, சேதனப் பசளையை நோக்கி நகரும் முடிவு ஓரிரவில் எடுக்கப்பட்டதாகும். இவ்வாறான முடிவுகளை நீண்டகாலத்தை அடிப்படையாகக்கொண்டு முறையாக எடுத்திருக்க வேண்டும். ஆனால், இங்கு என்ன நடந்தது? உலக சந்தையில் உர விலை குறைந்திருந்த சமயம், உர இறக்குமதிக்கு தடை செய்யப்பட்டது. தற்போது விலை அதிகரித்துள்ளது. இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கம்பனிகள் இலாபமடைந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்று காலத்திலும் எமது தோட்ட மக்கள் தொழிலுக்குச் சென்றனர். பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்தனர். ஆனால் பட்ஜட்டிலோ, ஜனாதிபதியின் சிம்மாசன உரையிலோ எமது மக்களுக்கு எந்த அறிவிப்பும் விடுக்கப்படவில்லை. மானிய நிலையில் கோதுமை மா வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. தற்போது அதுவும் இல்லை.

இந்த அரசு தொடரும்வரை துன்பமும் தொடரும். இன்று ஈபிஎவ், ஈடிஎவ்வில் கை வைத்துள்ளனர். எனவே, மக்கள் இந்த அரசை விரட்டியடிக்க தயாராக வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விடிவு பிறக்கும்" - என்றார்.

# பேஸ்புக் களியாட்டம் சுற்றிவளைப்பு; நான்கு யுவதிகளுடன் 38 பேர் கைது

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் பேஸ்புக் விருந்தில் பங்கு கொண்ட 38 இளைஞர், யுவதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பேஸ்புக் அழைப்பு மூலம் இவர்கள் மேற்படி விருந்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வசமிருந்து ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளையும் கண்டி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி விருந்திற்கு வருகை தந்தவர்கள் கண்டியைச் சூழவுள்ள பிரபல வர்த்தகர்களின் பிள்ளைகள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சொகுசு வாகனங்களில் வந்தே மேற்படி விருந்தில் கலந்துகொண்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதில் 21 முதல் 24 வயதுடைய நான்கு யுவதிகளும் உள்ளடங்குவதாக தெரிய வருகிறது. சந்தேகநபர்களை கண்டி நீதவான் முன் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழன்
www.thamilan.lk

## வணிக உலகம் Business world

GROWTH

# இலங்கை சந்தையிலுள்ள TVP மரபணு ரீதியில் மேம்படுத்தப்பட்ட (GM) உணவா?

மனித மக்கள்தொகை அதிகரிப்பானது விவசாய உற்பத்திக்கு குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது. ஏறக்குறைய 870 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலானோர் ஆபிரிக்கா, ஆசியா மற்றும் தென் அமெரிக்கா போன்ற வளரும் நாடுகளில் உள்ளனர். புரதம் நிறைந்த உணவுகள், மனித ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கு பெரும் பங்களிப்பை செய்கின்றன. பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மற்றும் குறிப்பாக, வறட்சியான பகுதிகளிலுள்ள கிராமப்புற பொருளாதாரங்களில் தங்கியுள்ள மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை கருத்திற்கொள்வதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. பால் மற்றும் இறைச்சி தொழில்கள் அடிமட்ட அடிப்படையை வழங்குவதால், அபிவிருத்தியடைந்துவரும் உலக மக்கள்தொகைக்குப் போதுமான புரதத்தை உற்பத்திசெய்ய விவசாய முறைகள், நில பயன்பாடு, நீர் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் சிக்கல்கள் உள்ளன. மேலும், பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியவை தற்போதுள்ள விவசாய நிலங்களைக் குறைத்து, அதிகரித்து வரும் உணவுத் தேவையை எதிர்கொள்ள கூடுதல் சவால்களை உருவாக்குகின்றன. காலநிலை மாற்றத்தை சமாளிக்க தீர்வுகள் மற்றும் இயற்கை வளங்களுக்கான அதிக தேவை - குறிப்பாக, உணவு உற்பத்தித் துறையில் அவசரமாக தேவைப்படுகிறது.

விவசாய உயிரி தொழில்நுட்பங்களில் மரபணு மேம்பாடு உற்பத்தியை அதிகரிக்க ஒரு தீர்வாகும். Transgenesis என்பது ஒரு பாரம்பரிய DNA மாற்றியமைக்கும் முறையாகும், இது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மரபணுக்களின் அடிப்படையில் விரும்பிய மரபணுக்களுடன் பயிர்களை உருவாக்க பயன்படுகிறது. மரபணு மாற்ற தொழில்நுட்பங்கள் அண்மையில்தான் நிறுவப்பட்டுள்ளன, அவை வெளிநாட்டு மரபணுக்களை இலக்காகக்கொண்டு உள்ளூர் மரபணுக்களை மாற்ற DNA மாற்றத்தை அனுமதிக்கின்றன. உணவுப்பொருட்களின் தரத்தை மேம்படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் வகையில், மரபணு மாற்ற முறைகள் உள்ளிட்ட நவீன உயிரி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இடைநிலை தலைமுறையைப் பயன்படுத்தி வளர்க்கப்படும் பயிர் வகைகள் GM உயிரினங்களாகக் கருதப்படுகின்றன. 147 உணவு மற்றும் தீவனப் பயிர்களின் மெட்டா பகுப்பாய்வு, GM தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதால் இரசாயன பீடைக்கொல்லிகளின் பயன்பாடு 37%, பயிர் விளைச்சல் 22% மற்றும் விவசாயிகளின் இலாபம் 68% குறைந்துள்ளன.

உலகளவில் GM உற்பத்தியானது 1990களின் முதல் தலைமுறை GM பயிர் வணிகமயமாக்கலிலிருந்து வேகமாக வளர்ந்துள்ளது. சந்தையிலுள்ள முக்கிய மரபணு மாற்றப் பயிர்களாவன, சோயாபீன்கள் 77%, சோளம் 32% மற்றும் பருத்தி 80% ஆகும். உலகெங்கிலும் உயர்ந்த அளவிலான உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவது ஒரு முக்கிய கொள்கை முன்னுரிமையாகும். உணவுப் பாதுகாப்பு என்பது உணவுப் பாதுகாப்பில் உள்ளார்ந்த ஒரு கருத்தாகும், இது வேளாண் தொழில்நுட்பம் மற்றும் உணவு உற்பத்தி மற்றும் செயலாக்கத்தின் பல துறைகளில் ஈடுபட்டுள்ளது. உணவு மூலம் பரவும் நோய் உலகளவில் மிகவும் கடுமையான பொது சுகாதார பிரச்சினைகளில் ஒன்றாகும், மேலும் இது நோய்க்கான முக்கிய காரணமாகும் (விவசாய உயிரி தொழில்நுட்பத்தின் பெரிய முன்னேற்றங்கள் பீடைக்கொல்லி மற்றும் பீடை எதிர்ப்பிற்காக மரபணுக்களை வெற்றிகரமாக அனுப்ப செயற்கை மரபணு கையாள்தல்களைப் பயன்படுத்த விஞ்ஞானிகள் அனுமதித்துள்ளனர்).

உலகம் முழுவதும் பல மரபணு மாற்றப்பட்ட (GM) தாவர இனங்கள் உள்ளன. மரபணு மாற்றப்பட்ட (GM) சோயாபீன்களில் மிகவும் பரவலாக வளர்க்கப்படுவது வட்ட சோயாபீன்ஸ் ஆகும், இது பல உணவுகளில் முக்கிய மூலப்பொருளாக உள்ளது. சோயாபீன்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுகள் உலகெங்கிலுமுள்ள சில நாடுகளில் மிகவும் பாரம்பரியமான மற்றும் பழக்கமான உணவுகளுடன் தொடர்புடையவை. எவ்வாறாயினும், வெவ்வேறு மரபணுப் பொருட்களுடன் புதிய பயிர்களை அறிமுகப்படுத்துவது ஒரு தேசத்தால் கவனமாகக் கையாளப்பட வேண்டும். குறைந்த சுற்றுச்சூழல் தாக்கத்துடன் இயற்கை வளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் அதிகரித்துவரும் உலகளாவிய மக்கள்தொகைக்கு உணவு



பாதுகாப்பு ஒரு முக்கிய கவலையாக உள்ளது. சந்தைப்படுத்துதலுக்கு முன் ஒழுங்குமுறை தேவைகளைப் பூர்த்திசெய்ய பாதுகாப்பு மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அத்தகைய உணவுகளை மரபணு மாற்றப்பட்ட உணவுகள் என்று மதிப்பிடுவதன் நோக்கம் என்ன என்று நீங்களே கேட்கலாம். மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தில் புதிய பயிர் தயாரிப்புகளின் தாக்கத்தை மதிப்பிடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பாதுகாப்பு மதிப்பீடு**

GM பயிர்களின் பாதுகாப்பு மதிப்பீட்டில் வழங்கப்படவேண்டிய அறிவியல் சான்றுகள் வெவ்வேறு சட்ட அதிகார வரம்புகளுக்கு இடையே மாறுபடலாம். இருப்பினும், சுற்றுச்சூழல் ஆய்வுகள் GM பயிர்களின் பாதுகாப்பு மதிப்பீட்டில் பொதுவான ஆய்வுகள், டிரான்ஸ்ஜெனிக் சேர்க்கையின் விரிவான மூலக்கூறு பண்புகளை உருவாக்குதல், சட்டபூர்வமான தன்மையை உறுதிசெய்வதற்கான கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு முறைகளின் வளர்ச்சி மற்றும் கூட்டுவாழ்வு கட்டமைப்புகளை செயல்படுத்துதல். நச்சுயியல், ஒவ்வாமை மற்றும் ஊட்டச்சத்து போன்ற பிற ஆய்வுகள், வளர்ந்துவரும் அறிவியல் அறிவு மற்றும் தொழில்நுட்பங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓர் அணுகுமுறையுடன் நடத்தப்பட்டுள்ளன. GM பயிர்களை விலங்குகளுக்கு உணவாகப் பயன்படுத்துவது மனித பாதுகாப்பு குறித்த கவலைகளைக் குறைக்கும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய ஆய்வு**

சுற்றுச்சூழல் அவதானர் மதிப்பீடு ஒரு புதிய GM பயிர் வகை இயற்கை சூழலில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறதா என்பதை தீர்மானிக்கும் நோக்கம் கொண்டது. இந்தச் செயல்பாட்டில், பல்லுயிரியலில் ஏற்படும் பாதிப்புகள், மண் மற்றும் நீரின் தரத்தில் ஏற்படும் மாற்றங்கள், நோய் மற்றும் பீடை கட்டுப்பாடு போன்ற பல காரணிகளைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

ஓர் இயற்கையான தாவர மக்கள்தொகையில், இது விதைகள், தாவரப் பரப்புபவர்கள் அல்லது மகரந்தம் மூலம் ஏற்படலாம், மேலும் அதன் முக்கியத்துவம் தாவரத்திற்குத் தாவரம் மாறுபடும். இருப்பினும், விரைவான அடையாளத்தை ஆதரிக்க அல்லது கலப்பினங்களை அடையாளம் காண / உறுதிப்படுத்துவதற்கு உருவவியல் மற்றும் மூலக்கூறு குறிப்பான்கள் தேவைப்படுகின்றன.

**நச்சுகள் பற்றிய அறிவியல் ஆய்வுகள்**

நச்சுயியல் ஆய்வுகளின் நோக்கம், விரும்பிய மாற்றங்களை வகைப்படுத்துவது மற்றும் இலக்கு அல்லாத உயிரினங்களில் எதிர்பாராத நச்சு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய செயலில் உள்ள பொருட்கள் அல்லது சேர்மங்களை அடையாளம் காண்பதாகும். GM பொருட்களுக்கான அனைத்து நச்சு மதிப்பீடுகளும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பொருளின் நச்சுயியல் அம்சங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும். முறைகள் உடலில் ஒரு குறிப்பிட்ட சேர்மத்தின் நச்சுத்தன்மையை மதிப்பிடுகின்றன, பொதுவாக ஒருமித்த கருத்தை அடைய விலங்கு ஆய்வுகளைப் பயன்படுத்துகின்றன, இலக்கு இனங்கள் மற்றும் முக்கியமான விளைவுகளைக் கருதுகின்றன. இருப்பினும், உணவு ஒக்ஸிஜனேற்றிகள் அல்லது நச்சுகளை அடையாளம் காண புதிய உத்திகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

**இலங்கையில் GM உணவு பற்றிய சட்டம்**

மரபணு மாற்றப்பட்ட உணவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கை ஜனவரி 2007இல் லேபிளிங் தரநிலைகளை அறிமுகப்படுத்தியது. 2006ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட புதிய விதிகளின் (மரபணு மாற்றப்பட்ட உணவின் இறக்குமதி, லேபிளிங் மற்றும் விற்பனை) அடிப்படையில், உணவுகள் அல்லது GM பரபணுக்களைக்கொண்ட அனைத்து உணவுகளும் லேபிளிடப்பட வேண்டும். விற்பனையாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் அவ்வாறு செய்யத் தவறினால் 10,000 ரூபாவரை அபராதம் விதிக்கப்படலாம். நுகர்வோருக்கான தெரிவு நுகர்வோருக்கே விடப்படுகிறது.

இறக்குமதியாளரால் GM இல்லையென உறுதிசெய்யப்பட்ட உணவுப் பொருட்கள், நாட்டின் சுகாதாரப் பணிப்பாளர் நாயகமாகவும் இருக்கும் தலைமை உணவு ஆணையத்தால் (cfa) சான்றளிக்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் இயக்குநர் கூறுகிறார். இதில் இலங்கையும் ஒன்று. 2001ஆம் ஆண்டில், GM உணவுகளை இறக்குமதி செய்வதற்கும், உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் தடை விதித்த முதல் நாடுகளில் ஒன்றின் கீழ் GM உணவைக் கொண்டிருக்கும் பயிர்களின் பட்டியலை அரசாங்கம் வெளியிட்டது, மேலும் இறக்குமதியாளர்களும் ஒப்புதல் பெற வேண்டும். அந்தப் பட்டியலில் சோயா, கோதுமை, தக்காளி மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவை அடங்கும், ஆனால், தற்போதைய லேபிளிங் விதிகள் இல்லை. சில அரசாங்க ஆய்வகங்கள் சட்டத்தை அமுல்படுத்த GM சோதனை வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டிடக் கட்டமைப்பை நிறைவுசெய்து 'Topping Off'ஐ கொண்டாடும் TRI-ZEN

இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான John Keells Properties (JKP) மற்றுமொரு முக்கிய மைல்கல்லை கடந்து TRI-ZEN ஸ்மார்ட் வீட்டுத் திட்டத்தின் மூன்று கோபுரங்களின் கட்டமைப்பு நிறைவின் சிறப்பம்சமாக 'Topping Off' நிகழ்வுடன் கொண்டாடியது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் தலைவர் கிரிஷான் பாலேந்திரா மற்றும் John Keells Propertiesஇன் சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் இந்தத் திட்டத்தில் பங்குதாரர்களாக உள்ளதுடன், இந்நிகழ்ச்சியில் Indra Traders மற்றும் அதன் ஒப்பந்த நிறுவனமான China State Construction Engineering Corporation பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த TRI-ZEN ஊக்குவிப்பு முகாமையாளர் லும்பினி பத்திரகே, "தொற்றுநோயால் முன்வைக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் TRI-ZENஇன் கட்டுமானத்தை சீரான வேகத்தில் முன்னெடுப்பதில் எங்கள் குழுக்களின் கடின உழைப்பை அங்கீகரிப்பதற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறோம். இந்த மைல்கல்லின் மூலம், நாங்கள் இப்போது கட்டுமானத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம், மேலும் இந்த அடுக்குமாடி குடியிருப்புகளை 2023இற்குள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவோம் என்று நம்புகிறோம்" எனத் தெரிவித்தார்.

உலகெங்கிலுமுள்ள கட்டிட நிர்மாணிப்பாளர்களிடையே ஒரு பாரம்பரியம் என்னவென்றால்,




topping off நிகழ்வில் இறுதிக் கட்டிட கட்டமைப்போடு தொடர்புடைய கட்டுமான நிர்மாணிப்பு நிறைவடைந்தமை மற்றும் கட்டமைப்பு கட்டுமானத்தைச் செய்யும் ஊழியர்களின் வெற்றி மற்றும் உள்ளக கட்டுமானத்திற்கு மாறியதற்கான மகிழ்ச்சியை கொண்டாடுவதற்கே ஆகும்.

TRI-ZEN ஸ்மார்ட் ஹோம் 52, 54 மற்றும் 52 மாடிகளில் மூன்று கோபுரங்களுடன் கட்டப்படும் மற்றும் கொழும்பில் 891 ஸ்மார்ட் வீடுகளைக் கொண்டிருக்கும். இரண்டு நீச்சல் குளங்கள், இரண்டு சொகுசு உடற்பயிற்சிக் கூடங்கள், ஒரு மேல்மாடி பூப்பந்து மைதானம், ஒரு உணவகம் மற்றும் ஒரு மினிமார்ட் உட்பட 35இற்கும் மேற்பட்ட வசதிகளுடன், TRI-ZENஆனது குடியிருப்பாளர்களுக்கு நவீன, உலகத் தரம் வாய்ந்த, ஸ்மார்ட் வாழ்க்கை முறையை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

"கடந்த மூன்று ஆண்டுகளில் நமது நாடு எதிர்கொண்ட முன்னோடியில்லாத சவால்கள் இருந்தபோதிலும், இந்த மைல்கல்லை சரியான நேரத்தில் எட்டியது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இது எங்கள் தனித்துவமான குழுவின் தைரியம், உறுதிப்பாடு மற்றும் நிபுணத்துவம் மற்றும் John Keells Propertiesஇன் வலிமை மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஒரு சான்றாகும்" என காணிக் கட்டட விற்பனை குழுமத்தின் தலைவர் நயனா மாவில்மடா தெரிவித்தார்.

இலங்கையின் நகர்ப்புற வாழ்க்கை முறையை மறுவரையறை செய்யும் நோக்கில் இந்தத் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்தோம். TRI-ZENஇல் நாம் அவதானித்த விடயம்தான் விற்பனை சாதனை, இந்த உட்பார்வையானது முதலீட்டாளர்கள் மற்றும் வீடு வாங்குபவர்கள் இருவராலும் சமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் காட்டுகிறது. நிலையற்ற பொருளாதாரம் நிலவிய காலங்களில், ரியல் எஸ்டேட் சில நேரங்களில் முதலீடுசெய்ய மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் நிலையான சொத்தாகும். TRI-ZENஇன் தனித்துவமான கருத்தாக்கம், கொழும்பில் அதன் மைய இடம் மற்றும் John Keells Propertiesஇன் இணையற்ற நம்பகத்தன்மை ஆகியவை இத்திட்டத்தை மற்ற திட்டங்களிலிருந்து உண்மையிலேயே வேறுபடுத்தியுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு யூனியன் பிளேஸின் மையப்பகுதியில் அமைந்துள்ள TRI-ZENஇல் அமைந்துள்ள ஒவ்வொரு வீடும் ஒரு ஏக்கருக்கும் அதிகமான இடத்துக்கு மேலதிகமாக ஆடம்பரத்தையும் வசதியையும் வழங்கும் வகையில் அதிநவீன வடிவமைப்பைக் கொண்டுள்ளது.

இந்தக் கட்டிடங்கள் ஒவ்வொன்றும் ஒன்று, இரண்டு மற்றும் மூன்று படுக்கையறைகளைக் கொண்டவை, மேலும் இரண்டு படுக்கையறைகள் கொண்ட வீடானது 37 மில்லியன் ரூபாவிலிருந்து தொடங்குகிறது. இந்த வீடுகள் ஒவ்வொன்றும் அதிநவீன ஸ்மார்ட் ஹோம் தொழில்நுட்பங்கள் மற்றும் வடிவமைப்புகளுடன் பொருத்தப்பட்டுள்ளன, இது குடியிருப்பாளர்கள் ஆடம்பரமான மற்றும் நவீன சூழலில் வாழ அனுமதிக்கிறது.

இதுதொடர்பான மேலதிக தகவல்களுக்காக TRI-ZEN இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

திகதி 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4677
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,617,880.00
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 2 2 2 7 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 43,991,724.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் : 2972
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,208,040.00
ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கங்கள் 13 16 38 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,154,372.00

Mega POWER மெகா பவர் 15
சீட்டிழுப்பு இலக்கம் 1025 | இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,836,580.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 235,700,246.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
F 19 23 67 70 74

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 707
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,269,760.00
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 02 29 36 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,191,730.80

ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0018
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,219,100.00
தனுசு | வெற்றி இலக்கங்கள் 01 25 41 42
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,759,838.24

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1211
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,835,920.00
துலாம் | வெற்றி இலக்கங்கள் 3 2 4 3 3 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,166,393.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 667 000, 0112 324 324 | பெக்ஸ்: 0114 669 416

# 13ஆவது திருத்தச் சட்டம் சர்வதேச ஒப்பந்தம் என்பதாலேயே சாகாமல் இருக்கிறது

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி, இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் கையொப்பமிடுவதற்காக மிரட்டப்பட்டார்களா அல்லது யாராவது ஏதும் சொன்னார்களா என்று தெரியவில்லை என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே 13ஐ எதிர்க்கிறீர்கள் ஏன்? என்ற கேள்விக்கு பதிலளித்த சிறீதரன் எம். பி.,

நான் மட்டுமே 13ஐ எதிர்க்கவில்லை. சம்பந்தன் ஐயாகூட ஆரம்பத்திலிருந்தே 13ஐ எதிர்த்தார். சவப்பெட்டிக்கு இறுதி ஆணியும் அடித்து அதனை நாம் அனுப்பிவிட்டோம் என்று 13ஐ பற்றி 2000ஆம் ஆண்டுகளில் சம்பந்தன் ஐயா சொல்லியிருந்தார்.

1987இல் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் சம்பந்தன் ஐயாவும் 13ஐ ஏற்கவில்லை. 2008 தேர்தலிலும் பங்கேற்கவில்லை.

13ஆவது திருத்தச் சட்டம் சர்வதேச ஒப்பந்தம் என்பதாலேயே சாகாமல் இருக்கிறது. நாட்டுக்குள் எழுதப்பட்ட டட்லி – செல்வா, பண்டா – செல்வா, ரணில் – பிரபாகரன் ஒப்பந்தங்களுக்கு எல்லாம் என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும்.

சுதுமலை பிரகடனத்தின்போது தலைவர் பிரபாகரன் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை தமக்கு படிக்கத் தரவில்லை என்றும் வாசித்தே காண்பிக்கப்பட்டது எனவும் கூறியிருந்தார்.

அவர் அதனை ஒருபோதும் ஏற்கவில்லை. சம்பந்தன் ஐயாவும் எதிர்த்தே வந்தார். எனினும் எந்தக் காரணத்துக்காக, ஏன் சம்பந்தன் ஐயா இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பம் வைத்தார் என்பது அதிசயமாக இருக்கிறது.

இந்தக் கடிதத்தில் கையொப்பமிட முன்னர் அரசியல் குழுக் கூட்டத்தை கூட்டி முடிவு எடுப்போம் என்று மாவை சேனாதிராசாவிடம் கேட்டேன். கதைப்போம்: கதைப்போம் என்று பிற்போட்டு விட்டு அவர் சென்று கையொப்பமிட்டுவிட்டு வந்துவிட்டார்.



இதன் பின்னால் என்ன சக்தி இருக்கிறது என்று தெரியாது. அவர்கள் வெருட்டப்பட்டார்களா? (மிரட்டப்பட்டார்களா) அல்லது யாராவது ஏதும் சொன்னார்களா? என்று தெரியாது. அவர்கள் தலைமை மட்டம் என்ன நடந்தது என்று தெரியாது – என்றார்.

# சிறப்புற இடம்பெற்ற ஜெயப்பிரசாந்தியின் ‘சமுதாய வெளிப்பாடாக இலக்கியம்’ விமர்சனக் கட்டுரை நூல் வெளியீடு











(யாழ். நிருபர்)

படைப்பாக்க முயற்சிகளிலும் ஆய்வு முயற்சிகளிலும் ஊக்கத்துடன் செயற்பட்டுவரும் செல்வி ஜெயப்பிரசாந்தி ஜெயபாலசேகரம் எழுதிய ‘சமுதாய வெளிப்பாடாக இலக்கியம்’ விமர்சனக் கட்டுரை நூல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (13) வடமராட்சி கிழக்கு கலாசாரப் பேரவையின் வெளியீடாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலரும், வடமராட்சி கிழக்கு கலாசாரப் பேரவையின் தலைவருமான கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து சென். ஹென்றிஸ் கல்லூரியின் பிரதி அதிபர் அருட்திரு ஆன்சன் றெஜிக்குமார் ஆசியுரை ஆற்றினார்.

கலாசார உத்தியோகத்தர் செல்வசுகுணா வரவேற்புரை நிகழ்த்தினார். மருதங்கேணி உதவிப் பிரதேச செயலர் ப.தயானந்தன் வாழ்த்துரை நிகழ்த்தினார். தலைமையுரையைத் தொடர்ந்து நூலின் வெளியீட்டுரையை ஜீவநதியின் பிரதம ஆசிரியர் க. பரணீதரன் வழங்கினார்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரபாகர மூர்த்தியும், நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் தமிழ்மாறனும் இணைந்து நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை ஆணிவேர் சமூக அபிவிருத்தி அமைப்பின் சார்பாக அதன் உறுப்பினரும் ஊடகவியலாளருமான ஜெ.பானுசந்தர் பெற்றுக்கொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்பீட விரிவுரையாளர் அ.பௌநந்தி மற்றும் எழுத்தாளர் ந.மயூரரூபன் ஆகியோர் நூலின் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினர்.

பிரதம விருந்தினர் உரையினைத் தொடர்ந்து ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் ஜெயப்பிரசாந்தி நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்வில் அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பொதுமக்களின் கனவு நனவாக வேண்டும் என்று திறக்கப்பட்ட கதவே 13ஆவது திருத்தச்சட்டம்

## சிவசக்தி ஆனந்தன்

(வவுனியா நிருபர்)

எமது தலைவர் பொதுமக்களின் கனவு நனவாக வேண்டும் என்ற அடிப்படையில் முதலாவது சந்தர்ப்பமாக எங்களை நோக்கி திறக்கப்பட்ட கதவாகவே இந்த 13ஆவது திருத்தச்சட்டத்தை பார்த்தார் - என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டில் நீடித்துக்கொண்டிருந்த தமிழ்த் தலைவர்கள் திடீரென 13ஐ நோக்கி செல்ல காரணம் என்ன என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தலைவர்கள் 13ஐ நோக்கிச் சென்றார்கள் என்ற கருத்து முற்றிலும் தவறானது. குறிப்பாக, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 13ஐ நோக்கி நகர்கின்ற எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் துணைபோகவும் இல்லை. துணைபோகப்போவதும் இல்லை.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அதன் பின்னர் 13ஆவது திருத்தச்சட்டம் ஏற்படுத்தப்பட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை அமைந்தது. அந்த வேளையில் அறவழியில் இருந்த தமிழ்த் தலைவர்கள் அதனை எதிர்த்தனர். ஆனால், எங்களுடைய பெருந்தலைவர் பத்மநாபா முதலாவது தடவையாக ஈழ விடுதலைப் போராட்டத்தில் வித்தாகிய தங்களை ஈகம் செய்த எத்தனையோ தோழர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்களின் கனவு நனவாக வேண்டும் என்ற அடிப்படையில் முதலாவது சந்தர்ப்பமாக எங்களை நோக்கி திறக்கப்பட்ட கதவாகவே இந்த 13ஆவது திருத்தச்சட்டத்தை பார்த்தார்.

இதில், நீங்கள் தெளிவாக ஒரு விடயத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். வேறு கட்சித் தலைவர்கள் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட்டார்கள். பதவிகளை பெற்றார்கள். ஆனால், தோழர் பத்மநாபா எமது கட்சியிலுள்ள ஒரு தோழரைத்தான் முதலமைச்சர் பதவிக்கு முன்மொழிந்தார். அவர் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்படவில்லை. இதுதான் வரலாறு. அதனை மீண்டும் பேசவேண்டிய அவசியம் இல்லை.

அப்போது, 13ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் மாகாண சபை உருவாக்கப்பட்டு நாங்கள் வெறும் 15 மாதங்கள்தான் இந்த மாகாண சபையை நிர்வகித்திருக்கின்றோம். நாங்கள் அப்பொழுதே மிகத் தெளிவாக ஒற்றை ஆட்சிக்குள் உள்ள 13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்குரிய தீர்வு அல்ல என்று கூறினோம். அப்போது, இந்த விடயத்தை முதலில் ஏற்று முன்னகர்த்துகின்றபோது படிப்படியாக பிராந்தியத்துக்கான சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி கட்டமைப்புடனான ஒரு தீர்வை வழங்குவதாக ராஜீவ்காந்தி வாக்குறுதி அளித்திருந்தார்.

அடிப்படையில் எதுவுமே இல்லாத நிலையில்தான் நாங்கள் வடக்கு, கிழக்கு மாகாண சபையை கையில் எடுத்தோம். வெறுமனே 15 மாதங்களுக்குள் தலைநகராக திருகோணமலையை நிர்ணயித்து அங்கு வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான கட்டடம் உட்பட அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கினோம். அது எங்கள் தலைமையின் நிர்வாகத்திறனின் வெற்றி. அந்த அடிப்படையில் படிப்படியாக நாங்கள் முன்னகர்கின்றபோது இந்த 13ஆவது திருத்தத்தில்



இருக்கின்ற குறைபாடுகள் பற்றி மிகத் தெளிவாக நாங்கள் புரிந்துகொண்டோம்.

நாம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி படிப்படியாக நகர்ந்து சென்ற முயற்சி அப்போது முடக்கப்பட்டது. இருந்தாலும் குறிப்பாக, பிரேமதாசவிடமும் அதேபோன்று ஜே.ஆரிடமும் மிகத் தெளிவாக 13இற்கு மேலாக செல்லவேண்டிய விடயங்கள் குறித்தும் அதிகாரப்பகிர்வுக்கான விடயங்களில் என்ன செய்யவேண்டும், என்ன குறைபாடுகள் இருக்கின்றன உள்ளிட்ட சகல விடயங்களையும் அவர் எழுத்துமூலமாக வழங்கியிருந்தார்.

ஆகவே நாங்கள் அன்றும் 13ஆவது திருத்தச்சட்டத்தை தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்கின்ற விடயமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதேநேரத்தில் தற்பொழுது சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் கூட்டுமுயற்சியில் தமிழ்ப்பேசும் கட்சிகள் சேர்ந்து 13ஐ வலியுறுத்தி அதை நடைமுறைப்படுத்த முயற்சிப்போம் என்ற முயற்சி எடுக்கப்பட்டது. இது 13இற்குள் எங்கள் மக்களின் அபிலாஷைகளை சுயநிர்ணயத்தை அதிகாரப்பகிர்வு விடயங்களை முடக்குவதற்கான நகர்வு அல்ல. இது ராஜபக்ஷ அரசாங்கத்தை அம்பலப்படுத்துவதற்கான நகர்வு - எனத் தெரிவித்தார்.

# வவுனியாவில் கொரோனா நோயாளர்கள் அதிகரிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனா நோயாளர்கள் அதிகரித்து வருவதாக வவுனியா பொது வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் மக்கள் அண்மைக்காலமாக சுகாதார வழிமுறைகளை சீராக பின்பற்றாமையினாலேயே கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், சாதாரண தடிமன், காய்ச்சல், சளி போன்ற அறிகுறிகளுடன் காணப்படும் நோயாளர்கள் மருத்துவ சிகிச்சையைப் பெற முற்படாத நிலையில் மூச்சு எடுப்பதில் சிரமமான நிலையிலேயே வைத்தியசாலையை நாடுவது பாரிய விளைவுகளை நோயாளருக்கும் மாவட்டத்துக்கும் ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் வவுனியா வைத்தியசாலையில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப் பட்ட சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது பரிசோதனையில் குறித்த நபர் கடும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை தெரியவந்துள்ளது எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முல்லைத்தீவின் ஹிஜ்ராபுரம் சுதா பாலர் பாடசாலை மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஹிஜ்ராபுரம் சுதா பாலர் பாடசாலை மாணவ மணிகளின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்ச்சியும் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மாணவச் செல்வங்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

பிரதேச சபை உறுப்பினர்கள், பாடசாலை சமூகத்தினர், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்குக்கு வருகைதந்த ஹட்டன் நெஷனல் வங்கியின் தலைவர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு







(யாழ். நிருபர்)

ஹட்டன் நெஷனல் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவர் திருமதி அருணி குணதிலக்க தனது வடக்குக்கான பயணத்தின்போது வங்கியின் வாடிக்கையாளர்களான தொழில் முயற்சியாளர்களை சந்தித்ததுடன், வங்கியின் கூட்டு சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டங்கள் ஊடான உதவிகளையும் வழங்கினார்.

கடந்த வியாழக்கிழமை வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த அவர் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார்.

இதன்போது பணிப்பாளர் சபைத் தலைவர் திருமதி அருணி குணதிலக்கவின் தலைமையில் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு நோயாளிகளுக்கு தேவையான கட்டில்கள் வழங்கப்பட்டன.

ஹட்டன் நெஷனல் வங்கியினால் புற்றுநோய் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து பல்வேறுபட்ட உதவிகள் சமூகப் கூட்டுப் பொறுப்பு செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், ஹட்டன் நெஷனல் வங்கியின் மன்னார் கிளையினால் மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பினூடாக வலுப்பெற்றுவரும் தொழில் முயற்சியாளர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டன. அந்த நிகழ்விலும் பங்கேற்ற வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவி மன்னார் மறைமாவட்ட ஆயரையும் சந்தித்தார்.

வடக்கிலுள்ள வங்கிக் கிளைகளுக்குச் சென்ற பணிப்பாளர் சபைத் தலைவர் திருமதி அருணி குணதிலக்க, தொழில் முயற்சியாளர்களை சந்தித்து கலந்துரையாடினார்.











முல்லைத்தீவின் பல்வேறு பகுதிகளுக்கும் அண்மையில் விஜயம் மேற்கொண்ட மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், அங்குள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடியதுடன், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 04 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பொது சமூக சேவைகள் அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளையும் அத்தியாவசிய உபகரணங்களையும் வழங்கினார்.

# தாயார் கைத்தொலைபேசியை தராததால் தற்கொலை செய்துகொண்ட மாணவன்

## அநுராதபுரத்தில் சம்பவம்

தனது தாய் கைத்தொலைபேசியைக் கொடுக்க மறுத்ததால் 12 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்று அநுராதபுரம் தஹயியாகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அநுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரியின் ஏழாம் தர மாணவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைத்தொலைபேசியில் பல்வேறு விளையாட்டுகளை விளையாடும் பழக்கம் கொண்ட குறித்த மாணவன் கல்வி நடவடிக்கைகளில் கவனம்செலுத்தாததால் கடந்த 11ஆம் திகதி அவரது தாயார் சிறுவனைத் திட்டிவிட்டு, கைத்தொலைபேசியை பறித்துச் சென்றுள்ளார்.

இதனால் கோபமடைந்த சிறுவன் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இணையம் ஊடான கற்றலின்போது தாயாரின் கைத்தொலைபேசியை பயன்படுத்திய குறித்த மாணவன் மொபைல் விளையாட்டுகளில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

சிறுவனின் தாயார் அரசாங்க நிறுவனத்தில் எழுதுவினைஞராகவும் தந்தையார் தனியார் பஸ் நிறுவன ஊழியராகவும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின் பகிர்ந்தளிக்கும் மத்திய நிலையம் முற்றுகை

## வெல்லவாயவில் விசேட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் ஒருவரும் கைது



வெல்லவாய, பரகஸ்மங்கட பிரதேசத்தில் மொனராகலை பிரதேச குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது, அந்த பிரதேசத்தில் வீடொன்றில் முன்னெடுக்கப்பட்டு வந்த ஹெரோயின் போதைப்பொருளை பகிர்ந்தளிக்கும் மத்திய நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவ்விடத்திலிருந்த சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பின்போது ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்வதற்காக சந்தேகநபரினால் பொதி செய்யப்பட்டிருந்ததாகவும் அவரிடமிருந்து 03 கிராம் 142 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டிலிருந்த சந்தேகநபர் ஹெரோயின் போதைப்பொருள் பொதியிட்டு அந்த பிரதேசம் முழுவதும் விநியோகித்துள்ளதுடன் அந்த இடத்திலிருந்து கைப்பேசி, ஹெரோயின் போதைப்பொருள் நிறைபார்ப்பதற்காக பயன்படுத்தப்படும் இலத்திரனியல் தராசு மற்றும் பக்கெட்டில் அடைப்பதற்காக பயன்படுத்தப்படும் ஈயத் தாள்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தணமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த நிவாரணக் கொடுப்பனவு ஓட்டமாவடியில்

(மட்டக்களப்பு)



சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த நிவாரணக் கொடுப்பனவு ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவில் நேற்று(14) உதவி பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.அல்- அமீன் தலைமையில் இடம்பெற்றது.

மாஞ்சோலை 207A சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த சமுர்த்தி கொடுப்பனவு நேற்று வழங்கி வைக்கப்பட்டது. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் கலந்து கொண்டதுடன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.எம்.நூறுதீன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் எம்.என்.எம்.சாஜஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்: எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கண்டனம்

சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலை ஓர் இழிவான தாக்குதலுக்கு இணையானதாக வெறுப்புடன் கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுடன் இணைந்து அவரது வேதனைகளை பகிர்ந்து கொள்ளும் அதேவேளை, இவ்விடயத்தில் அவருக்கு எமது மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவிக்க விரும்புகின்றோம் என்பதோடு அவருக்கு தேவைப்படும் உதவிகளை தயக்கமின்றி வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அவமானகரமான குண்டர் தாக்குதல் குறித்து வெளிப்படையாக, பாரபட்சமற்ற, நியாயமான விசாரணையை நடத்தி, இதனுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

கருத்து சுதந்திரமானது அனைவரதும் உரிமையாகும் என உலக மனித உரிமைகள் பிரகடனம் மூலமும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனம் மூலமும், மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய பிரகடனம் மூலமும் எங்கள் நாட்டு அரசியல் யாப்பின் மூலமும் மிகத் தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, அது எவ்வாறான சூழ்நிலையிலும் புறக்கணிக்கப்பட முடியாது என்பதும் அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஊடக சுதந்திரம் என்பதனால் கருதப்படுவது யாதெனில், விமர்சிப்பது மற்றும் அதற்கு எதிரான கருத்துகளை தெரிவிப்பதற்குள்ள சுதந்திரத்தையாகும் என ஜோர்ஜ் ஓவல் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் நான்காவது ஜனநாயக தூணாக கருதப்படும் ஊடகங்கள் அல்லது ஊடகவியலாளர்கள் மீது எந்தவிதமான தணிக்கையையும் விதிக்க முடியாது என்றும் விதிக்க முடியுமான ஒரே ஒரு தணிக்கையானது "சுய தணிக்கையாகும்" என்பதை உறுதியாக நம்புகிறோம். ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுக்கும் இது பொருந்தும் என்பதால் ஊடக சுதந்திரத்துக்காக போராடும் அனைவருடனும் எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி நாம் அவர்களுடன் கைகோர்க்கிறோம் என்பதை கூறிக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வலம்புரி கவிதா வட்டத்தின் கவின் கமல் நினைவு சர்வதேச கவிதைப் போட்டி பரிசளிப்பு விழா



(அஷ்ரப் ஏ. சமத்)

வலம்புரி கவிதா வட்டம் 1981 இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் ஸ்தாபக பொதுச்செயலாளர் மறைந்த கவிஞர் கவின் கமல் (இர்சாத் கமால்தீன்) ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டி 2020, மற்றும் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (13) காலை கொழும்புத் தமிழ் சங்கத்தில் நடைபெற்றது.

இதன்போது "கவின் கமல்" நினைவு மலரை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் வகவத்தின் ஸ்தாபக குழு இயக்கத்தின் தலைவர் கவிஞர், டாக்டர் தாஸிம் அகமதிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேலும் வகவத்தின் ஸ்தாபக ஏனைய உறுப்பினர்களான டாக்டர்.எம்.எச்.நூர்தீன், மேமன் கவி, கலைக் கமல், பிரபல வர்த்தகர் எஸ்.ரவீந்திரன், தமிழ்மாமணி அல்-அசூமத், டாக்டர் தி. ஞானசேகரன், ஸ்தாபக்குழுவின் செயலாளர் வகவம் திருமதி வசந்தா தயாபரன் ஆகியோர் வகவம் 40 வருடகாலமாக இலங்கையில் மட்டுமே இவ்வாறானதொரு பழம் பெரும் கவிதைக்குமட்டுமான ஓர் இயக்கம் உள்ளதைப் பாராட்டிப் பேசினார்கள்.

இந் நிகழ்வில் கவிஞர் முல்லை முஸ்ரிபா கௌரவிக்கப்பட்டார். சூம் வடிவில் முதல் பரிசு பெற்ற தமிழ்நாடு மோகன் குமார் 25 ஆயிரம் ரூபா, விருது சான்றிதழ், புரவலர் ஊடாக தமிழ் நாட்டில் வைத்து வழங்கப்படும். இக் கவிஞர் சூம் ஊடாக தனது கவி பொழிந்தார். இரண்டாம் இடத்தினைப் பெற்ற கிண்ணியா அ. கௌரிதாசன் 12 ஆயிரத்து 500 ரூபாவையும் விருதினையும் அதிதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார். மேலும் மூன்றாம் இடத்தினை பெற்ற பாலமுனை பாருக் சூம் ஊடாக தனது கவிதையையும் பாடியமை குறிப்பிடத்தக்கது.

# மேல் மாகாணத்தில் விசேட சுற்றிவளைப்பில் 1,505 பேர் கைது

நீதிமன்ற விசாரணைகளை புறக்கணித்த 707 பேர் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 505 பேர், மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் கைதாகியுள்ளனர்.

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைய, நேற்று முன்தினம் (13) காலை 08 மணி முதல் மாலை 05 மணி வரை இந்த சுற்றிவளைப்புகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது, நீதிமன்ற விசாரணைகளை புறக்கணித்த 707 பேரும், பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 63 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மோசடி செயலுடன் தொடர்புடைய 616 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஊடகவியலாளர் சமுதித்தவின் வீடுமீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்

## உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் அறிக்கை

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீடுமீது ஆயுதம் தாங்கிய நபர்களால், நேற்று (14) அதிகாலை நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அச்சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஊடக சுதந்திரத்துக்கு இவ்வாறு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி, ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் நபர்களை பாதுகாப்பதே இத்தகைய தாக்குதல்களின் நோக்கம் என்பது தெளிவாகின்றது. ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி 'கறுப்பு ஜனவரி' நினைவுகூரப்பட்டு ஒரு மாதம் நிறைவடைவதற்குள் இத்தகையதொரு தாக்குதல் இடம்பெற்றுள்ளமை ஊடக சமூகத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது. ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக கடந்த காலங்களில் குற்றங்கள் இழைத்தவர்கள் இன்னும் சட்டத்தின்முன் நிறுத்தப்படாமல், சுதந்திரமாக உலா வருவதும் இப்படியான தாக்குதலுக்கு ஆசிர்வாதமாக அமைவதாக எமது சங்கம் கருதுகின்றது.

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீடுமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து, குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சமுதித்த சமரவிக்ரமவின் ஊடகப் பணி தொடர்பில் ஏதேனும் தரப்பினருக்கு பிரச்சினை இருப்பின், அது தொடர்பில் நாட்டின் சட்டத்துக்கு அமைவாக உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். அதைவிடுத்து ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகைய கோழைத்தனமான தாக்குதலை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க இலங்கையிலும் சர்வதேச அளவிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள எமது சங்கம் தயங்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிலியந்தலையில் அமைந்துள்ள ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நேற்று (14) அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், காவிந்த ஜயவர்தன, கயந்த கருணாதிலக மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் பார்வையிட்டனர்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு மானியத் தொகை முந்தல் பிரதேச பிரிவில் வழங்கிவைப்பு



(ரஸீன் ரஸ்மின்)

சுபீட்சத்தின் நோக்கத்துக்கமைய, சமுர்த்தி பயனாளிகளுக்காக அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத் தொகை நாடளாவிய ரீதியில் நேற்று (14) முதல் வழங்கப்பட்டுவரும் நிலையில், புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளிலும் குறித்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

அரசாங்கத்தினால் சமுர்த்திப் பயனாளிகளுக்கு அதிகரித்து வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவு சமுர்த்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண் நிதி, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் ஆலோசனையில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திகாவின் மேற்பார்வையில் முந்தல், மங்கள எளிய மற்றும் மதுரங்குளி ஆகிய மூன்று சமுர்த்தி வங்கிகளுக்கும் உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த கிராம சேவகர் பிரிவில் கடமைபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்படி, முந்தல் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முந்தல் சமுர்த்தி வங்கி ஊடாக 02ஆயிரத்து 271 பயனாளிகளுக்கும், மங்கள எளிய சமுர்த்தி வங்கி ஊடாக 02ஆயிரத்து 170 பயனாளிகளுக்கும், மதுரங்குளி சமுர்த்தி வங்கி ஊடாக 02ஆயிரத்து 482 பயனாளிகளுக்கும் என மொத்தமாக 06ஆயிரத்து 923 பயனாளிகளுக்கு அதிகரித்த சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக முந்தல் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ஆர்.டி.ஏ.ஐ. ஆரியரத்ன தெரிவித்தார்.

# ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியிடமிருந்து இலங்கை இராணுவ அமைதிகாக்கும் குழுவுக்கு பாராட்டு




ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகத்தின் சிறப்பு பிரதி பிரதிநிதியும் மாலியில் ஐ.நா. அமைதிகாக்கும் பணிகளின் தலைவருமான எல். காசிம் வானே, சனிக்கிழமை (12) இடம்பெற்ற மாலியிலுள்ள இலங்கை இராணுவ அமைதிகாக்கும் படையினருக்கான உத்தியோகபூர்வ சின்னம் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் மாலியில் ஐ.நா. அமைதிகாக்கும் தளங்களுக்கான விநியோக செயற்பாட்டில் ஆற்றிவரும் நடவடிக்கைகள் இலங்கை இராணுவ அமைதிகாக்கும் குழுவினர் சிறந்த பங்களிப்புகளை வழங்கி வருவதோடு, இலங்கை இராணுவ குழுக்கள் மாலியில் ஆற்றிவரும் நடவடிக்கைகள் விலைமதிப்பற்றவை என பாராட்டு தெரிவிக்கும் வகையில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மாலியில் ஐ.நா. அமைதிகாக்கும் பணிகளை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்பவிருக்கும் இலங்கை குழுவின் மரியாதை அணிவகுப்பில் கலந்துகொண்டமை தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, ஐ.நா. மினுஸ்மா நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமைதிகாக்கும் குழுக்களின் தளங்களை சென்றடைவதற்கான பாதைகள் மிகவுமும் தூரமானதும் கடினமானதுமாக அமைந்திருந்தாலும் இலங்கை அமைதிகாக்கும் குழுக்களின் பணிகளை அங்கீகரிக்கும் விதமாகவே அவர்களின் அணிவகுப்பு நிகழ்வில் கலந்துகொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் , எல். காசிம் வானேவின் டுவிட்டர் பதிவுக்கு பின்னூட்டம் ஒன்றை பதிவிட்டுள்ள மாலியில் ஐ.நா. அமைதிகாக்கும் பணிகளின் கிழக்கு பிரிவின் முன்னாள் தளபதி, இலங்கை அமைதிகாக்கும் குழு மிகவும் நம்பகமான சிப்பாய்களை கொண்டு செயற்படுவதாகவும் அதனால் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி மேற்கண்டவாறு பதிவிட்டமைக்காக நன்றியும் கூறியுள்ளார்.

தற்போதும், ஜிஹாதி கிளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பழங்குடியின மக்களை பாதுகாக்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதோடு, இலங்கை இராணுவத்தின் 20 அதிகாரிகளும் 223 சிப்பாய்களும் இப்பணிகளுக்கு பங்களிப்பை வழங்குகின்றனர். 2017 ஆம் ஆண்டு முதல், ஐ.நாவின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை இராணுவம் மாலிக்கு தொடர்ச்சியாக இவ்வாறான பணிகளுக்காக படையினரை அனுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

காசிம் வானே, இலங்கைக்கு விஜயம் செய்த தூதுக்குழுவுடனான சந்திப்பின்போது நிலத்தால் சூழப்பட்ட மாலியில் சேவையாற்றும் இலங்கை இராணுவ அமைதிகாக்கும் பணிக்கான பயிற்றுவிப்பு நிறுவனத்துக்கு பாராட்டுகளைத் தெரிவித்திருந்தார். இதன்போது சவாலான சூழலில் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தி வரும் இலங்கை படையினருக்கு பாராட்டுகளை தெரிவித்திருந்தார்.

# வர்த்தகரை கடத்தி கப்பம் கோரிய நபர்களுக்கு நேர்ந்த கதி!

**லொறி செயலிழந்ததால் சிக்கினர்**

(குமார விக்கிரமாராச்சி)

தெல்தோட்டப் பகுதியில் வர்த்தகர் ஒருவரை கடத்தி மூன்று இலட்சம் ரூபா பணத்தை கப்பமாக கோரிய இருவரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தெல்தோட்டையிலுள்ள தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு வீட்டுக்குச் செல்லத் தயாரான வர்த்தகர் மீது இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவரைக் கொலைசெய்வதற்காக மற்றுமொரு குழுவிடமிருந்து ஐந்து இலட்சம் ரூபா பணம் கோரப்பட்டதாகவும் அதனைத் தவிர்ப்பதாயின் மூன்று இலட்சம் ரூபா வேண்டுமென்றும் கோரியுள்ளனர்.

தன்னிடம் அவ்வளவு தொகை இல்லையெனத் தெரிவித்த வர்த்தகர் சிறு எண்ணிக்கையை வங்கி தானியக்க இயந்திரத்திலிருந்து பெற்றுத்தருவதாக கூறியுள்ளார்.

இதனையடுத்து லொறியொன்றில் வர்த்தகரை ஏற்றிக்கொண்டு வங்கியை நோக்கிப் பயணிக்கையில் அந்த லொறி இயந்திரக் கோளாறு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. வர்த்தகரை கடத்திவந்த நபர்கள் இருவரும் இயந்திரக் கோளாறு தொடர்பாக பரிசோதனை செய்துகொண்டிருந்தபோது வர்த்தகர் அங்கிருந்து தப்பிச்சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



# சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆதிவாசி பெண்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோட முயற்சி!

(நிமல் ஜயரத்ன)

திம்புலாகலை வீடொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆதிவாசி பெண்கள் நால்வர் உட்பட பன்னிருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டில் நீண்டகாலமாக இவர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது ஆதிவாசி பெண்கள் தப்பியோட முயற்சித்ததாகவும் அவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதானவர்கள் 40 முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மனம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அசேல சரத் குமார தலைமையிலான குழு இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளது.

# பாட்டியின் மரணச்சடங்குக்கு வந்த இராணுவ வீரர்கள் அட்டகாசம்

**இளைஞர் மீது தாக்குதல் நடத்தியதால் கைது**

லுணுகம்வெஹரவில் பாட்டியின் மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்காக விடுமுறை பெற்றுக்கொண்டு வந்த இராணுவ வீரர்கள் இருவர் இளைஞர் ஒருவரை கடுமையாகத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் லுணுகம்வெஹர இலுக்பெலஸ்ஸ என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் (13) இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தாக்குதல் நடத்திய இராணுவ வீரர்கள் இருவரும் சகோதரர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பாட்டியின் மரணச்சடங்குக்காக இந்தச் சகோதரர்கள் இருவரும் வீட்டுக்கு வந்துள்ளனர். இதன்போது இளைஞர் ஒருவருடன் கருத்து மோதல் இடம்பெற்றுள்ளது. அதன்பின்னர் அவர் மீது இராணுவ வீரர்கள் இருவரும் கடுமையாக தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பில் தாக்குதலுக்குள்ளான இளைஞரால் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# நீரில் மூழ்கி இளைஞர் பலி

**விளையாட்டு வினையானது!**

பண்டாரகமவில் மதுபோதையில் இருந்த இளைஞர் ஒருவர் ஆற்றில் நீராடிக்கொண்டிருந்தவேளை அதில் மூழ்கிப் பலியாகியுள்ளார். நண்பர்களுடன் நீராடச்சென்று அனைவரும் இணைந்து மது அருந்தியுள்ளனர்.

இந்நிலையில், இளைஞர் ஒருவர் நீரில் மூழ்குவதாக தெரிவித்து விளையாட்டாக நீருக்கடியில் சென்றுள்ளார். இவ்வாறு மூன்று தடவைகள் அவர் நீருக்கடியில் சென்றுள்ளார். எனினும், நான்காவது தடவை அவர் மேலே வராததை அவதானித்த நண்பர்கள் அவரைத் தேடியுள்ளனர்.

எனினும், அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிருலப்பனையைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நாடுகளுக்கிடையிலான அமைதியானது வன்முறையற்ற உலகிற்கான அபிப்பிராயம்

## உலக அமைதி மாநாட்டில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ உரை

உலக அமைதி என்பது வன்முறையற்ற உலகிற்கான அபிப்பிராயம் - என 2022ஆம் ஆண்டுக்கான உலக அமைதி மாநாட்டில் (கொரிய தீபகற்பத்தின் அமைதிக்கான மாநாடு) கடந்த சனிக்கிழமை (12) உரையாற்றிய பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகளாவிய அமைதி சம்மேளனத்தின் அழைப்பிற்கேற்ப காணொளி தொழில்நுட்பம் ஊடாக தென்கொரியாவின் சியோலில் நடைபெறும் 'உலக அமைதி மாநாடு 2022'இல் கலந்துகொண்டு பிரதமரின் பாரியார் இவ்வாறு வலியுறுத்தினார்.

மூன்று தினங்கள் நடைபெற்ற இம்மாநாடு கடந்த 11ஆம் திகதி ஆரம்பமானதுடன், 150இற்கும் அதிகமான உலக நாடுகளை சேர்ந்த மதத் தலைவர்கள், இராஜதந்திரிகள், அமைதிக்கான ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வெளியுறவுக் கொள்கை



ஆய்வாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

"உலக அமைதி, மிகுந்த ஆபத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் உலக அமைதி குறித்த கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள என்னை அழைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகளாவிய அமைதி சம்மேளனம் போன்ற அமைப்புகள் ஸ்தாபிக்கப்பட்டதன் விளைவாக, மனிதகுலம் எதிர்கொள்ளும் அனைத்து சவால்களுக்கும் எதிராக போராடி, எதிர்காலத்தில் நாம் எதிர்பார்க்கும் முழு அமைதியை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உலகளாவிய அமைதி சம்மேளனம் என்பது அனைவரும் சுதந்திரமாக வாழக்கூடிய அமைதியான உலகத்தை உருவாக்க அர்ப்பணித்த தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் உலகளாவிய வலையமைப்பாகும். சகிப்புத்தன்மையின் ஊடாக ஏற்படும் ஒத்துழைப்பு நெறிமுறைகளின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதுடன் அது சுபீட்சத்திற்கு வழிவகுக்கிறது.

வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களிடையே பாகுபாடு இல்லாமையானது நேர்மையான நீதி மற்றும் உலகளாவிய அமைதிக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய அணுகுமுறையை உருவாக்குகிறது.

உலக அமைதி என்பது வன்முறை இல்லாத உலகத்திற்கான அபிப்பிராயமாகும். அங்கு தேசங்கள் ஒன்றுக்கொன்று அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் பணியாற்ற முயல்கின்றன எனத் தெரிவித்தார்.

# புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட சம்மேளன நிர்வாகிகளுக்கான விசேட செயலமர்வொன்று நேற்று முன்தினம் (13) புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வில் முஸ்லிம் சமய, கலாசார, பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எம்.அன்வர் அலி, பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமட், புத்தளம் மாவட்ட மேலதிக செயலாளர் ரவீந்திர விக்ரமசிங்ஹ, தேசிய போதைப்பொருள் தடுப்பு திட்டமிடல் திணைக்கள தேசிய இணைப்பாளர் என்.ஆர்.அமரசிங்க, சிரேஷ்ட வளவாளர் உதயரூபன், மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்ஷெய்ஹ் முஹம்மது இப்ஹாம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் போதைப்பொருட்களினால் ஏற்படும் விபரீதங்கள், சமூக சீர்கேடுகளிலிருந்து எவ்வாறு மாணவர்களைப் பாதுகாக்கலாம், அஹதிய்யா பாடசாலைகளின் மூலம் சிறுவர்களுக்கு இந்தக் கல்வியை எவ்வாறு வழங்கலாம், அதற்கு எந்தெந்த நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பன போன்ற தெளிவூட்டல்களும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், இந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பாதுகாப்பு அமைச்சு, கல்வி அமைச்சு, புத்தசாசன கலாசாரம் மற்றும் மத விவகார அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய, கலாசார, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், நல்லிணக்க அமைச்சு, மாவட்ட செயலகம், பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்பை எவ்வாறு பெறுவது என்பன பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மேலும் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் நோய்கள் பற்றி காணொளிகளூடாகவும் விளக்கமளிக்கப்பட்டன.

இந்தச் செயலமர்வில் அஹதிய்யா பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட சம்மேளன நிர்வாகிகள் 50 பேர் கலந்துகொண்டதாக புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பாரூக் பதீன் ஆசிரியர் தெரிவித்தார்.

# இரு முச்சக்கரவண்டிகள் நேருக்கு நேர் மோதி விபத்து





புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் தில்லையடி பிரதேசத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகிலேயே நேற்று முன்தினம் (13) இரவு 09 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புத்தளத்திலிருந்து தில்லையடி நோக்கி வந்த முச்சக்கரவண்டியும், பாலாவியிலிருந்து புத்தளத்தை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது மூவர் காயங்களுக்குள்ளான நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து தில்லையடி நோக்கி வந்த முச்சக்கரவண்டி பஸ்ஸை முந்திச்செல்ல முற்பட்டவேளையிலேயே, பாலாவியிலிருந்து வந்த முச்சக்கரவண்டியோடு நேருக்கு நேர் மோதி விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

முச்சக்கரவண்டிகளில் பயணித்த இளைஞர்களில் 3 பேர் காயத்துக்குள்ளாகியதால் அவர்களை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக புத்தளம் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# காட்டு யானையின் தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

காட்டு யானையின் தாக்குதலில் இரு பிள்ளைகளின் தந்தையான இளம் விவசாயி ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக விளச்சிய பொலிஸார் தெரிவித்தனர்.

விளச்சிய பொலிஸ் பிரிவிலுள்ள குளுபத்வெவ வயல் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மேலும் இரு விவசாயிகள் யானையின் தாக்குதலிலிருந்து மயிரிழையில் உயிர்த் தப்பியுள்ளனர். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 31 வயதுடைய மஹவிளச்சிய குளுபத்வெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது.

யானையின் தாக்குதலில் உயிரிழந்த விவசாயியின் சடலம் விளச்சிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தாக்குதலை நடத்திய காட்டுயானை உயிரிழந்த விவசாயியின் வயல் நிலம் மற்றும் அவருடைய வீட்டையும் சேதப்படுத்தியுள்ளமை தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விளச்சிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உயர்தரத்துக்கு தகுதி பெறாத மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு

2020ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தகுதிபெறாத மாணவர்களை தொழிற்பயிற்சிக்கு உட்படுத்தி அவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கும் நடைமுறையொன்றை வகுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் இந்த வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் சுமார் 98 ஆயிரம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெறவில்லை. இவர்களுள், கணிதப் பாடத்தில் சித்தியடையாத, ஆனால், பின்னர் அதன் பெறுபேற்றை பெற்றுத் தருவதாக கூறி க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் உள்வாங்கப்படுவர்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தகைமை பெறாத மாணவர்கள் பிரதேச செயலக மட்டத்தில் இனங்காணப்பட்டு அவர்களின் திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கேற்ப தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# சிரேஷ்ட கலைஞர் பியகருவுக்கு மனுசத் தெரண ஊடாக புதிய வீடு







இலங்கை சினிமாத்துறையின் சிரேஷ்ட கலைஞரான கே. பியகருவுக்கு மனுசத் தெரண செயற்திட்டத்தின் ஊடாக புதிய வீடொன்று அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஹொரணையில் வசித்துவரும் அவர் வசதியற்ற வீட்டில் வாழ்வதாக தெரண தொலைக்காட்சி அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது. அதனடிப்படையில் மனுசத் தெரண ஊடாக புதிய வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டது. அந்த வீட்டைக் கையளிக்கும் நிகழ்வு தெரண நிறுவனத்தின் தலைவர் திலித் ஜயவீர தலைமையில் இடம்பெற்றதுடன், அதன்போது சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் நிரோஷன் பிரேமரத்ன உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கிழக்கு சுதேச மருத்துவத் திணைக்கள வெளியீட்டு நூல்கள் வழங்கிவைப்பு




(சீலாமுனை நிருபர்)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 'கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை' மற்றும் 'ஆயிரம் வேரும் அரும் மருந்தும்' என்ற நூல்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், கோவிட் 19 தொற்றுக் காலத்தில் சுதேச மருத்துவத் திணைக்களம் பாரிய பங்களிப்புகளை மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் செய்திருந்தது.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள், தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வசித்த குடும்பங்கள் மற்றும் தொற்றினால் பாதிக்கப்படாதவர்கள் என சகல மக்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி மற்றும் இமியுன் பூஸ்ட்டர் பானங்களுடன் ஆயுர்வேத மருந்துகளையும் வழங்கி வந்த செயற்பாடுகள் பாராட்டத்தக்கது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி முரளிதரன் தெரிவித்தார்.

இதன்போது மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஸ்ரீதரினால் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை மற்றும் ஆயிரம் வேரும் அரும் மருந்தும் என்ற நூல்களை சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி முரளிதரனுக்கு வழங்கி வைத்த அதேவேளை, நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி பொதிகளையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், நிருவாக உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.நவந்திரராஜா உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# கிண்ணியா பிரதேச ஆசிரியர் இடமாற்றத்தில் சமூக நீதி பேணப்படவில்லையென விமர்சனம்

## ஆசிரியர்கள் புகார் தெரிவிப்பு

(சீனக்குடா நிருபர்)

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகப் பிரிவில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரே பாடசாலையில் எட்டு வருடங்கள் ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

விண்ணப்பப்படிவங்கள், வலயத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், ஒரே பாடசாலையில் எட்டு வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர்கள், குறித்த பாடசாலை அதிபர் ஊடாக இறுதித் திகதிக்கு முன்னர் அவற்றை பூர்த்தி செய்து வலயக்கல்வி பணிமனைக்கு சமர்ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்படவில்லை எனவும், அரசியல், கட்சி, நட்பு, பதவி நிலை மற்றும் உறவுமுறை போன்ற விடயங்கள் ஆதிக்கம் செலுத்தியதாகவும் இதனால் ஆசிரியர் இடமாற்றத்தில் பாடசாலை தேவைகள் கருத்திற் கொள்ளப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களது வீட்டுக்கருகில் நகர்ப்புறப் பாடசாலையில் தொடர்ச்சியாக பத்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது, இவர்கள் அரசியல்வாதிகளை கூஜா பிடித்து ஓரிரு தினங்களில் மீண்டும் அதே பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றமையை இவர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

அதேபோல் கடந்த காலங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர், தனது உறவினர்கள் மற்றும் கட்சிக்காரர்களின் இடமாற்றத்தை பாதுகாப்பதற்காகவும் அவர்களை விரும்பிய பாடசாலைகளுக்கு கொண்டு வருவதற்காகவும் ஒரே பாடசாலையில் எட்டு வருடங்கள் பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் கூட அதி கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த விடயத்தில் பாடசாலை தேவையோ, மேலதிக ஆசிரியர்களை சமப்படுத்தும் கொள்கையோ கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும் ஆசிரியர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களில், ஆசிரியர் இடமாற்றத்தில் அநீதி இழைக்கப்பட்டோர் மேன்முறையீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும், ஆசிரியர் இடமாற்ற சபையின் விதிமுறையை மீறி, அந்த மேன்முறையீட்டு சபையில் வலய கல்விப் பணிப்பாளர் பிரசன்னமாகியிருந்தமை இடமாற்ற சபையின் சுயாதீன செயற்பாடுகளுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியதாகவும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், தேசிய ரீதியில் கிண்ணியாவின் கல்வி வளர்ச்சி தொடர்ந்து கடைசி நிலையில் இருப்பதற்கு பாடசாலை தேவை கருதி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படாமையும் ஆசிரியர் வளங்கள் சமமாகப் பகிரப்படாமையும் ஒரு முக்கிய காரணம் என புத்திஜீவிகளும் சமூக அமைப்புகளும் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றனர்.

எனவே, கொரோனா அனர்த்த சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்கள் கிண்ணியா கல்வி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது வருடாந்த இடமாற்றத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. புதிய வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில், மேற்கொள்ளப்பட இருக்கின்ற இந்த இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்பட வேண்டும் என ஆசிரியர்களும் பெற்றோர்களும் எதிர்பார்க்கின்றனர்.

# கல்முனை வடக்கில் பயனாளிகளுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டது




(பாண்டிருப்பு நிருபர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்துக்கமைய சமுர்த்தி பயனாளிகளுக்கென அரசினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத் தொகையினை வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் பெரியநீலாவணை கிராமத்தில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துரைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் 05ஆயிரத்து 995 குடும்பங்கள் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாகவுள்ளன. இக் குடும்பங்களுக்கென கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு தற்போது அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய கல்முனை வடக்கில் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவாக வருடம் ஒன்றுக்கு 159 மில்லியன்ரூபா வழங்கப்படவுள்ளது. கல்முனை வடக்கு மேற்கு வங்கிப் பிரிவினால் பெரியநீலாவணையில் ஆரம்பக் கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டது. இதற்கமைய கல்முனை வடக்கு மேற்கு வங்கியினால் 69 இலட்சத்து 64 ஆயிரத்து 400 ரூபா, 03ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கல்முனை வடக்கு சமுர்த்திப் பணிப்பாளர் வி.சிறிநாதன், கல்முனை, வடக்கு மேற்கு வங்கி முகாமையாளர் எஸ்.தவசீலன், மாவட்ட செயலகத்தின் சமுர்த்தி வங்கி மேற்பார்வை பிரிவு உத்தியோகத்தர் ரி.தெய்வேந்திரன், மாவட்ட கணக்காய்வு உத்தியோகத்தர் என்.தினோசன், சமுர்த்தி பிரிவு இதயராஜ், சமுர்த்தி உத்தியோகத்தர் விமல்ராஜ், மாநகர சபை உறுப்பினர் எஸ்.குபேரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## போடியார் புலம்பல்!



***பயங்கரவாத தடைச்சட்ட திருத்தம் சர்வதேசத்தை திருப்திப்படுத்த இல்லயாம் எண்டு நிதி அமைச்சர் நானா அலி சப்ரி சொன்னாரு எலுவா... அப்ப ஏண்டா தம்பி நாடாளுமன்றத்தில அந்த சட்ட திருத்தம் உனக்கிட்ட தராமல் வெளிவிவகார அமைச்சர் பீரீஷ் மாமா சமர்பித்தவர். நாய் பாக்கிற வேலய கழுத பாக்கிற கத எலுவா இது ஆருக்குடா காதில பூ வைக்கிறயள்?***

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வீதியில் நெல் உலரவிடும் செயற்பாட்டால் அம்பாறையில் போக்குவரத்து இடையூறு




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது அடைமழை மீண்டும் பெய்து வருவதனால் அறுவடை செய்யப்பட்ட நெல்லினை பிரதான வீதிகள், உள்ளக வீதிகளில் உலரவிடுவதனால் போக்குவரத்து சீர்கேடு ஏற்பட்டுள்ளதை காண முடிகின்றது.

இச்செயற்பாடானது அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சொறிக்கல்முனை, சவளக்கடை, மத்தியமுகாம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பிரதான வீதிகள் உள்ளக வீதிகளில் இச்செயற்பாடு தொடர்கதையாகவே உள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையின் அறுவடை தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றநிலையில், அறுவடை செய்யப்பட்ட நெல்லினை சந்தைப்படுத்துவதற்காக விவசாயிகள் தமது ஈரப்பதமான நெற்களை உலரவிடுவதற்காக இச்சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

குறித்த நிலைமை போதியளவு நெல் உலரவிடும் தளம் இன்மையால் வீதியில் தாம் இவ்வாறு உலரவிடுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மூடை மூடைகளாக வீதிகளில் நெற்களை குவித்து உலர விடுவதனால் வீதியில் விபத்து சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு உலர விடும் நெற்கள் ஒரு பக்க வீதியை தடைசெய்து உலரவிடுவதனால் இரு போக்குவரத்து வீதி தடைப்படுவதுடன் வீண் விபத்துகள் ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளன.

தனிப்பட்ட சுயலாபத்துக்காக இவ்வாறான வீதிகளை பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறு சட்டவிரோதமாக வீதிகளில் நெற்களை உலரவிடுபவர்களுக்கு எதிராக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# கல்முனை வீதிகளில் புதிய மின்குமிழ்கள் பொருத்தும் செயற்பாடு முன்னெடுப்பு




(பாறுக் ஷிஹான்)

செயலிழந்துள்ள தெரு மின்குமிழ்களை அகற்றி புதிய மின்குமிழ்களை பொருத்துதல் மற்றும் இருளடைந்த பகுதிகளை ஒளிரூட்டுதல் போன்ற செயற்பாடுகளை இரவு பகலாக கல்முனை மாநகர பொது வசதி பிரிவு முன்னெடுத்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு மாநகர பகுதிகளில் உள்ள மின்குமிழ்கள் ஒளிராமை குறித்து பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் ஆலோசனையின் பிரகாரம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மேற்படி பகுதிகளில் கடந்த 2 மாதங்களாக பல மின்கம்பங்களில் இணைக்கப்பட்ட மின்குமிழ்கள் செயலிழந்திருந்தன. இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதுடன் திருட்டுச்சம்பவங்கள், விபத்துகள் அதிகரித்திருந்தன.

இதனை தொடர்ந்து அதிகளவான மக்கள் பயன்படுத்தும் நற்பிட்டிமுனை தொடக்கம் கல்முனை பகுதி வரையான பகுதிகளில் இரு நாட்களாக செயலிழந்த மின்குமிழ்கள் அகற்றப்பட்டு மாற்றப்பட்டு அப்பகுதிகள் ஒளியூட்டப்பட்டன.

இச்செயற்பாடு காரணமாக இரவு வேளையில் பயணம் செய்யும் மக்கள் அச்சமின்றி பயணங்களை மேற்கொண்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. கல்முனை மாநகர பொது வசதி பிரிவு பொறுப் பதிகாரி ஏ.அமீர், மேற்பார்வையாளர் எம்.எம். பயிஸ் ஆகியோரின் கண்காணிப்பில் இச்செயற்பாடுகள் இரவு பகலாக மேற்குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாலர் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்





(நிலாவெளி நிருபர்)

திருகோணமலை கோணேசபுரியில் அமைந்துள்ள செவ்வந்தி பாலர் பாடசாலைக்கு உள்ளம் அமைப்பினரால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை (12) மேற்படி பாலர் பாடசாலைக்கான கற்றல் உபகரணத் தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டன. மிகவும் வறிய நிலையில் உள்ள மேற்படி பாடசாலையின் நிலையறிந்து லண்டனில் வசிக்கும் புவனசிங்கம் குடும்பத்தினர் தனது தருணிக்கா என்ற மகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு அதற்கான செலவினை குறித்த பிள்ளைகளின் கல்விக்காக செலவிட்டு ஒரு முன்மாதிரியை காட்டியுள்ளனர்.

அத்துடன் அன்றைய தினம் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு, பகலுணவு என அனைத்தையும் பொறுப்பேற்று ஆசிரியர்களும் மாணவர்களும் மகிழ்ச்சியாக அன்றைய தினத்தை கழித்திட உதவியுள்ளனர். எனவே ஒரு முன்மாதிரியான செயற்பாடாக பிரதேச மக்கள் இதை குறிப்பிடுகின்றனர்.

# திருமலை உதவி அரசாங்க அதிபராக நிருபா நியமனம்



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபராக எஸ். நிருபா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2021ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக சேவை உள்ளகப் பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானமும் போசாக்கும் துறையில் ஆரம்ப பட்டத்தை பூர்த்தி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகரித்த சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருதில்




(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு அரசினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது - 02 ஆம் கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம்.றம்ஸா தலைமையில் நேற்று (14) காலை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீமின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் சமுர்த்தி உதவி முகாமையாளர் கலாநிதி ஏ.எம்.எம். றியாத் உள்ளிட்ட சமுர்த்தி சங்கங்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அரசினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுகளாக சாய்ந்தமருது பிரதேசத்தில் 02ஆயிரத்து 842 சமுர்த்தி பயனாளிகளுக்கு 71 இலட்சத்து 79 ஆயிரத்து 400 ரூபா கொடுப்பனவுகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

# இலக்கியப் படைப்புகளின் ஊடாக நல்ல தலைமைப் பண்புகளை மாணவர்களிடையே உருவாக்க முடியும்

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜெகதீசன்





(காரைதீவு நிருபர்)

மாணவச் செல்வங்களை, இளம் சிறார்களை, இளைஞர்களை நல்ல தலைமைத்துவ பண்பு மிக்கவர்களாக, நல்ல சமூக சிந்தனை உள்ளவர்களாக மாற்றுவதற்கு அவர்களின் எழுத்துப் படைப்புகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி அவற்றை வெளியுலகுக்கு கொண்டு வருவதன் ஊடாகவே அவற்றை நிறைவேற்ற முடியும் என அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து ஒழுங்கு செய்த பிரதேச இலக்கிய விழா வெள்ளிக்கிழமை காலை பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

பிரதேச இலக்கிய விழாக்களில் பங்கு பெறுகின்ற வாய்ப்புகள் கூடுதலாக தற்போது மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அந்த வாய்ப்புகளை வழங்குவதென்பது அவர்களை இந்தத் துறையில் ஈடுபடுத்தி அவர்களுடைய கலை ஆர்வம், கலை ஈடுபாடுகளை மேம்படுத்தக் கூடிய வாய்ப்புகளை வழங்குவதற்கான ஒரு சந்தர்ப்பம் எனலாம். இவ்வாறு அவர்களை சிறந்த கலைஞர்களாக உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கைகளில்தான் இருக்கின்றது. உண்மையில் கல்வி என்பது பாடப் புத்தகங்களை மட்டும் கற்பதல்ல. இவ்வாறான புறக் கிருத்தியைச் செயற்பாடுகளிலும் ஈடுபட வைப்பதன் மூலமே இதனை அடைய முடியும்.

கடந்த இரு வருடங்களாக ஏற்பட்டிருந்த முடக்க நிலை காரணமாக முழுமையான கல்விச் செயற்பாடுகள் இல்லாதபோதிலும் மாணவர்கள் தனிமையில் சிந்திக்கக்கூடிய, கற்பனை வளங்களைத் திறந்துவிடக் கூடிய அவற்றை இலக்கிய வடிவங்களாக மாற்றக் கூடிய சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்கியிருக்கின்றது. இது மட்டுமல்ல, மூத்த கலைஞர்களும் கலை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

மாணவச் செல்வங்கள் கலைப் படைப்புகளை உருவாக்க பெற்றோர்கள் வீடுகளில் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். அதுபோல சுற்றத்தாரும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். இவ்வாறான கலை இலக்கிய விழாக்களை நடத்துவதில் பாடசாலைகள் மட்டுமல்ல பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் வருடாவருடம் தங்கள் பணிகளைச் செய்து கலைப்படைப்புகளை வெளிக்கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை வழங்கி வருகின்றன. இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதன் ஊடாக படைப்புகளை மேடை ஏற்றுவதன் மூலமாக இதனை சமூகத்துக்கு கொண்டு செல்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது காரையொளி சஞ்சிகை வெளியீடு, இலக்கிய விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு, கலாமன்றங்களின் பாடல் மற்றும் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சிறப்பு அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.எம்.அச்சிமுகமட், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.ரின்சான் ஆகியோருடன் கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் வருடாந்த ஒன்று கூடலும் பாராட்டு விழாவும்






(மருதமுனை)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் வருடாந்த ஒன்று கூடலும் பாராட்டு விழாவும் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே. சனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனைப் பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம். பி. அப்துல் வாஜித், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபை செயலாளர் எம்.ஐ.எம். சதாத் உட்பட வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் கடந்த இரு வருடங்களாக கடமையாற்றி இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பரிசில் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் ஜனாஸா கட்டில் வழங்கி வைப்பு



(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தின் சாளம்பைக்கேணி மற்றும் மத்திய முகாம் பிரதேசங்களுக்கு ஜனாஸாக்களை குளிப்பாட்டும் கட்டில்கள் மற்றும் ஜனாஸாக்களை சுமந்து கொண்டு செல்லும் சந்தூக் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பவுண்டேஷனின் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளையேற்று, குறுகிய காலத்துக்குள் இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டிருந்தார்.

இதன் பிரகாரம், சாளம்பைக்கேணி 6ஆம் கொளனி பிலால் ஜும்ஆ மஸ்ஜிதுக்கு ஜனாஸா குளிப்பாட்டும் கட்டில் மற்றும் சந்தூக் என்பனவும் மத்திய முகாம்-3 முஹம்மதிய்யா ஜும்ஆ மஸ்ஜிதுக்கு ஜனாஸா குளிப்பாட்டும் கட்டில் ஒன்றும் அவற்றின் நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

# "உயிர்காக்க பயில்வோம்" நீச்சல் பயிற்சி: பாசிக்குடா கடற்கரையில் நிகழ்வு




(மீராவோடை நிருபர்)

நீரில் மூழ்குவோர்களை காப்பாற்றுவது தொடர்பான நீச்சல் பயிற்சி முகாமின் இறுதிநாள் நிகழ்வு பாசிக்குடா கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்றது.

கல்குடா ஏ.வி. டைவர்ஸ் மற்றும் கல்குடா அனர்த்த சேவைப் பிரிவு ஆகியவை இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சுமார் மூன்று நாட்களாக இடம்பெற்ற இப் பயிற்சி முகாமில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த பல இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயிற்சிகளை பெற்றனர்.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் அப்துல் மஜீத் ஹலீம், முஹம்மது கபீர் இப்றாஹீம் ஆகியோர் 200 மீற்றர் தூரத்தை 10 நிமிடத்தில் நீந்திக்கடந்து பாராட்டுகளை பெற்றுள்ளனர்.



அனுபவம் வாய்ந்த உயிர்காக்கும் அணியின் வளவாளர்களைக் கொண்டு நடத்தப்பட்ட இந்த பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் பயிற்சிநெறி தேவை

## பெற்றோர் கோரிக்கை

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள காரைதீவு தொழிற்பயிற்சி நிலையம் கடந்த 1997இல் ஆரம்பிக்கப்பட்டு அங்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிகள் பல வருடகாலமாக சிறந்தமுறையில் இடம்பெற்று வந்தநிலையில், இப் பயிற்சிநெறியின் போதனாசிரியர் 2020 இல் மரணித்ததன் காரணமாக அப்பயிற்சிநெறி இடைநிறுத்தப்பட்டது.

அப்போதனாசிரியருக்கு பதிலாக வேறு போதனாசிரியர்கள் இன்றுவரைக்கும் நியமிக்கப்படவும் இல்லை, பயிற்சிநெறிகள் இடம்பெறவும் இல்லை என பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், இப்பிரதேச இளைஞர், யுவதிகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறியினை பெறுவதாயின் அக்கரைப்பற்று தொழிற்பயிற்சி நிலையத்துக்கோ அல்லது சம்மாந்துறை தொழிற்பயிற்சி நிலையத்துக்கோ தேடி அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, 2020 இரண்டாம் அரையாண்டுக்காக காரைதீவு தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறியினை ஆரம்பிக்குமாறு இப்பிரதேச இளைஞர் யுவதிகளின் பெற்றோர், காரைதீவு பொதுநல அமைப்புகள் வேண்டுகோள் விடுப்பதுடன் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# இஸ்லாமிய கலாபீடத்தின் பரிசளிப்பும் புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வும்




(மாளிகைக்காடு)

சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கலாபீடத்தின் பதில் தவிசாளரும், ஓய்வுபெற்ற அதிபருமான ஐ.எல்.எம். மஜீத்தின் தலைமையில் கமு/ கமு/ அல்- ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

குர்ஆன் மனனமிடும் இஸ்லாமிய பல்கலைக்கழகமான தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் பரீட்சைகளில் திறமை சித்தி பெற்ற மாணவர்கள், சிறந்த வரவை பேணிய மாணவர்கள் உட்பட பல்வேறு துறைகளில் சாதித்த மாணவர்கள் மற்றும் இவ்வாண்டுக்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மெர்சி லங்கா நிறுவனத் திட்ட முகாமையாளர் மௌலவி என்.எம்.ஏ. ஹசன் ஸியாத் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தார்.

மேலும், இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் முன்னாள் தலைவர், ஓய்வுபெற்ற பிரதி அதிபர் மௌலவி யூ.எல்.எம். காஸிம் கலந்துகொண்டார். விசேட உரையை சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் தவிசாளர் சட்டத்தரணி மௌலவி என்.எம்.ஏ. முஜீப் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபதுல் கரீம், செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர், பொருளாளர் ஏ.ஏ. சலீம், சாய்ந்தமருது மாளிகைக்காடு உலமா சபைத் தலைவர் மௌலவி எம்.எம். சலீம் உட்பட உலமாக்கள், கமு/ கமு/ அல்- ஹிலால் வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலய அதிபர்கள், பிரதேச சபை உறுப்பினர் எம்.எச்.எம். இஸ்மாயில், சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# ஆட்சியில் உள்ள அரசாங்கத்துடன் இணைந்தே நமது தேவைகளை நிவர்த்திசெய்ய முடியும்

## எதிர்த்து நின்று எதையும் சாதிக்க முடியாது – அஸ்பர் உதுமா லெப்பை




(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகம் இஸ்லாம் கூறும் நற்பண்புகளை கடைபிடிக்கவேண்டிய அவசியம் உள்ளது. மொட்டு அரசாங்கமாக இருந்தாலும் சரி, யானை அரசாக இருந்தாலும் சரி, தொலைபேசி அரசாக இருந்தாலும் சரி முஸ்லிம்கள் அரசாங்கங்களுடன் இணைந்து சென்றே நன்மைகளை அடையவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பிலான கடந்த பொதுத்தேர்தல் வேட்பாளர் அஸ்பர் உதுமா லெப்பை தெரிவித்தார்.

நீண்டகாலமாக குண்டும் குழியுமாக இருந்த சம்மாந்துறை ஹஸ்ஸாலி வித்தியாலய வீதியை அபிவிருத்தி செய்து அவ்வீதியினை மக்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

யுத்தத்தை முடித்து, விவசாயிகளுக்கு பசளையை இலவசமாக வழங்கி, நாட்டை மிகத்துரிதமாக அபிவிருத்தி செய்து இலங்கையில் முன்மாதிரியான ஆட்சியை கொண்டு நடத்திய மஹிந்தவின் சகல நன்மைகளையும் அனுபவித்துவிட்டு எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்து பழகிய முஸ்லிம் சமூகம், இன்று பல இக்கட்டான நிலைகளை சந்தித்து வருகிறது. எமது முஸ்லிம் தலைவர்கள் எடுத்த பிழையான தீர்மானங்களினால் இன்று முஸ்லிம் சமூகம் எதிரிகளாக்கப்பட்டுள்ளது. நாம் முழுமையாக தொலைபேசிக்கு வாக்களித்து பெற்ற பயன் ஒன்றுமில்லை. சிறுபான்மை மக்கள் மத்தியில் தோற்றம் பெற்ற இனவாத சிறு கட்சிகளே முஸ்லிம்களின் இன்றைய நிலைக்கு காரணம்.

சுனாமி காலத்தில் பாதிக்கப்பட்ட எமது அண்டைய பல ஊர்களுக்கு வாரக்கணக்கில் சோறாக்கி போட்ட சம்மாந்துறை மக்கள் அரிசிக்கும், காசிக்கும், ஒரு கிலோ இறைச்சிக்கும் வாக்களிக்கும் நிலையை பார்க்கும் போது ஆத்திரம் வருகிறது. சம்மாந்துறை கடந்த ஆட்சியில் இரண்டு எம்.பிக்களை ஒரே தடவையில் வைத்திருந்தும் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் என்னுடைய முயற்சியினால் பல சேவைகளை சம்மாந்துறைக்கு செய்து கொண்டு வருகின்றேன். நான் வாக்குகளுக்காக சேவை செய்யவில்லை மக்களுக்காகவே இந்த சேவையை செய்கிறேன்.

சம்மாந்துறை தொகுதி இழந்த நாடாளுமன்ற உறுப்புரிமையை தக்கவைக்க ஒரு பொறிமுறையை உருவாக்கக்கோரி, சம்மாந்துறை முச்சபையினருக்கு கடிதம் எழுதி அனுப்பியதுடன் அவர்கள் பதிலளிக்க ஒருமாத கால அவகாசம் வழங்கியிருந்தேன். ஆனால், அவர்கள் இன்னும் பதிலளிக்கவில்லை. எல்லோரும் சேர்ந்து ஊருக்கான சுயச்சை குழுவொன்றை அமைத்து தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்று கோரி உள்ளேன்.

அன்று நாட்டின் சுதந்திரத்துக்காய் முஸ்லிம் சமூகம் பெரும் பங்காற்றினர். ஆனால், இன்று முஸ்லிம் சமூகம் இனவாதிகளாக சித்தரிக்கப் படுகின்ற போது வேதனையாகவுள்ளது. இன்றுள்ள முஸ்லிம் தலைமைத்துவங்கள் சமூகத்தின் நிலை தொடர்பில் சிந்திக்கவில்லை. அவ்வாறு சிந்தித்து இருந்தால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் நடுநிலையாக இருந்திருக்க வேண்டும். 30 வருட யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இந்த கொங்கீரிட், கார்பட் பாதைகளை அறிமுகம் செய்து வைத்து நாட்டை வளம் மிக்கதாய் மாற்றியவர் அன்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவருக்கு நாங்கள் எப்போதுமே வாக்களிக்கவில்லை. ஆனால் அவர் நமக்கான சேவைகளை எவ்வித பாகுபாடுமின்றி வழங்கி வருகிறார் என்றார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் கே. கோவிந்தசாமி, சம்மாந்துறை கிராமசேவகர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மூதூர் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்த முத்திரை வெளியிட ஏற்பாடுகள்



(கந்தளாய் நிருபர்)

மூதூர் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா எதிர்வரும் மே மாதம் 2022இல் கொண்டாடப்பட விருக்கின்றது.

அந்த விழாவைக் கொண்டாடுவதை முன்னிட்டு அதற்கான ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை (11) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தபால் மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்னவை சந்தித்துக் கலந்துரையாடினார் .

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட தபால் மா அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்ததாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண பொதுப் போக்குவரத்தில் பயணிப்போர் கொவிட்-19 தடுப்பூசி அட்டை வைத்திருப்பது அவசியம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தௌபீக் அறிவிப்பு

(கந்தளாய் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்பவர்கள் கொவிட்-19 தடுப்பூசி அட்டையை வைத்திருக்குமாறு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் நேற்று (14) தெரிவித்தார்.

இராணுவம் மற்றும் சுகாதாரப் பகுதியினரால் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாகாணங்களில் பொது இடங்களிலும், பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் பயணிகளிடமும் தடுப்பூசி அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கிரமமான முறையில் இராணுவத்தினரால் கிராமசேவகர் பிரிவுகள் தோறும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் இதுவரை பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக தங்களுக்கான தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

சந்தைத் தொகுதிகளில் மற்றும் சன நெருக்கமான பொது இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களிடம் கொவிட்-19 தடுப்பூசி அட்டை உள்ளதா என சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள்தோறும் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

20 தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்கள் இதுவரை எவ்வித தடுப்பூசியும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவிலுள்ள சுகாதார வைத்தியதிகாரி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.



தற்போது மக்கள் கணிசமாக ஒன்றுகூடுவதாகவும் முகக்கவசம் அணியாமலும், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமலும் கவனயீனமாக நடந்துகொள்வதை காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து நடந்துகொண்டால் எதிர்காலத்தில் பாரிய பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே, இவற்றை கருத்திற்கொண்டு மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டுமென கேட்டுள்ளார்.

# செலேன்ஞ் வின்ஸ் கல்லூரியின் சான்றிதழ் வழங்கல் நிகழ்வு



செலேன்ஞ் வின்ஸ் கல்லூரியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் கற்கை நெறிகளை பூர்த்திசெய்த எட்டாவது தொகுதி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செலேன்ஞ் வின்ஸ் கல்லூரியின் தவிசாளர் முஸ்தபா முபாறக் தலைமையில் கடந்த சனிக்கிழமை கல்லூரியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தரும் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளருமான ஏ.சீ.றியாஸும், சிறப்பு அதிதியாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் முகம்மது றியாத்தும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார்.

# காண்பாரற்ற நிலையில் கந்தளாய் பிரதான வீதியின் நீர்க்குழாய் கசிவு



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர் வழங்கல் பாவனையாளர் அலுவல்கள் பிரிவுக்குட்பட்ட பகுதியின் பிரதான வீதியில் குடிநீர்க் குழாய் வெடித்து ஒரு கிழமையாக நீர் ஓடிக்கொண்டிருப்பதாக அப்பகுதியில் வசிப்போர் தெரிவிக்கின்றனர். கந்தளாய் நகரின் பௌத்த விகாரைக்கு முன்னால் உள்ள பிரதான வீதியினூடாக செல்லும் பிரதான குழாய் நீர் வெடித்ததால் குடிநீர் வீண் விரயமாகி வருகின்றது.

குடிநீர், வடிகான்களில் வடிந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. இவை தொடர்பாக கந்தளாய் பாவனை அலுவல்கள்பகுதிக்கு அறிவித்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என தெரிவிக்கின்றனர். எனவே, அதிகாரிகள் கூடிய விரைவில் நீர் வீணாகுவதை தடுத்துநிறுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சமுர்த்தி அதிகரித்த நலன் கொடுப்பனவு திட்டம் ஆலையடிவேம்பிலும் ஆரம்பம்







(ஆலையடிவேம்பு நிருபர்)

அரசாங்கத்தின் 2022ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய சமுர்த்தி பயனாளிகளுக்கு இம்மாதம்முதல் அதிகரித்த நலனுதவி கொடுப்பனவு வழங்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்று ஆரம்பமானது.

தேசிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் 331 பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இத்திட்டம் நேற்று காலை 10 மணிமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 22 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் அதிகரித்த நலுனுதவி கொடுப்பனவு நேற்று காலைமுதல் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் ஆலோசனையின் பிரகாரம் கிராமங்கள்தோறும் இடம்பெற்ற அதிகரித்த நலனுதவி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர், தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் ஆர்.மதியழகன், சமுர்த்தி முகாமையாளர்களான கே.அசோக்குமார், எஸ்.சுரேஸ்காந் உள்ளிட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அதிகரித்த முத்திரை கொடுப்பனவு வழங்கல், வலுவூட்டப்பட்ட சமுர்த்தி குடும்பத்திற்கான பொற்சான்றிதழ் வழங்கல், வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான பழமரக் கன்றுகள் வழங்கல், சமுர்த்தி வங்கியினூடாக கடன்பெறுவது தொடர்பிலான ஆலோசனை வழங்கல், 2022ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள சமுர்த்தி திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தல் போன்ற செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிண்ணியாவில் ஊருக்குள் புகுந்த காட்டு யானைகளால் பலத்த சேதம்





(கிண்ணியா நிருபர்)



கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்குளம், செம்பிமோட்டை கிராமங்களுக்குள் (13) இரவு புகுந்த காட்டு யானைகள் பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளன

சுமார் 6 - 7 யானைகள் ஊருக்குள் புகுந்து பலசரக்கு (சில்லறைக்) கடையினையும், இரண்டு வீடுகளையும் மற்றும் தென்னை மரங்கள், வாழை மரங்கள் முதலானவற்றை உடைத்தும், சேதப்படுத்தியும் உள்ளன.

இதனால் கடைக்காரரும், தென்னைச் செய்கையாளர்களும் தாம் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்

அத்துடன், தென்னந்தோட்டத்துக்குள் புகுந்த யானைகள் சுமார் 15இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளதாக தெரிவித்தனர்.

வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தநெல்லை சாப்பிட்டதுடன் வெளியில் வீசி சேதப்படுத்தியுள்ளன. தென்னை மரங்களை துவம்சம் செய்ததோடு வாழைக்குலைகளை சாப்பிட்டு வாழை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இரவில் தூங்க முடியாது பயமாக உள்ளதாகவும், யானையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஏறாவூர் இ.போ.ச. போக்குவரத்துச்சாலையில் தனியான கணக்காளர் அலுவலகம் திறப்பு









(ஏறாவூர் நிருபர்)

சுமார் 24 வருடகாலமாக இயங்கிவரும் ஏறாவூர் இ.போ.ச. போக்குவரத்துச்சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட தனியான கணக்காளர் அலுவலகத் திறப்பு விழா சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய நலன்புரி பிரிவிற்கான மனிதவள பிரதி முகாமையாளர் சேனநாயக்க சுமித் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஏறாவூர்ச் சாலை 1998 ஆம் ஆண்டில் உப சாலையாகதிறக்கப்பட்ட காலம்தொடக்கம் தற்போதுவரை மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை ஆகிய சாலைகளினாலேயே நிதிக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஊழியர்கள் தமக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களையும் தாமதத்தினையும் எதிர்நோக்கிவந்ததாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து ஊழியர்களது நலன்களைக் கருத்திற்கொண்டு தற்போதைய சாலை முகாமையாளர்மேற்கொண்ட அயராத முயற்சியின் பயனாக தனியான கணக்காளர் அலுவலகம் ஒன்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்ச்சாலை முகாமையாளர் எம்.எம்.சைனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய மனிதவள பிரதி முகாமையாளர் சஞ்ஜீவ உமேஷ், நிதி முகாமையாளர் சமன் ரத்னாயக்க, செயலாற்று முகாமையாளர் எம்.உவைஸ் மற்றும் பொதுஜன பெரமுன தொழிற்சங்க இணைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் கையளிக்கப்பட்டன.

ஏறாவூர்ச்சாலை கிழக்குப் பிராந்தியத்தில் மிக நீண்டகாலமாக தொடர்ச்சியாக இலாபத்தில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குண்டும் குழியுமாக காணப்படும் சமுலையடிவட்டை வீதியின் நிலை



( வீரமுனை நிருபர் )

போரதீவுப்பற்று பிரதேச சபையின் மண்டூர் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட மூங்கிலாறு சமுலையடிவட்டை பாதை, குண்டும் குழியுமாக கிடங்கு நிலையில் காணப்படுவதனால் பாதையைப் பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரிய சிரமங்களுக்குள்ளாவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, மட்டு. மண்டூர் 14ஆம் கிராம சந்தியிலிருந்து மூங்கிலாறு பாலத்தின் ஊடாக நெடியவட்டை, ஆணைகட்டியவெளி, சின்னவத்தை ஊடாக கோணகொல்லை, அம்பாறை - மகா ஓயா பாதையை சென்றடையும் பிரதான பாதையே இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

குறித்த பாதை குண்டும் குழியுமாக கிடங்கு நிலையில் சேறும் சகதியுமாக காணப்படுவதனால் அவசர தேவையின் நிமித்தம் பயணிப்போர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொலைதூர மாற்றுப்பாதைகளை பயன்படுத்தவேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மக்கள் பிரதிநிதிகள், பெயருக்கும் புகழுக்கும் புகைப்பட செய்திக்குமாக தற்காலிக புனரமைப்பு ஏற்பாடுகள் செய்வதை விடுத்து, பொதுமக்களின் அவசிய பாதைத் தேவை கருதி நிரந்தரமாக புனரமைப்பதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# எம்.எல்.வை.எவ். அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டிற்கான புதிய ஒன்றுகூடல் நிகழ்வு





(பாலமுனை நிருபர்)

எம்.எல்.வை.எவ். அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 2022ஆம் ஆண்டிற்கான ஒன்றுகூடல் நிகழ்வு, மாவட்ட சம்மேளனத்தின் புதிய தலைவர் நியமனம், சத்தியப்பிரமாணம் மற்றும் கௌரவிப்பு நிகழ்வு என்பன அக்கரைப்பற்று மாவட்ட அலுவலக மண்டபத்தில் நடைபெற்றன..

எம்.எல்.வை.எவ். அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.அஜ்வத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நிந்தவூர் ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியரும் ஆயுர்வேத வைத்தியர்கள் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளருமான டொக்டர் ஏ.சி.டில்சாத் பிரதம அதிதியாகவும், சம்மேளனத்தின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ.உதுமாலெவ்வை கௌரவ அதிதியாகவும், சம்மேளனத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் மற்றும் சம்மேளனத்தின் ஆலோசகர்கள், முன்னாள் மாவட்ட தலைவர்கள், உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டார்.

இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான சம்மேளனத்தின் புதிய மாவட்ட தலைவராக ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ் அதிபர் நியமிக்கப்பட்டு சத்திப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேலும், நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட டொக்டர் ஏ.சி.டில்சாத் மாவட்ட சம்மேளனத்தினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன். சம்மேளனத்தின் புதிய ஆண்டுக்கான ஆவணங்கள் நிர்வாக பொறுப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அடைமழை காரணமாக தோப்பூரில் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின







(மூதூர் நிருபர்)

பெய்துவரும் அடைமழை காரணமாக திருகோணமலை, தோப்பூர் பிரதேசத்தின் ஜின்னாநகர் கிராமத்திலுள்ள பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளமையால் பொதுமக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சமையலறை , வீட்டுத்தளபாடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு முறையும் மழை காலத்தில் ஜின்னா நகர்ப் பகுதி வெள்ளத்தில் மூழ்குவதாகவும் இது விடயமாக அரசியல்வாதிகளிடமும் ,அதிகாரிகளிடமும் பல தடவைகள் முறையிட்டும் வடிகான் வசதிகளை செய்துதருமாறு கோரிக்கை விடுத்தும் அவர்கள் இதுவரை கவனத்திற்கொள்வதில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மாத்திரம் வாக்குறுதிகளை வழங்கி தம்மை ஏமாற்றுவதாகவும் தோப்பூர் - ஜின்னா நகர் கிராம மக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

### கர்நாடகத்தில் மீண்டும் பரபரப்பு

# ஹிஜாப் அணிந்து வந்த மாணவிகளுக்கு அனுமதி மறுப்பு

### ஆசிரியர் - பெற்றோருக்கிடையே வாக்குவாதம்

கர்நாடக பாடசாலையில் ஹிஜாப் அணிந்து வந்த மாணவிகளுக்கு திங்கட்கிழமை நுழைவு வாயிலிலேயே அனுமதி மறுக்கப்பட்டது.

இதேவேளை, ஹிஜாப் தொடர்பான வழக்கு விசாரணை கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

அத்தோடு, கர்நாடகவின் உடுப்பி மாவட்டத்தில் நேற்றுமுதல் (14ஆம் திகதி) 19ஆம் திகதிவரை 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் இஸ்லாமிய மாணவிகள் ஹிஜாப் அணிந்து வருவதற்கு பாடசாலைகள் தடை விதிக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் பெரும் போராட்டத்தை ஏற்படுத்தியது. ஹிஜாப் விவகாரத்தில் தொடர்ந்த பதற்றமான சூழல் காரணமாக கடந்த பெப்ரவரி 8ஆம் திகதிமுதல் கர்நாடகத்தில்



பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் இஸ்லாமிய மாணவிகள் தொடர்ந்த வழக்கில் முழுமையான விசாரணை முடியும் வரை மத அடையாளங்களை குறிக்கும் வகையிலான ஆடைகளை அணிய கர்நாடக உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்நிலையில், நேற்றுமுதல் 10ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டன. மாண்டியா மாவட்டத்திலுள்ள ரோட்டரி பாடசாலையில் ஹிஜாப் அணிந்து வந்த மாணவிகளை பாடசாலையின் நுழைவு வாயிலிலேயே ஆசிரியர்கள் தடுத்துநிறுத்தினர்.

தொடர்ந்து, பாடசாலை வகுப்பறைக்குள் அனுமதிக்குமாறும், வகுப்பறைக்கு சென்ற பின் குழந்தைகள் ஹிஜாப் அணியமாட்டார்கள் எனவும் பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.



ஜம்மு - காஷ்மீரின் புல்வாமாவில் கடந்த 2019ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி பாதுகாப்புப் படையினரின் வாகனங்களை குறிவைத்து ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 40 சிஆர்பிஎவ் வீரர்கள் பலியாகினர்.

இதனை நினைவுகூர்ந்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, வீரர்களின் தைரியமும், தியாகமும் இந்தியாவை வளமானதாக மாற்ற ஒவ்வொரு இந்தியருக்கும் உந்துசக்தியாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தாக்குதல் சம்பவம் நடந்த புல்வாமாவில் இராணுவ அதிகாரிகள், வீரர்கள், உயிரிழந்த வீரர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## சர்வதேச ரீதியில் ஒன்றுகூடும் உலகத் தமிழ் நாடாளுமன்றம்



(நுவரெலியா நிருபர்)

சென்னையில் உலகத் தமிழ் நாடாளுமன்றம் எதிர்வரும் மார்ச் 11ஆம் திகதி கூடவுள்ளது.

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு மற்றும் உலகத் தமிழ் வர்த்தக சங்கம் கடந்த 7 ஆண்டுகளாக உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு நடத்தி வருகிறது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர்கள் தமிழ்ச் சங்கங்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், பொருளாதார நிபுணர்கள், தாய் தமிழகத்திற்கு வந்து தம் உறவுகளை சந்தித்து சமுதாயம் மேம்படுவதற்கான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன

இவ்வாண்டு மார்ச் 11ஆம் திகதி சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள வர்த்தக மையத்தில் உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் ஒரு நிகழ்வாக உலகத் தமிழ் நாடாளுமன்றமும் கூடவுள்ளது,

இந்நிகழ்வில் 12 நாடுகளில் 152 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தாங்கள் வசிக்கும் நாட்டில் அரசாங்கத்தின் மூலம் தமிழர்களை கல்வி பொருளாதாரத்தில் எப்படி மேம்படுத்தலாம் எனவும், 12 நாட்டு அரசாங்கத்தின் உதவிகளைப் பெறவும் இராஜாங்க உறவை மேம்படுத்தவும் இந்த உலகத் தமிழ் நாடாளுமன்றம் பேருதவியாக இருக்கும் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும் உலகத் தமிழ் நாடாளுமன்ற அமைப்பாளர் செல்வகுமார் தெரிவித்தார்.

## வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி.- சி52 ரொக்கெட்






புவி கண்காணிப்புக்கான அதிநவீன ரேடார் செயற்கைக்கோள் உட்பட மூன்று செயற்கைக்கோள்களுடன் பி.எஸ்.எல்.வி. - சி 52 ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.

ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் முதலாவது ஏவுதளத்திலிருந்து நேற்று அதிகாலை 5.59 மணிக்கு பி.எஸ்.எல்.வி. - சி52 ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.

இந்த ரொக்கெட் மூலம் இஓஎஸ்-04 என்ற அதிநவீன ரேடார் இமேஜிங் செயற்கைக்கோளும், இஸ்ரோ மற்றும் அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக்கழகத்தின் இயற்பியல் ஆய்வு மாணவர்கள் வடிவமைத்த சிறிய ரக இன்ஸ்பயர் சாட்-1 செயற்கைக்கோளும், இந்தியா, பூட்டான் நாடுகள் ஒருங்கிணைந்து வடிவமைத்துள்ள ஐ.என்.எஸ் - 2TD என்ற சிறிய ரக செயற்கைக்கோளும் விண்ணில் செலுத்தப்பட்டன.

புவியிலிருந்து 529 கிலோமீற்றர் உயரத்தைக்கொண்ட சூரிய ஒத்திசைவு சுற்றுவட்டப் பாதையில் சரியாக காலை 6.17 மணிக்கு 3 செயற்கைக்கோள்களும் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

புவி கண்காணிப்பு மற்றும் வேளாண், வனம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இஓஎஸ்-04 செயற்கைக்கோள் 1,710 கிலோ எடையுடையது. இதன் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும்.

இந்த செயற்கைக்கோள் அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை வழங்கும் திறன்கொண்டது. இஸ்ரோ தலைவராக புதிதாக பதவியேற்றுள்ள சோம்நாத் தலைமையில் ஏவப்பட்ட முதல் செயற்கைக்கோள் இதுவாகும்.

அதேபோல், இந்த ஆண்டில் இஸ்ரோவால் ஏவப்பட்ட முதல் செயற்கைக்கோள் இதுவாகும். பிஎஸ்எல்வி-சி52 ரொக்கெட் மூலம் 3 செயற்கைக்கோள்களை விண்ணில் வெற்றிகரமாக ஏவிய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர். இதைத் தொடர்ந்து நடப்பாண்டில் 10இற்கும் மேற்பட்ட ரொக்கெட் திட்டங்களை செயற்படுத்த இஸ்ரோ உத்தேசித்துள்ளது.

## இந்திய செய்திகள்

## ஹைதராபாத்தில் 120 கிலோ தங்கத்தில் இராமானுஜர் சிலை

### குடியரசுத் தலைவரால் திறந்துவைப்பு



தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு பிறந்தநாள் விழாவில் பங்கேற்ற குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், 120 கிலோ எடைகொண்ட தங்கத்தாலான அவரது உருவச்சிலையை திறந்துவைத்தார்.

இராமானுஜர் போன்ற புனிதர்களும், தத்துவவாதிகளும் நாட்டின் கலாசார அடையாளத்தை உருவாக்கி பேணி பாதுகாத்து அது தொடர்வதையும், நாட்டின் பண்பாட்டு ஒற்றுமையையும் உறுதிசெய்திருப்பதாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய ராம்நாத் கோவிந்த்,

இராமானுஜரின் பக்தி மார்க்கம் தமிழகத்தின் காஞ்சிபுரம் மற்றும் ஸ்ரீரங்கத்திலிருந்து உத்தரப்பிரதேசத்தின் வாரணாஸி வரை பரவியிருப்பதை காணமுடியும். எனவே, இந்தியர்களின் மனரீதியான ஒற்றுமை பல நூற்றாண்டுகள் பழைமையானது எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன் கடந்த 5ஆம் திகதி 216 அடி இராமானுஜர் சிலையை பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார்.

## 54 சீன செயலிகள் தடை: இந்திய மத்திய அரசு முடிவு




எப் லொக், ப்யூட்டி கெமரா, விவா வீடியோ எடிட்டர் உள்ளிட்ட 54 சீன செயலிகளுக்குத் தடை விதிக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் இந்தியா 59 சீன மொபைல் செயலிகளுக்குத் தடை விதித்தது. அவற்றில் டிக்டொக், வீசேட், ஹெலோ உள்ளிட்ட இந்தியர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான செயலிகள் இருந்தன. நாட்டின் இறையாண்மையையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய இந்த செயலிகளுக்கு தடை விதித்ததாக அரசு தெரிவித்தது.

இந்தியா - சீனா எல்லையில் கடந்த 2020 தொடக்கத்தில் இருந்தே பதற்றம் அதிகரித்துள்ளது. அப்போது தொடங்கி இதுவரை கிட்டத்தட்ட 300 சீன மொபைல் செயலிகளை இந்திய அரசு தடை செய்திருக்கிறது.

கடந்த 2020 ஜூன் 15இல் கால்வான் பள்ளத்தாக்கில் இந்திய - சீன வீரர்களுக்கு இடையே நடந்த மோதலில் 20 இந்திய வீரர்கள் கொல்லப்பட்ட பின்னர் முதல் சுற்று சீன செயலிகளுக்கான தடை நடைபெற்று வருகிறது.

தற்போது, ஸ்வீட் செல்ஃபி, ப்யூட்டி கெமரா, செல்பி கெமரா, விவா வீடியோ எடிட்டர், டென்சென்ட் ஸ்ரைவர், ஆன்மையோஜி அரேனா, ஒப்லொக், டுயல் ஸ்பேஸ் லைட் உள்ளிட்ட 54 சீன செயலிகளுக்கு தடை விதிக்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


ஏற்கனவே தடைசெய்யப்பட்ட செயலிகள் சில புதிய பெயர்களுடன் மீண்டும் இந்தியாவில் புழக்கத்தில் வந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## காதலுக்கு மரியாதை....

கேரள மாநிலத்தில் ஆசியக் கண்டத்தின் மிகப்பெரிய புகழ்பெற்ற இடுக்கி ஆர்ச் அணை நீரினால், மாநிலத்தின் முக்கால்வாசி தேவைக்கான 780 மெகாவோட் மின்சார உற்பத்தி போன்றவைகளை கிடைக்கச்செய்த காதலர்களுக்கு அரசு செய்த மரியாதைதான் குறவன் - குறத்தி சிலை.

இந்த அணை உருவாகக் காரணமாக இருந்த பழங்குடி மலைவாழ் ஊராலி இனத்தின் தலைவனான செம்பன் கருவெள்ளையன் குலும்பன் மற்றும் அவனது காதல் மனைவி ஆகியோருக்கு மரியாதை செய்ய முடிவு செய்தது கேரள அரசு. சுற்றுலா வளர்ச்சித்துறை மூலம், அணையின் அருகே இராமக்கல் மேடு என்னும் இடத்தில் குறவன் - குறத்தி சிலையை பிரம்மாண்டமாக அமைத்து காதலுக்கு மரியாதை செய்தது. இந்தப் பகுதி தற்போது கேரள மாநிலத்தின் முக்கிய சுற்றுலாத் தலமாகவுள்ளது.

1922ஆம் ஆண்டில் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள மலங்கர எஸ்டேட் பகுதிக்கு கண்காணிப்பாளராக டபிள்யூ. ஜெ.ஜோன், அவரது நண்பர் ஏ.சி.தோமஸ் இருவரும் தற்போது அமைந்துள்ள இடுக்கி ஆர்ச் டேம் உள்ள வனப்பகுதிக்கு



வேட்டைக்குச் செல்கின்றனர். அவர்களுக்கு வழிகாட்டியாக மலைக்குறவர் ஊராலி இனத் தலைவன் செம்பொன் வெள்ளையன் குலும்பன் அடர்ந்த காட்டுக்கு வழிகாட்டியாகச் செல்கிறார். அப்போது தொடர்மழை பல நாட்களாக பெய்கிறது. இரண்டு மலைகளுக்கு நடுவே பெரியாறு பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் குறவர் இனத் தலைவனான குலும்பன் தன் ஆசை மனைவி மற்றும் குழந்தை தனித்து இருப்பார்கள் என்று கவலையுடன் கூறி, ஆற்றைக் கடக்க பாதை இருந்தால் எளிதாகச் செல்லலாம் என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், வேட்டையாட வந்த ஆங்கிலேயருக்கு குறவனின் கவலையைக் கேட்டு ஒரு பொறி தட்டியது, இரு மலைகளை இணைத்து அணை கட்டி, மின்சார உற்பத்தி செய்யலாம் என்று எண்ணம் தோன்றி, இதற்காக திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார்.

அவ்வாறு குறத்தி இருந்த மலையையும், இந்தப் பகுதியில் குறவன் இருந்த மலையையும் இணைத்து உருவானதுதான் இடுக்கி ஆர்ச் அணை. ஆசியக் கண்டத்தின் மிகப்பெரிய அணையாக விளங்குகிறது.

**14 ஆண்டுகள் வனவாச காலத்தின்போது...**

ராமன், சீதா, இலட்சுமணன் 14 ஆண்டுகள் வனவாசத்தில் இருந்தபோது இராவணன் சீதையைக் கடத்திச் சென்றான். பல இடங்களில் சீதையைத் தேடிய இராமன், இந்த மலைப் பகுதியிலுள்ள ஒரு மேட்டுப் பகுதியில் நின்று தேடினாராம், ராமன் கால் பதித்ததால் இராமன் கல் என்பது மருவி, இராமக்கல் மேடு என்று தற்போது அழைக்கப்படுகிறது. இந்த உச்சியில் நின்று பார்த்தால் தேனி மாவட்டத்திலுள்ள கோம்பை, தேவாரம், உத்தமபாளையம் போன்ற ஊர்கள் தெளிவாகத் தெரியுமாம்.

காதல் மனைவியைத் தேடிய இராமன் நின்ற இடத்திலேயே அணை கட்ட ஆலோசனை கொடுத்த குறவனின் காலுக்கு இந்த இடத்தில் அரசு சிலை நிறுவியது பொருத்தமாக உள்ளது.

இராமாயண காலத்தையும், தற்காலத்தையும் இணைத்த காதலர்களான குறவன், குறத்தி காதல் என்றும் நீடிக்கும், இந்த சிலையைப்போல்...

# 48 மணிநேரம் காலக்கெடு:

# பேச்சுவார்த்தைக்கு வருமாறு ரஷ்யாவுக்கு உக்ரைன் அழைப்பு



## பைடன் - புட்டின் பேச்சு தோல்வி; தாக்குதலுக்கு நாள் குறித்த ரஷ்யா

உலக செய்திகள்

## 3ஆம் உலகப் போராக மாறும் அபாயம்; உக்ரைனுக்கான சர்வதேச விமானங்கள் இரத்து

உக்ரைன் எல்லையில் படைகளை குவித்திருப்பது தொடர்பாக அடுத்த 48 மணிநேரத்திற்குள் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா, ரஷ்யாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், வியன்னா பாதுகாப்பு ஒப்பந்தத்தின்கீழ் உக்ரைன் விடுத்த கோரிக்கைகளுக்கு ரஷ்யா பதிலளிக்க தவறிவிட்டதாக ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள அவர், இதன் விளைவாக தாங்கள் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தங்கள் நாட்டு எல்லையிலும், கிரீமியா பகுதியிலும் ரஷ்யா படைகளை வலுப்படுத்தி வருவது குறித்தும் அவற்றை திரும்பப்பெறுவது தொடர்பாகவும் விவாதிக்க முடிவு செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.


**பைடன் - புட்டின் பேச்சு தோல்வி**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் - ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இடையே நடந்த ஒரு மணிநேர பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதால், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கும் அபாயம் அதிகமாகியுள்ளது.

தனது அண்டைநாடான உக்ரைன், நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் ரஷ்ய ஜனாதிபதி புட்டின், உக்ரைன் மீது போர் தொடுக்கவும் தயாராகியுள்ளார். அந்த நாட்டைச் சுற்றி ஒரு இலட்சம் வீரர்களையும், நவீன ஆயுதங்களையும் குவித்துள்ளார். இதற்கு அமெரிக்காவும், நேட்டோ படைகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. உக்ரைன் மீது தாக்குதல் நடத்தினால், ரஷ்யா மிகப்பெரிய இழப்பை சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளன.

இந்நிலையில், உக்ரைன் மீது போர் தொடுப்பதற்கான திகதியை ரஷ்யா குறித்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாகவே உக்ரைனிலிருந்து அமெரிக்கர்களை வெளியேறும்படி அமெரிக்க ஜனாதிபதி பைடன் உத்தரவிட்டிருக்கிறார். இந்நிலையில், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கடைசிநேர முயற்சியாக, பைடனும், புட்டினும் தொலைபேசியூடாக ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும், இப்பேச்சுவார்தை தோல்வியைத் தழுவியுள்ளது.

உக்ரைனை நேட்டோ அமைப்பில் சேர்க்கக் கூடாது என்ற புட்டினின் கோரிக்கையை பைடன் நிராகரித்துவிட்டார். இதனால், உக்ரைன் மீது ரஷ்யா எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்துமெனத் தெரிகிறது. இதனால், பெரும் பதற்றம் நிலவுகிறது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்க, நேட்டோ படைகள் ரஷ்யாவை தாக்கினால், அது 3ஆம் உலகப் போராக மாறும் அபாயம் நிலவுகிறது. இந்நிலையில், பல்வேறு நாடுகளிலிருந்து உக்ரைனுக்கு இயக்கப்படும் விமானங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.




**எதற்கும் தயார்; பைடன் ஆவேசம்**

புட்டினுடன் நடத்திய பேச்சு தோல்வியடைந்த நிலையில், வெள்ளை மாளிகை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தினால், மனித இனத்துக்கு பெரும் உயிரிழப்பு ஏற்படும். இப்பிரச்சினையை துதரக ரீதியாக தீர்ப்பதற்கு அமெரிக்கா தயாராகவுள்ளது. அதையும் மீறி படையெடுத்தால், அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் இணைந்து ரஷ்யாவுக்கு மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தவும் தயார்நிலையில் இருப்பதாக பேச்சுவார்த்தையின்போது புட்டினிடம் பைடன் எச்சரித்தார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**48 மணிநேரத்திற்குள் பேச்சு**

தனது நாட்டு எல்லையில் தீவிரமாகிவரும் நெருக்கடி குறித்து விவாதிப்பதற்கான சந்திப்பொன்றை நடத்த ரஷ்யா மற்றும் வியன்னா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முக்கிய உறுப்புநாடுகளை உக்ரைன் அழைத்துள்ளது.

எல்லையில் படைகள் குவிக்கப்பட்டுள்ளது குறித்து விளக்கவேண்டும் என்றும் தாங்கள் அதிகாரப்பூர்வமாக விடுத்த வேண்டுகோள்களை ரஷ்யா புறக்கணித்துவிட்டதாக உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் திட்டத்தில் வெளிப்படைத்தன்மைக்காக அடுத்த 48 மணிநேரத்திற்குள் அந்நாட்டுடன் சந்திப்பொன்றுக்கு வேண்டுகோள் விடுப்பதே அடுத்த நடவடிக்கை என அவர் தெரிவித்தார்.

உக்ரைன் எல்லையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட படைவீரர்களை ரஷ்யா குவித்துள்ளதென்றாலும், ''படையெடுப்பதற்கான எந்த நோக்கமும் இல்லை'' என்று மறுத்துவருகின்றது.



உக்ரைனுக்காக போராட ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் 79 வயதான Valentyna Konstantynovska என்ற பெண்மணி....

ஆனால், ரஷ்யா இராணுவ நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக சில மேற்குலக நாடுகள் எச்சரித்துள்ளன. ரஷ்யா எந்தநேரத்திலும் வான்வழி குண்டுவீச்சுடன் படையெடுப்பை தொடங்கலாம் என அமெரிக்கா எச்சரித்து வருகிறது.

உக்ரைனிலிருந்து வெளியேற வேண்டும் என அமெரிக்கா, பிரித்தானியா உட்பட பத்திற்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் குடிமக்களை கேட்டுக்கொண்டுள்ளன. சில நாடுகள், தங்கள் தூதரக அதிகாரிகளையும் வெளியேற்றியுள்ளன.

ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்புநாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான ஒப்பந்தமான வியன்னா உடன்படிக்கையின் விதிமுறைகளின்படி, ரஷ்யாவின் நோக்கங்கள் குறித்து அந்நாட்டிடம் வெள்ளிக்கிழமை தாங்கள் பதில்களை கோரியதாக டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.

மற்ற நாட்டை அச்சுறுத்தும் வகையில், தங்கள் நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தக்கூடாது என்ற ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் விதிமுறை குறித்து ரஷ்யா அக்கறைகொள்ளுமானால், நெருக்கடியை மட்டுப்படுத்துவதற்காகவும், அனைவருக்குமான பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும், இராணுவ வெளிப்படைத்தன்மை குறித்த தன் கடமையை அந்நாடு நிறைவேற்ற வேண்டும்" என அவர் தெரிவித்தார்.

**உக்ரைன் ஜனாதிபதியை சந்தித்த ஜேர்மனி அதிபர்**

உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கியை(Volodymyr Zelensky) நேற்று ஜேர்மனி அதிபர் ஓலா்ஃப் ஸ்கால்ஸ் தலைநகர் கீவ்வில் சந்தித்து பேச்சுவார்ததை நடத்தியுள்ளார். மேலும், அவர் இன்று (செவ்வாய்க்கிழமை) ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் மொஸ்கோவில் சந்திப்பு நடத்தவுள்ளார்.

முன்னாள் ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்கலிடமிருந்து ஜேர்மனியின் தலைமைப் பொறுப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள ஓலா்ஃப் ஸ்கால்ஸ், எவ்வித படையெடுப்பை நிகழ்த்தினாலும், ரஷ்யா தீவிரமான பொருளாதார விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளார். இதன்மூலம், அவர் மற்ற மேற்குலக நாடுகள் மற்றும் நேட்டோ இராணுவ கூட்டணியின் உறுப்புநாடுகளின் கருத்துகளையே எதிரொலித்துள்ளார்.

**இராஜதந்திர ரீதியிலான பேச்சில் பொரிஸ்**

இதற்கிடையில் போரின் விளிம்பிலிருந்து ரஷ்யாவை திருப்பி அழைத்துவர ஐரோப்பா முழுவதும் புதிய இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் திட்டமிட்டுள்ளார்.



உக்ரைன் ஜனாதிபதி - ஜேர்மனி அதிபர் பேச்சு...

உக்ரைன் - நேட்டோ அமைப்பில் எப்போதும் சேர்க்கப்படக்கூடாது என்பது, ரஷ்யாவின் கோரிக்கைகளுள் ஒன்றாகவுள்ளது.

உக்ரைன் உள்ளிட்ட இறையாண்மைகொண்ட நாடுகள், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சோவியத் ஒன்றியத்துக்கு எதிரான நடவடிக்கையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட பாதுகாப்பு கூட்டணியின் உறுப்புநாடாக இணைவதற்கு விண்ணப்பிப்பது உட்பட தங்களுக்கானதை தாங்களே முடிவெடுத்துக்கொள்ளும் சுதந்திரம் கொண்டவை என நேட்டோ மற்றும் மேற்குலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

உக்ரைன் எல்லையில் துருப்புகளை நிலைநிறுத்தியுள்ளது தங்களின் சொந்த எல்லைக்குள் நிகழ்வது என ரஷ்யா வாதிடுகிறது.

ஞாயிற்றுக்கிழமை, ரஷ்யாவின் மூத்த வெளியுறவுக்கொள்கை அதிகாரி யூரி யுஷாகோவ், உடனடி படையெடுப்பு பற்றிய அமெரிக்க எச்சரிக்கைகள் குறித்து கூறுகையில், "அமெரிக்காவின் வெறி உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது" என்று விமர்சித்துள்ளார்.

## ஐ.நா. ஊழியர்கள் - வெளிநாட்டு ஊடகர்களை சிறைப்பிடித்த தலிபான்கள்



ஆப்கானிஸ்தானில் ஐ.நா. ஊழியர்கள், வெளிநாட்டு ஊடகவியலாளர்களை தலிபான்கள் சிறைப்பிடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். அப்போதுமுதல் அங்கு கடுமையான மனிதாபிமான நெருக்கடி நிலவி வருகிறது. இதனால் அந்நாட்டு மக்களுக்கு உதவும் வகையில் ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் ஊழியர்கள் அங்கு முகாமிட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், அந்த ஆணையத்துடன் இணைந்து பணியாற்றிவந்த 2 வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் ஆணையத்தின் ஊழியர்கள் பலரை தலைநகர் காபூலில் தலிபான்கள் நேற்று காலை சிறைப்பிடித்தனர். இது குறித்த செய்தி ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

எனினும், சிறைப்பிடித்த சில மணிநேரங்களுக்குப் பின்னர் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மற்றும் ஐ.நா. ஊழியர்களை தலிபான்கள் விடுதலைசெய்தனர்.

இதுகுறித்து தலிபான் அரசின் தகவல் மற்றும் கலாசார இணை அமைச்சர் ஜபிஹுல்லாஹ் முஜாகித் தெரிவிக்கையில்,

"ஐ.நா. ஊழியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களிடம் அவர்கள் யார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்கள் இல்லாததால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அவர்களின் அடையாளங்கள் உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டனர்" என கூறினார்.

## பாகிஸ்தானில் மீண்டும் பயங்கரம்:

# குர்ஆனை எரித்தவர் கல்லால் அடித்து படுகொலை

மறுபடியும் ஒரு கொடுமை பாகிஸ்தானில் அரங்கேறியுள்ளது. மனநலம் குன்றிய ஒருவரைக் கல்லாலேயே அடித்து கொன்றுள்ள சம்பவம் அந்த நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் இஸ்லாம் மதத்தைக் களங்கப்படுத்துவது பெரும் குற்றமாகக் கருதும் கடுமையான சட்டங்கள் அமுலிலுள்ளன. இதற்கு மரண தண்டனையும் விதிக்கப்படுகிறது. அதே நேரம், அந்நாட்டு பழைமைவாதிகளும், மக்களும் இந்தச் செயலில் ஈடுபடுபவர்களை தாக்கிக் கொல்லும் செயல் அதிகமாகி வருகிறது.

இஸ்லாம் சம்பந்தப்பட்ட போஸ்டரை கிழித்ததாக இலங்கையைச் சேர்ந்த ஒருவரை 300இற்கும் மேற்பட்டோர் அடங்கிய கும்பல் கடந்த டிசம்பரில் கொடூரமாகத் தாக்கி, உயிருடன் எரித்துக் கொன்றது. உலகளவில் இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில், அதேபோன்ற சம்பவம் மீண்டும் நடந்துள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஜங்கல் டேரா கிராமத்தில் முஸ்டாக் அகமது (வயது 41) என்பவர் குர்ஆனின் பக்கங்களை கிழித்து, தீ வைத்து எரித்ததாகக் கூறப்படுகிறது. சனிக்கிழமை தொழுகை முடித்து கூட்டமாக வந்த மக்கள், இதை கேள்விப்பட்டதும் அகமதுவை தாக்கத் தொடங்கினர். இதை தடுக்க வந்த பொலிஸாரையும் அவர்கள் தாக்கினர். பின்னர், அந்த அகமதுவை இழுத்துச்சென்று மரத்தில் கட்டிய கும்பல், சுற்றிநின்று கல்லால் தாக்கியது.

தாக்குதலுக்குள்ளான நபர் அலறித் துடித்தபோதும், இரக்கமின்றி தாக்குதல் தொடர்ந்தது.

அகமது கதறினார். ''நான் குர்ஆனை எரிக்கவே இல்லை. எரிக்கவே இல்லை, நான் நிரபராதி'' என்று துடிதுடித்து அழுதுகொண்டே சொன்னார். ஆனால், யாருமே அவர் பேச்சை கேட்கவில்லை. இதில் அகமது அங்கேயே துடிதுடித்து உயிரிழந்துவிட்டார்.

அதன் பிறகும், அவரை எரிக்க கும்பல் முயன்றது. பொலிஸார் அதை தடுத்தனர். இருப்பினும், உடலை மரத்தில் கட்டி கும்பல் தொங்கவிட்டது. அகமது சிறிது மனநிலை பாதித்தவர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பயங்கரமான சம்பவத்துக்கு பிரதமர் இம்ரான்கான் வேதனை தெரிவித்துள்ளதுடன்,

''சட்டத்தை பொதுமக்கள் கையில் எடுத்துக்கொள்வதை தன்னுடைய அரசு ஒருபோதும் சகித்துக்கொள்ளாது. மேலும், இந்தக் கொலைச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமாறு பொலிஸாருக்கு இம்ரான் கான் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து பஞ்சாப் காவல்துறை தலைவரிடம் அறிக்கை கேட்டுள்ளதாகவும் தன்னுடைய ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். தாக்குதல் தொடர்பாக 62 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.



**''நான் குர்ஆனை எரிக்கவே இல்லை... நான் நிரபராதி''**
**- துடிதுடித்த ஆன்மா**



# ஐ.பி.எல். மெகா ஏலத்தில் நடைபெற்ற சுவாரஸ்யமான சம்பவங்கள்







### ஏலத்தில் 204 வீரர்கள் கொள்வனவு

15 ஆவது இந்தியன் ப்ரீமியர் லீக் தொடருக்கான மெகா ஏலத்தில் 590 வீரர்கள் இடம்பெற்ற நிலையில் முதல் நாள் ஏலத்தில் 74 பேரும், இரண்டாம் நாள் ஏலத்தில் 130 பேரும் என மொத்தம் 204 வீரர்கள் வாங்கப்பட்டனர். 10 அணிகளும் இதற்காக ரூ. 551 கோடியே 70 இலட்சத்தை செலவிட்டுள்ளன.

### தசாப்தத்திற்கு பின்னர் ஐந்து இலங்கை வீரர்கள்

2022ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரின் மெகா ஏலத்தின்போது தசாப்தத்திற்குப் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் 5 வீரர்கள் 5 வெவ்வேறு அணிகளினால் கொள்வனவு செய்யப்பட்டனர்.

ஏலத்தின் முதல் நாளான சனிக்கிழமை மயன்று சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க பலத்த போட்டிக்கு மத்தியில் ரூ. 10.75 கோடிக்கு ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியால் கொள்வனவுசெய்யப்பட்டார். ஐ.பி.எல். வரலாற்றில் இலங்கை வீரர் ஒருவர் ரூ. 10 கோடிக்கும் அதிகமான விலையில் ஏலம் போனது இதுவே முதல் முறையாகும்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் நாளான நேற்று முன்தினம் இலங்கையின் மேலும் 4 வீரர்கள் கொள்வனவு செய்யப்பட்டனர். வேகப்பந்துவீச்சாளர் துஸ்மந்த சமீர ரூ. 2 கோடிக்கு புதிய அணியான லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணியால் எடுக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து சுழற்பந்துவீச்சாளர் மஹேஸ் தீக்ஷன, நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் ரூ. 70 இலட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டார். இறுதித் தருணத்தில் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியால் ரூ. 50 இலட்சத்திற்கும், அதிரடி துடுப்பாட்ட வீரர் பானுக்க ராஜபக்ஷ பஞ்சாப் கிங்ஸ் அணியால் ரூ.50 இலட்சத்திற்கும் ஏலம் எடுக்கப்பட்டனர்.

### அதிக விலைக்கு ஏலம் போன இஷான் கிஷன்

2022 மெகா ஏலத்தில் அதிகபட்ச தொகைக்கு ஏலம் வாங்கப்பட்ட வீரர் என்ற சிறப்பை மும்பை இந்தியன்ஸ் அணியால் ரூ. 15.25 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்ட இஷான் கிஷன் பெற்றார். கடந்த சில காலங்களாக மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடிவரும் ஜோர்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 23 வயது இளம் விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரரான இஷான் கிஷனை மும்பை இந்தியன்ஸ் அணி விடாமல் போட்டிபோட்டு ஏலம் எடுத்தது.

### அதிக விலைக்கு ஏலம் போன டொப் 3 வீரர்கள்

இஷான் கிஷனை அடுத்து இளம் பந்துவீச்சாளர் தீபக் சஹார் ரூ. 14 கோடிக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் ஏலத்தில் வாங்கப்பட்டார். இதன்மூலம் இந்த மெகா ஏலத்தில் இரண்டாவதாக அதிக தொகைக்கு வாங்கப்பட்ட வீரர் என்ற சிறப்பைப் பெற்றார் தீபக் சஹார். கடந்த சீசனில் சென்னை அணியில் இடம்பெற்றிருந்த சஹாரை இம்முறை வாங்க டெல்லி, ராஜஸ்தான் அணிகள் முயன்றபோதிலும், சென்னை அணி அதிக தொகை கொடுத்து வாங்கியது.

மூன்றாவது அதிகபட்ச தொகைக்கு வாங்கப்பட்ட வீரர் என்ற சிறப்பை துடுப்பாட்ட வீரர் ஷ்ரேயஸ் ஐயர் பெற்றார். அவர் ரூ. 12.25 கோடிக்கு கொல்கத்தா அணியால் வாங்கப்பட்டார். டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவராகவும் ஷ்ரேயஸ் ஐயர் செயற்பட்டிருந்தார்.

### 2021இல் ரூ. 75 இலட்சம், 2022இல் ரூ. 11.5 கோடி

இங்கிலாந்து அணியின் அதிரடி சகலதுறை வீரர் லியாம் லிவிங்ஸ்டனைத் தெரிவுசெய்ய கடும் போட்டி நிலவியது. ரூ. 11 கோடியைத் தாண்டிய பிறகும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் இடையே போட்டி இருந்தது. இறுதியில் ரூ. 11.50 கோடிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணி லிவிங்ஸ்டனைத் தெரிவுசெய்தது. கடந்த வருடம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியால் வெறும் ரூ. 75 இலட்சத்திற்கு ஏலத்தில் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ரூ. 10.75 கோடியில் நான்கு வீரர்கள்

இந்திய வேகப்பந்துவீச்சாளர் ஷர்துல் தாகூர் டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியாலும், இலங்கையின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க மற்றும் இந்திய வேகப்பந்துவீச்சாளர் ஹர்ஷல் பட்டேல் ஆகியோர் ரோயல் செலஞ்சர்ஸ் அணியாலும், மே.இ. தீவுகள் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் நிக்கோலஸ் புரன் சன்ரைசர்ஸ் அணியாலும் வாங்கப்பட்டனர்.

### ரூ. 10 கோடியில் இரு வீரர்கள்

குஜராத் டைட்டன்ஸ் சார்பில் நியூசிலாந்து வீரர் லொக்கி பெர்குஸன், ராஜஸ்தான் ரோயல்ஸ் சார்பில் இந்திய வேகப்பந்துவீச்சாளர் பிரசித் கிருஷ்ணா ஆகியோர் தலா ரூ.10 கோடிக்கு வாங்கப்பட்டனர்.

### எதிர்பாராத தொகைக்கு ஏலம் போன வீரர்கள்

ரூ. 40 இலட்சம் அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்ட ராகுல் திவாதியா ரூ. 9 கோடிக்கு குஜராத் அணியாலும், ஷிவம் மாவி ரூ.7.25 கோடிக்கு கொல்கத்தா அணியாலும், தமிழக வீரர் ஷாருக் கான் ரூ. 9 கோடிக்கு பஞ்சாப் அணியாலும், ராகுல் திரிபாதி ரூ. 8.5 கோடிக்கு ஹைதராபாத் அணியாலும் விலைக்கு வாங்கப்பட்டனர்.

### ஏலம் போகாத நட்சத்திர வீரர்கள்

நட்சத்திர வீரர்களான சுரேஷ் ரெய்னா (இந்தியா), ஸ்ரீவன் ஸ்மித் (ஆஸி.), ஷகிப் அல்-ஹசன் (பங்களாதேஷ்), ஆதில் ரஷீட் (இங்கிலாந்து), முஜீப் உர் ரஹ்மான் (ஆப்கானிஸ்தான்), இம்ரான் தாஹிர் (தெ.ஆபிரிக்கா), அடம் ஸம்பா (ஆஸி.), அமிட் மிஷ்ரா (இந்தியா), டேவிட் மலான் (இங்கிலாந்து), மார்னஸ் லபுஷேன் (ஆஸி.), ஒயின் மோர்கன் (இங்கிலாந்து), சவுரவ் திவாரி (இந்தியா), ஆரோன் பிஞ்ச் (ஆஸி.), செட்டிஷ்வர் புஜாரா (இந்தியா), இஷாந்த் ஷர்மா (இந்தியா), ஷெல்டன் காட்ரெல் (மே.இ.தீவுகள்), தப்ரிஷ் ஷம்சி (தெ.ஆபிரிக்கா), ஈஷ் சோதி (நியூசிலாந்து), பியுஷ் சாவ்லா (இந்தியா), பென் மெக்டெர்மாட் (ஆஸி.), ஆண்ட்ரூ டை (ஆஸி.), மார்டின் குப்டில் (நியூசிலாந்து), பென் கட்டிங் (ஆஸி.), ரோஸ்டன் சேஸ் (மே.இ.தீவுகள்), தவல் குல்கர்னி (இந்தியா), கேன் ரிச்சர்ட்சன் (ஆஸி.), மோய்சஸ் ஹென்ரிக்ஸ் (ஆஸி.) உள்ளிட்ட பலர் விலைபோகவில்லை.

### வரலாற்று சாதனை படைத்த ஆவேஷ் கான்

ஐ.பி.எல். வரலாற்றில், தேசிய அணிக்காக விளையாடாமல் மிக அதிக தொகைக்கு ஏலம் போன வீரர் என்ற பெருமை ஆவேஷ் கானுக்கு கிடைத்துள்ளது. அவரை புதிய அணியான லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் ரூ. 10 கோடிக்கு வாங்கியது.


### முதல் முறையாக ரூ. 10 கோடிக்கு மேல் செலவிட்ட சி.எஸ்.கே.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதல் முறையாக ஒரு வீரரை வாங்க ரூ. 10 கோடிக்கு அதிகமான தொகையை செலவிட்டுள்ளது. அந்த அணி வேகப்பந்துவீச்சாளர் தீபக் சாஹரை ரூ. 14 கோடிக்கு வாங்கியது.

### மீண்டுவந்த ஏலதாரர் ஹியு எட்மீட்ஸ்

ஐ.பி.எல். மெகா ஏலத்தின் முதல் நாளில் வீரர்களை ஏலம் விட்டுக்கொண்டிருந்த ஹியு எட்மீட்ஸ் திடீரென மயங்கி விழுந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவருக்குப் பதிலாக ஏலத்தை தொடர்ந்த வர்ணனையாளர் சாரு ஷர்மா, 2ஆம் நாளிலும் பெரும்பாலான நேரத்துக்கு ஏலத்தை நடத்தினார். குறைந்த இரத்த அழுத்தம் காரணமாக மயங்கிய எட்மீட்ஸ், நேற்று முன்தினம் இரவு ஏலம் முடிவதற்கு சற்று முன்பாக அரங்குக்கு வந்தபோது அனைவரும் எழுந்து நின்று கை தட்டி அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பழைய உற்சாகத்துடன் எட்மீட்ஸ் ஏலத்தை நடத்தியது பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

**தொகுப்பு: ஏ.அகீல் சிஹாப்**



## மூன்றாவது தங்கம் வென்றார் நோர்வேயின் ரைஸ்லேண்ட்

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் மூன்றாவது தங்கம் வென்று அசத்தினார் நீ நோர்வேயின் ரைஸ் லேண்ட். அதேநேரத்தில் பிரான்ஸின் குயின்டன் பிலோன் மெயில்லெட் ஆண்களுக்கான 12.5 கி.மீ. பர்ஸ்யூட் வெற்றியுடன் இரண்டாவது தங்கத்தைத் தட்டிச் சென்றார்.

பெண்களுக்கான 7.5 கி.மீ. ஸ்பிரிண்ட், கலப்பு ரிலே 4.6 கி.மீ. போட்டிகளில் வெற்றிபெற்ற பிறகு, ஜோங்ஜியாகோ நேஷனல் பயத்லான் மையத்தில் 34 நிமிடம் 46.9 விநாடிகளில் பர்ஸ்யூட் போட்டியில் முதலிடம் பிடித்து மூன்றாவது தங்கத்தை அணிந்தார். பத்து முறை உலக சம்பியனான ரைஸ்லேண்ட் தொடக்கத்திலிருந்து இறுதி வரை முன்னிலை வகித்தார், ஒரு நிமிடத்திற்கு மேல் வெற்றிபெற்றதால், ஒரே ஒரு துப்பாக்கிச்சூடு பெனால்டியை மட்டுமே பெற்றார்.

சுவீடனின் ஹன்னா ஒபெர்க் 36:23.4 என்ற விநாடிகளில் ரைஸ்லேண்டிற்குப் பின்னால் இரண்டாம் இடத்தைப் பிடித்ததன் மூலம் விளையாட்டுப் போட்டியில் தனது இரண்டாவது வெள்ளியைப் பெற்றார். இந்த சீசனில் ஃபார்மிற்காக போராடிய நோர்வேயின் டிரில் எக்ஹாஃப் கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் 36:35.6 விநாடிகளில் வெண்கலத்தைக் கைப்பற்றினார்.

பியோங்சாங் 2018இல் இரண்டு வெள்ளிகளைப் பெற்ற ரைஸ்லேண்ட் பீஜிங்கில் மூன்று தங்கப் பதக்கங்களைச் சேர்த்தார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## இலங்கையுடனான தொடரிலிருந்து வெளியேறும் ஸ்மித்



இலங்கை அணியுடனான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியின்போது உபாதைக்குள்ளான ஆஸி. அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஸ்ரீவ் ஸ்மித் எஞ்சிய போட்டிகளிலிருந்து விலகியுள்ளார்.

சிட்னியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மஹேஸ் தீக்ஷன அடித்த சிக்ஸர் ஒன்றினை ஸ்மித் தடுக்க முயன்றிருந்தார். எனினும், குறித்த முயற்சி தோல்வியடைந்து அவருக்கு தலை உபாதை ஏற்பட்டிருந்தது. இந்த உபாதையினைத் தொடர்ந்து ஸ்ரீவ் ஸ்மித் மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டதோடு, அவருக்கான மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில், ஸ்ரீவ் ஸ்மித்தின் உடல்நிலை தொடர்பில், தற்போது வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் இது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

மேலும் தலையில் ஏற்பட்ட உபாதையிலிருந்து ஸ்ரீவ் ஸ்மித் குணமடைந்து வருவதாகவும், அது பூரண குணமடைவதற்கு இன்னும் 6-7 வரையிலான நாட்கள் தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அட்டாளைச்சேனை ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தின் சுற்றுப் போட்டியும், சீருடை அறிமுகமும்



*(ரியாஸ் இஸ்மாயில்)*

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயின் நெறிப்படுத்தலின் மூலம் அட்டாளைச்சேனை ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு அண்மையில் அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை ஹீரோஸ் விளையாட்டுக் கழத்தின் தலைவர் ஏ.எச்.ஹம்சா சனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயின் பிரதம ஆலோசகரும், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான கல்விநாதம் எஸ்.எல்.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இவ்வாண்டு உதைபந்தாட்ட வீரர்களுக்கான புதிய சீருடையினை கழக வீரர்களுக்கு வழங்கி அறிமுகம் செய்துவைத்தார்.

இதன்போது அட்டாளைச்சேனை, பாலமுனை, அக்கரைப்பற்று வை.எம்.எம்.ஏக்கள் இணைந்து நடத்தும் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இரண்டாம் நாள் போட்டியில் அட்டாளைச்சேனை ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் அட்டாளைச்சேனை ஏ.சீ.சீ. கழகம் விளையாடின. இதில் ஏ.சீ.சீ. கழகம் 3 கோல்களையும், அட்டாளைச்சேனை ஹீரோஸ் கழகம் 2 கோல்களையும் அடித்தன.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7